


ஸப்தகிரி


விலை ரூ. 1/

செப்டம்பர், 1986

திருமலை திருப்பதி தேவஸ்தான சமய மாத இதழ்

பிள்ளையார் சதுர்த்தி சிறப்பு இதழ்





உருகும அடியாா உளளூற உள்ளே
        ஊறும் தேனே வருக
உண்ணத தெவிடடாச சிவானந்த
        ஒளியே வருக புலன் வழி போய
திருகும் உள்ளத்தாா நினைவினுக்கு சேயோய் வருக
        எமை ஆணட செலவா வருக இணைவிழியால
பருகும் அமுதே வருக உயிர்ப்பைஙகூழ
        தழைக்கக் கருணை மழை
பரபபும முகிலே வருக நறும்பாகே
        வருக வரை இழிதத
முருகவேட்கு முன்உதித்த
        முதலவா வருக வருகவே.

—*செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்.*

செப்டம்பர், 1986

ஸப்தகிரி

இதழ் 4 மலர் 17

தனிப்பிரதி ரூ. 1 வருடச் சந்தா ரூ. 12

உள்ளுறை

அட்டைப்பட விளக்கம்

முனனட்டையில்	விநாயகர். —சித்திரம் R. B. பாபுநாத்-திருப்பதி.
2-வது	திருமலை பிரம்மோற்சவம் : துவஜாரோஹணம்.
3-வது	திருமலை பிரம்மோற்சவம்—கருடசேவை.


சிறப்பாசிரியர் :
திரு. எஸ். லக்ஷ்மிநாராயண I.A.S.,
செயலாட்சித் தலைவர்,
தி.தி.தேவஸ்தானம், திருப்பதி.

அச்சிடுபவர்
திரு. எம். விஜயகுமார் ரெட்டி,
மேலாளர்,
தி.தி. தேவஸ்தான அச்சகம்,
திருப்பதி.

ஆசிரியர் :
திரு. கே. சுப்பாராவ், எம்.ஏ.

துணையாசிரியர்:
திரு. என். எஸ். ராமமூர்த்தி, எம்.ஏ.,

பிரதிகளுக்கு :
THE WELFARE OFFICER
Publication Section, T.T.D.
K. T. Road,
TIRUPATI.



உங்களுடன் . . . .

சிரிக்கத் தெரிந்தவன் வாழக்கையை அனுபவிககத் தெரிந்தவனுகக் கருதப்படுகிறுன் அவ்வாறு சிரிக்க வைப்பவன் சிந்திக்கத் தெரிந்தவனுக இருப்பான். இங்குச் சிரிப்பு என்பது உள்ளத்தை உவகையில் குளிர வைத்து, அறிவினை விரிவுபடுத்துவதேயாகும். இதனை மனதிற்கொண்டுதான் அ றைய அரசர்கள் 'விதூஷகர்'களை தங்கள் அருகு வைத்துக் கொண்டார்கள். அவர்கள் மன்னனை சிரிக்க வைத்து, சிந்திக்க வைத்தனர். ஆயகலைகள் பல கற்று, அறிஞர் பெருமக்களாக அவர்க திகழ்ந்தார்கள். ஆகவே சிரிப்பு என்பது ஏளனத்தின் எதிரொலியோ, கோமாளித்தனத்தின் மறு பக்கமோ அல்ல. தன் செய்கையால், தன் பேச்சால், ஏன் தன் உருவத்தாலும் மற்றவரை சிரிக் வைக்கலாம். இம்மூன்றினையும் தன்னிடம் கொண்டு ஜாத பேதமின்றி, இன வேறுபாடின்றி, சம பாகுபாடின்றி வழிபடப் பெற்று, 'கொண்டதே உருவம்' தனதென்று, ஆலமரம் எனறும் ஆற்றஙகரை என்றும் தனக்கென ஒரு குறிப்பிட்ட இடம் எனக்கொள்ளாது 'யாதும் இருப்பிடமே எங்கும் நானே என்ற வகையில் திகழ்ந்து, யானை தலையையும், பேழை வயிற்றையும், குறுகிய கால்களையும், சிறி வாகனத்தையும் கொண்டு கண்டவரைச் சிரிப்பிலாழ்த்திவ நம் தெய்வம் கானகபதியான கணபதியாவார் அவர் இப்படித்தான் தோனறினுர் என்பதற்குப் பல கதைகள, இவ்வாறெல்லாம் புரிந்தார் என்பதற்கு பல சாகசங்கள்; இப்படியெலலாம் இருப்பார் என்பதற்குப பல உருவமைதிகள்: அஙகிங்கெனுதபடி எங்குப் நிறைந்து, வடநாடு தென்னுடு மட்டுமன்றி, கடல் கடந்து கீழை நாடுகளிலும், மத்திய அமெரிக்க மற்றும் மெக்ஸிகோ நாட்டிலும் தனக்கென ஒரு இடம் கொண்டு, தனக்கென ஒரு வழிபாட்டு முறை யினையும் தோற்றுவித்த விநயகரின் பெருமை சொல்லிமாளாது.

தன்னைப் பெற்றவரும், தன் உற்றவரும் விண்முட்டும் கோபுரஙகளைக் கொண்ட கோயில்களைத் தமதாக்கிக் கொள்ள, அங்கெல்லாம் இவர் மட்டும் தனித்து ஒரு மூலையில் இருந்தாலும், தன்னை வணங்கிய பின்பே அவர்களை வழிபடச் செய்யும் சிறப்பு இவர் ஒருவருக்கே உரியது. ஒரு பிடி மஞ்சளிலோ, சாணத்திலோ தன்னைத் திடீர் கடவுளாக உருவாக்கிக் கொள்ளும இவர், ஒரு யானைத் தலையைத் தன் தலையாகக் கொண்டு வாலறிவின் பெருமையையும், ஓங்காரத்தின் சிறப்பினையும் பறை சாற்றி, அகன்ற காதுகளைக் கொண்டு தன் அறிவின் மாட்சிமையினைத் தெரிவித்துப் பக்தர்களின் குறை கேட்கும் சாந்த ஸ்வரூபியாகவும் விளங்கி, பேழை வயிறு மூலம் இவ்வண்டம் தன்னுள் அடக்கம் என் பதைக் காட்டி, ஐங்கரம் கொண்டு அன்பர்களுக்கு அபயம் அளித்து, உயிர்களை அதனதன் உருவங்களைக் கொண்டு எடை போடலாகாது என்பதற்கும், தீய குணங்களை விட்டொழிந்தால் உலகம் ஒருவனை மதிக்கும் என்பதற்கும் பிராணிகளில் சிறியதும், எப்போதும் தீமையே புரிந்து கொண்டிருக்கும் எலியினைத் தன் வாகனமாகக் கொண்டு, தியாகத்தின் பலன் அறத்தின் உயர்வு என்பதற்குத் தன் உருவததிற்கு அழ கூட்டும் தந்தத்தையே ஒடித்து நின்று, தெய்வத்தின் தெய்வமாக விளங்குபவர் 'ப்ரணவ ஸ்வரூபியான' நமது பிள்ளையார்.

தனக்கும் அரசனுன வரேண்யாவுக்கும் நடந்த உரையாடலான தன் கீதை மூலம் யோகத் தின் பெருமை பேசி, அணுகுவதற்கும், அடிபணிவதற்கும் எளிதாக விளங்கி, அருகம் புல்லினைக் கொண் டேனும் தனனை அணு அளவு பக்தியுடன் அர்ச்சித்தால் தண்ணருள் தர சித்தமாக இருக்கும் 'ஜ்யேஷ்ட ராஜன்' என்றும் 'ப்ரும்மணஸ்பதி' என்றும் புகழப் பெறும் ''துங்கக்கரி முகத்துத் தூமணி''யின் பெருமை வியத்தற்குரியது.

இத்தகு சச்சிதானந்த ஸ்வரூபியான, குணங்கடந்த, தேகங்கடந்த, காலம் வென்ற மூத் தொழில் புரியும் இவ்வேத நாயகனின் அருமை பெருமைகளை, நாடே கொண்டாடும் தேசிய விழாவான வரும் சதுர்த்தி நாளன்று, நினைவு கூர்ந்து, நம்மிடையே உயர்வு தாழ்வுகள் அகன்ருேடிட, வீடும் நாடும் பொலிவுற தோளோடு தோள் சேர்ந்து, நாளும் அவனடி பணிந்தேத்துவோமாக!

செய்திச் சுருக்கம்

தேசிய மாணவ சேவைககுழு :

அண்மையில் திருமலையில ஆநதிர மாநிலம் மற்றும் தமிழ் நாட்டைச் சேர்ந்த 380 பல்கலைக கழக மாணவியர்கள் (தொணடர்கள்) உதவியால் திருமலையில் தி. தி. தேவஸ்தானத தாரின் காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் ஒரு இலட்சம் செடிகள் பாலதீன் பைகளில போடபபடடும் சுமாா 20 ஏக்கர் நிலப்பரபபு நிலம் சமன் செய்தலும்,அங்குப் புல் பரப்புதலும் நடைபெறறன. இப்பணி சுமார் 8 நாட்கள் நடைபெறறது. மேலும் 43 மாணவிகள திருமலை தி. தி. தே. அஸ்வினி மருத்துவமனையில ரத்த தானம் செய்தனர். இது சமபநதப்பட்ட 'பிரிவு வாழ்த்துரை' விழாவில் தி. தி. தே இணை செயலாட்சித் தலைவர் திரு. வை. சக்ரதார ராவ், தலைமை காடு பாதுகாப்பு அலுவலர் திரு. எம். பாபு, திருப்பதி மகளிர் பல்கலைக கழகத்தின துணை வேந்தர் திருமதி. பேராசிரியை வனஜா ஐயங்கார், ஆந்திர மாநில வனத்துறை மற்றும் திரைப்பட வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. ஏ. மஹிபால் ரெட்டி மற்றும் பல பிரமுகர்கள் கலந்து கொணடனா.

தடுப்பு அணைககட்டுகள :

மழைக் காலத்தில் திருமலையிலிருந்து விழுநது வீணுகும் நீரினை திருமலையிலேயே தடுக்கும் வகையில் அங்கு மூனறு தடுப்பு அணைககட்டுகள் ரூ. 2 கோடி செலவில் கட்டப்படும். இதனல் திருமலையில் காடு வளர்ப்புத் திடடத்தினை வெற்றிகரமாக அமுலாக்கவும், திருப்பதி கபில தீர்த்தத்தில் (ஆழ்வார் தீர்த்தம்) வருடம் முழுவதும் அருவி நீர் விழும்படியாகவும் உதவும்.

மற்றைய செய்திகள் :

திருப்பதி ஸ்ரீ தியாகராஜ சுவாமி கோயில் அறநிறுவனத்திற்கென 'ஸ்ரீ தியாகராஜர்' விக்ரகம் ஒன்றினைச் செய்வதற்கு தி. தி. தே. மேலாண்மை ரூ. 12,000/- அளித்துள்ளது.

∴ ∴ ∴

திருப்பதியில் ஸ்ரீ வேஙகடேஸ்வரா ரூயா அரசு மருத்துவமனையில் 'பி' பிரிவில் 5 சிறப்பு அறைத் தொகுதிகளைக் கடடுதற்கு தி. தி. தே. ரூ. 2 இலடசம வழங்கியுள்ளது

∴ ∴ ∴

திருமலையில் எஸ். வி. உணவகத தினை மேலும் ஒராணடிற்கு 10 சத விகித வாடகை உயர்வுடன் 'உட்லேண்டஸ்' எனும் தனியார் நிறுவனத்திறகு அளிப்பதென தி.தி.தே. மேலாண்மை முடிவு செய்துள்ளது.

∴ ∴ ∴

ஏாபேடு ஆஸ்ரமத்தைச் சாாந்த மலையாள சுவாமி ஆஸ்ரமததிற்கென திருமலையில் 'கோகர்பம்' அருகே இட ஒதுக்கீடு தருவதென தி. தி. தேவஸ்தானம் தீர்மானித்துள்ளது.

∴ ∴ ∴

திரு. ரங்கனுத ஐயங்கார் குமாரர் திரு. ஆர். சம்பத் நாராயணன் அவர்களால், செங்கை மாவட்டம் மதுராந்தகம் தாலுககாவில் மேலவளம் கிராமத்தில் நன்கொடையாக அளிக்கப்பட்ட 12 செண்ட் நிலத்தை ஏற்றுக் கொள்வதென்று தி. தி. தே. தீர்மானித்துள்ளது.

∴ ∴ ∴

இனிமேல் தி. தி. தேவஸ்தானத் தாரால் தயாரிக்கப்பட்ட ஸ்ரீ வேங்கடேஸ்வரர் மற்றும ஸ்ரீ பத்மாவதித் தாயார் திருவுருவஙகளைக் கொண்ட தங்கப் பதக்கங்களை திருப்பதியில் உள்ள தி. தி. தே. அலுவலகக் கட்டிடத்தில் உள்ள விற்பனைப் பிரிவு, திருமலைக் கோயிலின் உட்புறம், திருமலை 'லேபாக்ஷி எம்போரியத்திற்கு' அருகே உள்ள தி. தி. தே. நூல் வெளியீடு அங்காடி, திருமலை எஸ். வி. விருந்தினர் விடுதி ஆகிய இடங்களில் மட்டுமே விற்பதென்று தி. தி. தே. முடிவு செய்துள்ளது.

∴ ∴ ∴

திருமலையில் ரூ. 2.25 கோடி செலவில் 'தி. தி. தே. வராக சுவாமி தர்ம சத்திரம்' ஒன்று கட்டப்படும்.

∴ ∴ ∴

சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த பேராசிரியர் பி. பி. சுந்தரேசன் அவர்களுடைய கருத்துப்படி, திருமலை 'சுவாமி புஷ்கர்ணி'யை ரூ. 74.5 இலட்சம் செலவில் தூய்மைப் படுத்துவதென்று தி. தி. தே. தீர்மானித்துள்ளது.

∴ ∴ ∴

திருப்பதியில் உள்ள தி. தி. தேவஸ்தானத்தாரின் ஸ்ரீபத்மாவதி மகளிர்க் கல்லூரியில் புதுமுக வகுப்பு நிலையில் Computer பாடத் திட்டத்தினையும், புதுதில்லியில் உள்ள தி. தி. தேவஸ்தானத்தாரின் கலைக்கல்லூரியில் புதுமுக வகுப்பு நிலையில் Computer, புகைப்படவியல், Electronics, கடிகாரங்கள் பழுது பார்க்கும் துறை முதலியவற்றை புகுத்துவதென்று முடிவு செய்யப் பட்டுள்ளது.

∴ ∴ ∴

திருமலையில் போலவே, திருப்பதியிலும் தி. தி. தேவஸ்தானத்தாரின் ஸ்ரீ கோவிந்தராஜ சுவாமி கோயில், ஸ்ரீராமர் கோயில், ஸ்ரீ கபிலேஸ்வர சுவாமி கோயில், திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் கோயில், மங்காபுரம் ஸ்ரீ கல்யாண வேங்கடேஸ்வரா சுவாமி கோயில் ஆகிய இடங்களில் பக்தர்களின் காலணிகளை இலவசமாக பார்த்துக் கொள்ளும் வகையில் 'பாதுகாப்பு கூண்டுகள்' திறக்கப் படும்.

∴ ∴ ∴

திருப்பதியில் உள்ள 'ஸ்ரீ பாலாஜி உடல் ஊனமுற்றோர் மருத்துவ மனை'யில் நோயாளிகளின் படுக்கை எண்ணிக்கை 50லிருந்து 100 ஆக உயர்த்தப்பட உள்ளது.


*

பிள்ளையார்பட்டி பிள்ளையார்

"சீதக்களபச்
செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு
பல இசை பாடப்
பொன் அரை ஞாணும
பூந்துகிலாடையும்
வண்ண மருங்கில்
வளர்நதழ கெறிப்பப்
பேழை வயிறும
பெருமபாரக் கோடுப
வேழமுகமும்
விளங்கு சிந்தூரமும
அஞ்சு கரமும்
அங்குச பாசமும்
நெஞ்சில குடிகொணட
நீலமேனியும
நான்ற வாயும்
நாலிரு புயமும்
மூன்று கண்ணும
மும்மதச சுவடும்
இரண்டு செவியும்
இலஙகு பொன்முடியும
திரணட முப்புரிநூல
திகழொளி மார்பும்
அற்புதம நிறைநத
கறபகக் களிறே......"

என, எளிய தமிழில், இனிய நடையில், விநாயகப் பெருமானின் திருக்கோலத்தை, நம் மனத்தில் பதியும் வண்ணம் தமது 'விநாயகர் அகவலில்' பாடி மகிழ்ந்துள்ளார் தமிழ்ப் பாட்டியாம் அவ்வை மூதாட்டி.

"ஐந்து கரத்தினை
ஆனைமுகததனை
இந்தின இளம்பிறை
போலும எயிறறினை
நநதி மகனதனை
ஞானக் கொழுந்தினைப்
புந்தியில வைத்தடி
போற்றுகினறேனே"



எனறு விநாயகப்பெருமானின் திரு உருவத்தினை வர்ணிககிறார் திருமூலா.

இதுபோன்று சைவ சமயக் குரவர்களும், தமிழ்ப் புலவர்களும் விநாயகரைப்பற்றி பக்திரசம் சொட்டச் சொட்டப் பாடி மகிழ்ந்திருக்கிறார்கள். அவற்றை நாமும் பாடியும், கேட்டும் மகிழ்கின்றோம். தமிழகத் திருக்கோவில்களிலும் ஆற்றங்கரை ஓரத்திலும், அரசமர நிழலிலும் வீற்றிருக்கும் விநாயகரை, 'விக்கினம்' அகல வழிபடுவது நமது மரபு. எனவே விநாயகர் என்ற திருநாமம் நம் செவியில் விழுந்ததும் நம நினைவுக்கு வருவதும் கண்ணுக்குத் தெரிவதும் 'ஐநதுகரத்தான்' 'ஆனைமுகத்தான்', என அனைவராலும் அழைககப்படும் நானகு திருக்கரங்களும், துதிக்கையுடன் கூடிய யானை முகமே.

இதற்கு விதி விலக்காக வித்தியாசமாக இரண்டு திருக்கரங்களுடன் மட்டுமே, வேழமுகத்து விநாயகப் பெருமான் தமிழகத்தில் ஓரிடத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறா என்றால் "உண்மையாகவா!" என்ற ஐயப்பாடு உஙகளை அறியாமலேயே உங்கள் உள்ளத்தில் எழுகிறதல்லவா! ஆம். உண்மையாகததான.

அவரைத் தரிசிக்க விரும்பினால், தமிழ்நாட்டில், இராமநாதபுரம் மாவட்டத்தில காரைககுடி என்ற நகரை அடுத்த குன்றககுடியிலிருநது மேற்கே, தறபோது பிள்ளையாாபட்டி எனறழைக்கபபடும் ஊருக்கு வருகை தாருங்கள். அத்திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள, கறபக விநாயகா 'பிள்ளையாா' எனற செலலப பெயருடன் எபபடிக காட்சியளிககிறாா தெரியுமா? இந்த விநாயகரது துதிக்கை வலம்புரி விநாயகா என்ற பெயரைத் தேடித்தருகிறது. எலலா இடததிலும நானகு திருக்கரஙகளால் ஆட்சி செயபவர் இஙகு இரணடே திருக்கரஙகளால விண்ணையும் மண்ணையும் ஆடசிககுக கொணடு வநதுவிடுகிறார். அஙகுசமும் பாசமும் இல்லாமலேயே அடியவரை ஆட்கொள்ளும் சக்தி உடையவராக இருககிறாா. வயிற்றை ஆசனத்தில் படியவிடாமல், ஆத்த பத்ம ஆசனத்திலேயே காலகளை மடித்திருக்கச் செயது கொள்ளுகிறாா. வலக்கரத்தில் மோதகம் தாங்கி இடக்கரததை இடையில் பொருநதிய பெருமிதத தோற்றத்தோடு காட்சி கொடுக்கிறாா.

இநதத் திருக்கோலத்தில, அதுவும ஒரு குடைவரைக் கோயிலில் உள்ள பிள்ளையார் ஏன் மற்றத் தமிழ் நாட்டுப் பிள்ளையார் திரு உருவங் களிலிருந்து வேறுபட்டிருக்கிறார் என்

திருமதி கமலா மாரியபபன்
கோயம்புததூர்.

றறிய தென்னாட்டு வரலாற்றைச் சற்றுப் பின்னோக்கி ஆராய்ந்து பார்த்தால் அதற்கான காரணம் இதோ இப்படித்தான் இருக்கும்.

பல்லவ மன்னன் மகேந்திரவர்மனிடம் சேனாதிபதியாக இருந்தவர் பரஞ்சோதி. மகேந்திரவர்மனுக்குப் பின் நரசிம்மவர்ம பல்லவனிடமும் சேனாதிபதியாக இருந்திருக்கிறார். சாளுக்கிய மன்னன் புலிகேசிமேல் நரசிம்மவர்மன் எடுத்த படையெடுப்பில் முன்னின்று சேனையை நடத்தியிருக்கிறார். சாளுக்கிய மன்னனது தலைநகரமான வாதாபி மீது படையெடுத்து அந்தப் போரில் வெற்றி கண்டு அந்த நகரைத் தீக்கிரையாக்கியிருக்கிறார் வாதாபி நகர் பற்றி எரிகிறபோது அந்நகரில் அகப்பட்டதையெல்லாம் சுருட்டிக்கொள்ள தன் படைகளுக்கு அனுமதி கொடுத்திருக்கிறார், நரசிம்மவர்மன். எல்லாப் படைவீரர்களும் பொன்னையும் பொருளையும் கொள்ளை கொண்டு போகிறபோது பல்லவ சேனாதிபதி பரஞ்சோதி மட்டும பொன்னிலும் பொருளிலும் மோகம் கொள்ளாது, அந்த நகரத்துக் கோட்டை வாயிலில் இருந்த கணபதி விக்கிரஹத்தை மட்டும் தம்முடன் எடுத்துச் செல்ல அனுமதி கேட்டிருக்கிறார். மன்னன் அனுமதி கொடுக்கத் தயங்கவில்லை. அவ்வளவுதான் வாதாபிக் கோட்டையிலுள்ள கணபதி பெயர்த்தெடுக்கப்பட்டார். வெற்றி வீரராக நாடு திரும்பிய பரஞ்சோதி நேரே இந்த விநாயகரை தம் சொந்த ஊரான திருச்செங்காட்டாங்குடிக்கே கொண்டுவந்து விட்டார்; அங்குள்ள சிவன் கோவிலில் பிரதிஷ்டை செய்துவிட்டார். வாதாபி கணபதி நாட்டுக்கு வந்தது இப்படித்தான்.

திருச்செங்காட்டாங்குடியில் வாதாபி கணபதியை பரஞ்சோதியார் (ஆம், பின்னர் தம்மைச் சிறுத்தொண்டன் என்று அழைத்துக்கொண்டவர்தான்) பிரதிஷ்டை செய்த திருநாளன்று பல்லவ மன்னன் நரசிம்மவர்மனும் வந்திருந்து பரஞ்சோதியாருடைய கைங்கரியத்தைப் பாராட்டியிருக்கிறான். பரஞ்சோதியாருக்கு மட்டும் சிறு கவலை. தம்மைப்போல் கணபதி பேரில் காதல் கொள்ளுபவர்கள் யாராவது தாம் வாதாபியிலிருந்து பெயர்த்து எடுத்து வந்தது போலவே திருச்செங்காட்டாங்குடியிலிருந்து பெயர்த்து எடுத்துச் செல்லலாம் அல்லவா என்பதுதான்! பரஞ்சோதியாருடைய கவலையை உணர்ந்திருக்கிறான நரசிம்மவர்மன். 'அப்படி நடக்காது. கவலைப்பட வேண்டியதில்லை' என்று அவருக்கு ஆறுதல் கூறியிருக்கிறான்.

என்றாலும் இந்த எண்ணம் அவன் உள்ளத்தில் ஊன்றி நின்றிருக்கிறது. தென்னாடு வந்த பல்லவ மன்னன் தன் தந்தை மகேந்திரவர்மன் திருச்சித்தன்னவாயில் முதலிய இடங்களில் கட்டிய குடைவரைக் கோயில்களையும் தீட்டிய சித்திரங்களையும் காண விழைந்து ஒரு சுற்றுப் பயணத்தைத் தொடங்கியிருக்கிறான். அந்தப் பிரயாணத்தின்போதுதான் காரைக்குடியை அடுத்த குன்றக்குடியிலிருந்து மேற்கு நோக்கி நடந்திருக்கிறான். அப்படி நடந்த வழியில் ஒரு சிறிய குன்றைக் கண்டிருக்கிறான். இந்தச் சிறிய குன்றில் ஒரு கணபதியைச் செதுக்கிவைத்து விட்டால் அசைக்க முடியாதவராக அமர்ந்துவிடுவாரல்லவா என்று எண்ணியிருக்கிறான். அவ்வளவுதான். உடன் வந்த சிற்பிகள் அவன் எண்ணத்தை உருவாக்க முனைந்திருக்கிறார்கள். மலையைக் குடைவது என்பது அவர்களுக்கு எளிதான காரியமாயிற்றே!

குடைவரைக் கோயில் ஒன்று உருவாகிவிட்டது. கற்பக விநாயகர் அசையாத பிள்ளையாராக, அசைக்க முடியாத கணபதியாக அமர்ந்துவிட்டார். திருவீங்கைக்குடி மகாதேவரும் உருவாகிவிட்டார் இருவருக்கும இடையில் நரசிம்ம பல்லவரது திருஉருவத்தையே செதுக்கி நிறுத்திவிட்டார்கள். அன்று முதல் இங்கு பிள்ளையார் ஆதிக்கம் செலுத்த முற்பட்டுவிட்டார். ஈக்காட்டூர் மருதங்குடி, திருவீங்கைக்குடி என்றெல்லாம அழைக்கப்பட்ட அந்த சிற்றூரின் பெயர் அன்று முதல் பிள்ளையார்பட்டி என்றே நிலைத்துவிட்டது!

பிள்ளையார்பட்டி உருவான கதை இப்படித்தான் இருந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் தமிழ் நாட்டில் குடவரைக் கோயிலில் பிள்ளையார் திருஉருவம் அசைக்க முடியாத திருஉருவமாக அமைக்கின்ற வாய்ப்பு ஏற்படாதல்லவா!

நாமும் பிள்ளையார்பட்டி பிள்ளையாரை (கற்பக விநாயகர்) வணங்கிப் பெறற்கரிய பேறுகளையெல்லாம் பெற்று வருவோமாக,

"அறபுதக் கீர்த்தி வேண்டின
ஆனநத வாழக்கை வேண்டின
நற்பொருள் குவிதல வேண்டின்
நலமெலாம பெருக வேண்டின்
கற்பகமூத்தி தெய்வக்
களஞ்சியத் திருககை சென்று
பொற்பதம் பணிந்து பாரீர்
பொய்யிலை கண்ட உண்மை."

—கவியரசர் கண்ணதாசன்.

வலஞ்சுழி வினாயகர்

திருவருள் ததும்பியதும் அடியார்களாம் நாயன்மார்களின் பொன்னடி பெற்றதும் தெய்வத் தமிழ்ப்பால் எனும் திருமுறைகள் பாடப் பெற்றவதுமான இறைவன் கோயில் கொண்ட திருத்தலங்கள் பல உள்ளன. அவைகளில் சில புராணப் புகழ் பெற்றவை, சில தானே தோன்றியவை, சில முனிவர்கள் போற்றியவை, சில தேவாரப் பாடல்கள் பெற்றவையாகும்.

அறுபத்தி மூன்று நாயன்மார்களில் முதல் மூவர் என்று புகழ்ந்து போற்றப்படும் சம்பந்தர், அப்பர், சுந்தரர் இவர்களால் பாடல் பெற்ற தேவாரத் தலங்கள் தமிழ்நாட்டிலும் ஈழமும் உள்பட 274 என்பர். இவைகளுள் திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் தேவாரப் பாடலும், அருணகிரி நாதரின் திருப்புகழும் பாடிப் புகழ்ந்த பெரும் புண்ணியத் தலமே திருவலஞ்சுழி ஆகும். இது கும்பகோணத்திற்கு மிக அண்மையில் உளளது.

இத்தலத்திற்கு சக்திவனம், தக்ஷிணாவர்த்தம் என்ற பெயர்கள் ஒரு காலத்தில் இருந்திருக்கின்றன. காவிரி வலம் சுழித்து ஓடுவதாலும் இத்தலத்து வெள்ளை விநாயகர் வலம் சுழித்த மூர்த்தியாக இருப்பதாலும் திருவலஞ்சுழி என்ற பெயர் வழங்கலாயிற்று. இத்தலத்தில் அருள் பெற்றவர்கள் சோழமன்னன், ஹேரண்ட முனிவர், ஆதிசேஷன், பராசக்தி, சம்பந்தர், அப்பர், பிரமன், இந்திரன் ஒரு மலைப்பாம்பு ஆகியோராவார். இங்குள்ள தீர்த்தங்கள் காவிரி, அரிசொல்நதி (அரிசிலாறு) ஜடாதீர்த்தம் என்பனவாகும். தலவிருட்சம், வில்வமரமாகும். இறைவன் திருநாமம் கபர்தீசர் என்னும் கற்பக நாதேச்வரராகும். அமபாள் பெயர் பிருஹந்நாயகி என்னும் பெரிய நாயகியாகும். தலவினாயகர் சுவேத வினாயகர் எனப்படுவார். தேவேந்திரனால் கடல்நுரையால் ஆக்கப்பட்டு பிரதிஷ்டிக்கப்பட்டது என்பது வரலாறு. இவ்வினாயகரால் இத்தலத்திற்குப் பெருமை அதிகம்.

திருப்பாற்கடல் கடைந்த போது தேவர்கள் வினாயகர் வழிபாடு செய்யாது பாற்கடல் கடைய ஆரம்பித்தார்கள். எனவே அமுதம் கிடைக்காது இருக்கவே, தேவேந்திரன் கடல் நுரையால் ஒரு வினாயக உருவம் செய்து பக்தியுடன் பூஜித்தான். பிறகு தேவர்கள் அமுதம் எடுத்தார்கள். இந்திரன் தான் இருப்பிடம் செல்லும் வழியில் இந்தக் கடல்நுரை வினாயகரையும் எடுத்து வந்தான். இத்தலத்தில் வந்து தங்கி ஈசனை வழிபட்டான். இங்கு கீழே வைத்த வினாயகரை இந்திரன் எடுக்க முயலுகையில் அவனால் அது முடியவில்லை. எனவே இங்கேயே பிரதிஷ்டை செய்து விட்டு தேவலோகம் சென்றான். இந்திரன் பூஜை தற்போதும் ஒன்பதாம் திருநாளாகச் செய்யப்படுகிறது. வாணிகமலாம்பாள் சமேதராய் உள்ள வினாயகரை வினாயக சதுர்த்தியை ஒட்டிய ஒன்பது நாட்கள் வழிபடுகின்றனர். கடல் நுரை மூர்த்தியானதால் இவ் வினாயகருக்குப் பச்சைக் கற்பூரம் தூவுவதைத் தவிர வேறு அபிஷேகங்கள் கிடையாது.

ஒருகாலத்தில் பாதாளத்திலிருந்து ஆதிசேஷன் வெளி வந்த காரணத்தினால் பெரிய பள்ளம் ஒன்று தென்பட்டது. பொதிய மலையிலிருந்து வந்த காவிரி அப்பள்ளத்தினுள் சுழித்துக்கொண்டு இறங்கி மறைந்து விட்டது. அதுசமயம் ஒரு அசரீரிவாக்கு ஏற்பட்டது. பாதாளம் தென்படும் இடத்தில் ஒரு அரசனோ அல்லது மஹரிஷியோ இறங்கித் தம்மைத் தாமே பலியிட்டுக்கொண்டால் பள்ளம் மூடுபடும் என்ற அசரீரி வாக்கைக் கேட்டு அவ்விடத்து அரசன் கலங்கினான். இங்கு வினாயகரைக் குறித்துத் தவம் செய்து கொண்டிருந்த ஹேரண்ட மாமுனிவர் அரசனைத் தேற்றித் தாமே பள்ளத்தினுள் இறங்கினார். பள்ளம் மூடுபட்டு காவிரி நேராக ஓடியது. தம் தவ வலிமையால் ஹேரண்டர் பள்ளத்தை அடைத்து விட்டுக் காவிரி கடலுடன் கலக்கும் இடத்திற்கருகில் உள்ள பெரும் பள்ளம் என்ற இடத்தில் கரை ஏறினார். திருவலஞ்சுழி, பெரும்பள்ளம் இரு இடங்களிலும் ஹேரண்ட முனிவருக்குத் திருவுருவச்சிலைகள் உள்ளன.

இத்திருவலஞ்சுழியை சம்பந்தர் தம் தேவாரத்தால் பாடியுள்ளார்:

" என்ன புண்ணியம் செய்தனை
நெஞ்சமே இருங்கடல வையத்து
முன்னம் நீ புரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரிசூழ் திருவலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னி ஆதரித் தேத்தியும் பாடியும்
வழிபடும் அதனாலே "

திரு. B. சுந்தரராமன், M.A., B.Ed.
பழமார்னேரி

என்ற சம்பந்தர் தேவாரம் மிகவும் யாவராலும் பயின்று வரக்கூடிய சிறப்புமிக்க தேவாரமாகும். திருநாவுக்கரசர் தம் திருக்குறுந்தொகையில்,

" ஓதமார் கடலின் விடமுண்டவன்
பூதநாயகன் பொற்கயிலைக் கிறை
மாதொர் பாகன வலஞ்சுழி ஈசனைப்
பாத மேத்தப் பறையும் நம் பாவமே"

என்பார்.

திருவலஞ்சுழி மும்மணிக் கோவையில் நக்கீரதேவரும், கபிலா இரட்டை மணிமாலையிலும், பரணர் அந்தாதியிலும், காளமேகம் தம் தனிப்பாடலகளிலும், அருணகிரிநாதா தம் திருப்புகழிலும் வலஞ்சுழி ஈசனைப் புகழ்ந்து பாடியுள்ளனர்.

திருவலஞ்சுழி விநாயகா சென்ற நூற்றாண்டில் நிகழ்த்திய அறபுதம பின்வருமாறு :

வலஞ்சுழி விநாயகரிடம் பெரும பக்தி பூண்டவர் சின்னச்சாமி அய்யா ஆவார். இவர் தஞ்சையை அடுத்த நடுக்காவேரி என்ற ஊரைச சேர்நத வா. முன்னொருகால் இநதப் பகுதியில் சீதையைத்தேடி ராமபிரான் மிகுநத சினத்துடன் இவவூரைக் கடநத போது தம்மை அறியாமல் அவா சினம் தணிநததால உத்தணட விஜய ராகவபுரம் என்று செப்பேடுகளில் இவ்வூர் குறிக்கப்படுகிறது. இந்த ஊரை தீவட்டிக் கொள்ளைக்காரர்கள் தாக்கியதால கணபதி பக்தரும் செல்வந்தருமான சின்னசாமி அய்யா தம் பொருளகளைப் புதைத்து விடடு அதைக் காக்கும் பொறுப்பை கணபதியிடம ஒப்படைத்து மறைந்துறைந்தார். விநாயகா அருளால் பொருளகள் பாதுகாக்கப்படடன. மீணடும் புதைத்த பொருளை அவர் அவா தோணடி எடுக்கும் போது ஒரு அசரீரி வாககு கேட்டது. புதைத்த பொருளில பாதிப் பொருளை ஆலயத் திருபபணிககாகச செலவிடும்படி அந்த அருளவாககு உத்தரவிட்டது அதை விநாயகரின் குரலாகவே எண்ணிய சின்னச்சாமி அயயர் காவிரிக்கரையில் பிரசன்ன மஹாகணபதி ஆலயம், மறறும அமிர்தவல்லி சமேத காலகண்டேசவரா ஆலயம் ஆகியவற்றைச் செப்பனிட்டுக் குடமுழுக்கு செய்தார். அவரது பரம்பரையினர் இன்றும் நடுக்காவேரியில் வசித்துத் தெய்வத் தொணடுகள் புரிநது வருகின்றனர். திருப்பணிப் பயன் தமிழ்ப் புலவல்களால் பின்வருமாறு குறிக்கப்படுகிறது. இது போனற திருபபணிகள கிடைத்தற்கரிது.

“ புல்லினால வருடம கோடி புது
மணணால் பத்துக்கோடி
செல்லுமா ஞாலம் தனனில்
செஙகல் லால் நூறு கோடி
அல்லியம கோதை பாகன் ஆலயம்
மடாலயங்கள்
கலலினால் இயற்றுவித்தோர்
கயிலை விட்டு அகலார் தாமே ”

இநதப் புனிதமான பிள்ளையார் சதுர்த்தித் திருநாளில் ஸப்தகிரி நேயாகள் திருவலஞ்சுழி விநாயகப் பெருமானைப் போற்றிப் பரவி எல்லா நலனகளையும் எய்துவார்களாக!

“ செலலார் வலஞ்சுழியிற் செங்கழுநீர்ப்
பிள்ளையார்
எல்லார்க்கும் நலலவரம் ஈவா காண்
அம்மானை
எல்லார்க்கும் நல்லவரம் ஈவாரே
ஆமாயின்
தொலலுலகில் உள்ளோர் துதியாரோ
அம்மானை
துதிக்கையவர் தமக்கு சொந்தமன்றோ
அம்மானை ”

*

திருநாட்டிலும் புகழ் மணக்கும் திருக்குடந்தை!

நம்மாழ்வாா தமது அவதார காரியத்தை முடித்துக கொணடு வைகுந்தம் விரைநதபோது அஙகு மருதரும வசுக்களும பெருந்திரளாக ஒன்றுகூடி தோத்திரங்கள் பாடித தமமை எதிர்கொண்டு அழைததையும், ‘குடநதை எங்கோவலங்குடி அடியார்’ எனறு மடநதையா வாயார வாழ்த்துக கூறியதையும் கணடு தமக்கு நடக்கும் வரவேற்பு வைபவத்தை எண்ணி வியப்பில் ஆழ்ந்தாராம். அமுதனின அடியவன் எனபதால அல்லவா இந்த அபிமானம்! குடந்தையின் குடிமகன் என்பதால் அல்லவா இந்த குதூகலம்! என்று கருதி களிப்படைந்தாராம். ஆம்! குடநதையின் புகழ் மணம் வைகுந்தத்திலும வீசுகிறது! ஆராவமுதன் ஊர் அலலவா அது! இதோ நம்மாழ்வாரின இதயக்குரலைக் கேளுங்கள.

பாசுரம

மடநதையர் வாழத்தலும் மருதரும் வசுககளும்
தொடர்நதெங்கும தோத்திரம் சொல்லினர் தொடுகடல்
கிடந்த வெஙகேசவன கிளரொளி மணிமுடி
குடந்தை யெங்கோவலன் குடியடியார்க்கே!

ஆா. சுப்பாராவ — திருககோவிலூா.

ஃ ஃ ஃ

ஓடா தேர் ஓட திருப்பல்லாண்டு பாடியவர்!

திருவிசைப்பா ஆசிரியருள் ஒருவர் சேநதனா. விறகு விற்றுப் பெற்ற பொருளால் தில்லையில் சிவனடியார்களுக்கு உணவு அளித்து வந்தார். நடராஜப் பெருமானே அடியார் வேடம் பூண்டு இவரிடம் சென்று இவர் அளித்த தவிட்டுக் களியினை ஏற்றருளினர். திருவாதிரை விழாவில் பலர்கூடி இழுக்கவும் நகராது இருந்த திருத்தேர் சேந்தனர் திருப்பலாண்டு பாட தேர், நிலையைச் சேர்நதது.

ஆர். சுப்பாராவ் — திருக்கோவிலூர்.

சித்து வித்தை!

ஹடயோகி ஒருவன் ஒரு மகானிடம் சென்று தனக்கு ஆகாயத்தில் பறககச சக்தி இருக்கிறதெனறும், பூமியின் கீழ் அநேக காலம் கிடக்கும் திறன் உள்ளதென்றும், ஜலஸ்தம்பம் தெரியுமென்றும், இது போன்ற சித்து வித்தைகள் பல தெரியுமென்றும் பெருமை பாராட்டினன்.

அப்பொழுது மகான் "அப்பா! பட்சிகள் ஆகாயத்தில் பறக்கின்கின்றன. புழுககள் பூமியின் கீழ் அதிக காலம் மறைந்து கிடக்கின்றன. மீன்கள் ஜலத்தில் வசிக்கின்றன. இம்மாதிரி தாழ்நத ஜந்துக்களைபோல் நடப்பதனுல் என்ன பயன்? கடவுளைப் போல நடக்க கருணை, அன்பு முதலிய நற்குணங்களை விருத்தி செய்! கர்வத்தையும், கோபத்தையும் அடக்கி விடு" என்று மறுமொழி கூறினர்.

ஆகையால், "மனம் தன் வாசனைகள் யாவையும் இழந்து அதன் உண்மை உருவத்தை அடைதலே, சகல சித்திகளையும் விட மேலானது" என்பது இக்கூற்றில் விளங்கும்.

திருமதி. ரா. உமாமகேஸ்வரி – திருவாணைக்கோவில்.

ஒருசமயம் குழந்தை க்ருஷ்ணனை உறங்கச் செய்வதற்காக யசோதை ராமாயணக் கதை கூறத் தொடங்கினன். ராமன் என்று பெயர் பெற்ற ஒருவர் இருந்தார் என்று கூறினள் யசோதை. "ஊம்" என்று ஆமோதித்தான் கண்ணன். அந்த ராமனுக்கு ஸீதை என்று ஒரு அழகிய மனைவி இருந்தாள் என்று கூறினள் யசோதை. அதற்கும் "ஊம்" கொட்டி அங்கீகரித்தான் க்ருஷ்ணன். உடனே யசோதை க்ருஷ்ணனிடம், அந்த ராமன் தன் தம்பி லக்ஷ்மணனுடனும், மனைவி சீதையுடனும் தன் தகபபனரது வாக்கைக் காப்பாற்ற வேண்டி பஞ்சவடி என்ற வனததில் வசித்தார். அப்போது ராவணன் என்ற அரக்கன் சீதா தேவியை தூககிச் சென்று விட்டான் என்று கதையைத் தொடர்ந்தாள். அவ்வாறு தாய் சொன்ன கதையை அமைதியாகக் கேட்ட க்ருஷ்ணன உடனே பரபரப்புடன்'லக்ஷ்மணு! எங்கே எனது வில்! உடனே எனது கோதண்டத்தைக் கொடுப்பாயாக' என்று கூச்சலிட்டான். இதைக்கேட்ட யசோதை குழந்தை மேல் உள்ள பாசத்தால் என்னதென்று புரியாமல் மனம் கலங்கி கண்ணனுக்கு மங்களகரமான ஆசீர்வாதங்களைச் செய்தாள்.

ஒரு நாள் கண்ணன் ஒரு கோபிகையின் வீட்டுக்குள் புகுந்து வெண்ணையைத் திருடி உண்டான். இதைப் பாா்த்த அக்கோபிகை குழந்தாய்! நீயார்! என்று கேட்டாள். கண்ணன், நான் பலராமனுடைய தம்பி என்று பதில் அளிததான. இங்கே உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டாள் கோபிகை. என்னுடைய வீடு என்ற சந்தேகத்தில் வந்து விடடேன் என்று மறுமொழி பகாந்தான் கண்ணன் சரி, அப்படியானல் வெண்ணைப் பாத்திரத்துக்குள்ளே கையை விட்டதும் உன்வீடு என்ற நினைப்பினுல தானே என்று அக்கோபிகை கேட்டாள். இதற்கு ஸ்ரீக்ருஷ்ணன், நான் காணுமல் போன ஒரு கன்றுகுட்டியைத்தான் பாத்திரத்தின் உள்ளே தேடினேன் என்று கபடமாகச் சிரித்தபடி கூறி விட்டு அக்கோபிகையின் வீட்டில் இருநது ஓடி விட்டான்.

பின்பு ஸ்ரீக்ருஷ்ணன் வாலிப வயதை அடைந்தபின் ஒரு நாள் ராதையின் அழகிய வீட்டில் இருந்து வெளிவருகிறுன். ஸ்ரீக்ருஷ்ணனின் மனம் முழுதும் ராதையைப் பற்றிய நினைவாகவே இருந்தது. அப்போது எதிரில் வந்த சந்த்ராவளி என்ற கோபிகையை பார்த்த கிருஷ்ணன் 'என்ன ராதே! சௌக்யமா' என்று கேட்டான். இதனுல் பொறாமையும் கோபமும் அடைந்த சந்த்ராவளி 'ஏ கம்ஸா! க்ஷேமமா' என்று கேட்டாள். உடனே பெரிதாக சிரித்த கண்ணன் சந்த்ராவளியிடம் உன்னுல் கம்ஸன் எங்கே பார்க்கப் பட்டான்! என்று கேட்கவே, சந்த்ராவளி க்ருஷ்ணனிடம் உன் கண்களுக்கு நான் ராதையாக தோன்றும் பொழுது என் கணகளுக்கு நீ கம்ஸனுகப் படுவது மட்டும் தவரு? என்று கோபமாகக் கேட்டு விட்டுச் சென்று விட்டாள். இதைக்கேட்ட கண்ணன் தனக்குள் சிரித்துக்கொண்டு நடந்தான்.

ஒருநாள் ஒரு கோபிகையின் வீட்டில் சென்று கதவைத் தட்டினன் கண்ணன். அக்கோபிகை கதவைத் தட்டுவது யார்? என்று கேட்டாள். உடனே பகவான் நான்தான் மாதவன் என்று பதில் அளித்தான். அப்படியானல் வஸந்த ருதுவா! என்று கேட்டாள் கோபிகை. (மாதவ: என்ருல் வஸந்தருது என்றும் பொருள்) உடனே கண்ணன், இல்லை சக்ரபாணி என்றுன். இதற்கு கோபிகை சக்கரம் சுற்றும் குயவனு? என்ருள். இல்லை, இல்லை இந்த பூமியையே தாங்கும் தரணீதரன் என்று பதிலளித்தான் க்ருஷ்ணன். இதைக் கேட்ட கோபிகை பூமியைத் தாங்குபவன் என்ருல் இரண்டு நாக்குகள் படைத்த பாம்பு நீதானு எனறு கேட்டாள். இதற்கு நான் ஆற்றில் வசித்த பாம்பை அடககியவன் என்று பகவான் பதில் கூறவே அக்கோபிகை அப்படியானுல் நீ பக்ஷிராஜனுன கருடனு என்ருள். இதற்கு ஸ்ரீக்ருஷ்ணன் பெரிய திருவடியாகிய கருடன்

நானல்ல. புராணங்களால் கோஷிக்கப்படும் "ஹரி" வநது உள்ளேன் என்று பதிலளித்தான். உடனே நகைத்த கோபிகை, அப்படியானுல் வந்திருப்பது கபீந்த்ரனுகிய குரங்கா? என்று கேட்டாள். (ஹரி: என்ருல் குரங்கு என்றும் ஒரு பொருள் உண்டு.) இதையெல்லாம கேட்ட கண்ணன் தன்னை ஆயிரம் நாமங்களால் அக்கோபிகை அர்ச்சித்ததைப் போல மகிழ்ச்சியடைந்தான்.

பின் அரசுப் பொறுப்பு ஏற்ற க்ருஷ்ணன் ருக்மிணியைத் திருமணம் செய்து கொண்டார். ஒரு நாள் ருக்மிணியுடன் தனிமையில் பேசிக்கொண்டு இருந்தார் பகவான். அப்பொழுது ருக்மணி தன் கணவரிடம் க்ருஷ்ணு! நான் தங்கள் அருகில் நெருங்கவே பயப்படுகிறேன். உமது உதடுகள் பூதனையின் உயிரைக குடித்தது. உமது தழுவதலால் மருத மரங்கள் முறித்து வீழ்த்தப்பட்டன. முன்பு உமது நகங்களால் இரண்ய கசிபு கொல்லப்பட்டான். எனவே தங்கள் அன்பை நம்ப இயலாதுஎன்று பொய்க் கோபம் காட்டி பேசி கண்ணனை மகிழ்ச்சியடையச் செய்தாள்.

இவ்விதம் கண்ணனைப் பல கோணங் கண்டு களித்து அவற்றை சுலோக மாக இயற்றி இருக்கிருர் லீலாசுகர். இந்நூல் படிக்கப் படிக்கத் தெவிட்டாததாகும். கருணுமூர்த்தியான க்ருஷணனை அன்பு ஒன்றினுல் மட்டுமே பெறக் கூடும் என்பதை லீலா சுகர்,

கோபாலாஜிர கர்தமே விஹரஸே
விப்ராத்வரே லஜ்ஜஸே
ப்ரூஷே கோகுல ஹுங்க்ருதை:
ஸ்துதிசதை ர் மௌனம் விதத்ஸே
விதாம் ||
தாஸ்யம் கோகுல பும்ஸ்சலீஷு
குருஷே
ஸ்வாம்யம் ந தாந்தாத்மஸு
ஜ்ஞாதம் க்ருஷ்ண தவாங்கரி பங்கஜ
யுகம் பரேம்ணுசலம் மஞ்ஜுளம் ||

என்று குறிப்பிடுகிருர். அதாவது க்ருஷ்ணு! தாங்கள் சிரமத்துடன் வேத வித்துக்கள் செய்யும் யாகத் திற்கு செல்ல விரும்புவது இல்லை. இடையர்கள் வீட்டுசேற்றில் விரும்பி விளையாடுகிறீர். வித்வான்களின் பலவித ஸ்துதிகட்கும் மௌனமாக இருக்கும் தாங்கள் பசுக்களுடன் பேசுகின்றீர். புலனடக்கமுடைய தபஸ்விகட்கு எளிதில் வசப்படாத தாங்கள் சபல புத்தி உடைய கோபிகைகட்குப் பணியிடை செய்கின்றீர். எனவே இதனின்றுத் தங்களை அன்பினுல் மட்டுமே பெறக்கூடும் என்று புரிகிறது எனக் கூறி உள்ளார். சுகரும் ஸ்ரீமத் பாகவதத்தில் கோபிகைகள் காதலாலும், கம்ஸன் பயத்தாலும், சிசுபாலன் த்வேஷத்தாலும், அரசர்கள் நட்பாலும், கோபர்கள் அளவற்ற வாஞ்சையாலும் ஸ்ரீக்ருஷ்ணனை அடைந்து விட்டார்கள் என்றும் இதனுல் ஸ்ரீக்ருஷ்ண அவதாரமே மிகவும் பெருமை மிக்கது என்று குறிப்பிடுகிருர். எனவே லீலாசுகர் பிரார்த்தித்தபடி வாயில் வெண்ணை மணம் கமழவும், பேச்சில் திருடனுக்குரிய சாமர்த்தியமும், கண்களில் அடிக்கடி பொய்க் கண்ணீர் உடையவனும், திருவடிகளில் அழகிய தாண்டவமும் உடைய குழந்தை கண்ணன் நம்மைக் காப்பாற்றட்டும்.

வதனே நவனீத கந்தவாஹம்
வசனே தஸ்கரசாதுரீ துரீணம் |
நயனே குஹனுச்ரு மாச்ரமேதாச்
சரணே கோமல தாண்டவம் குமாரம்||

*

இவரன்ரே உத்தமர்!

உறையூரிலிருந்துகொண்டு அரசு புரிந்துவந்த சோழ மன்னர்களுள் ஒருவன் கோப்பெருஞ்சோழன். மிக்கப் புலமை வாய்ந்த மன்னன். பிசிராந்தையார் என்ற புலவரின் நண்பன்! இப்படிப்பட்ட மன்னனுக்கும் ஒரு சோதனை! அம்மன்னனின் புதல்வர்களே விரோதித்துக்கொண்டு முரண்டார்கள்! மன்னன் அவர்கள் மேல் படையெடுத்தான்!

அப்போது......!

"மன்னு! உன்னைப் பகைத்துள்ளோர் யார்? உன் மைந்தர்கள் தானே? நீ அவர்களை வென்று, இம் மண்ணுலகை ஆண்டு, பின்னர் விண்ணுலகம் புகும்போது, இம்மண்ணுலகையாள, நீ யாரை வைத்து விட்டுப் போகின்றனையோ? ஒருகால் நீயே தோற்றுப்போவாயானுல், உன் பகைவர்கள் கொண்டாட ஓர் பேரிழிவை நிலைநிறுத்தப் போவாயா? ஆதலின் தீர ஆலோசனை செய்து சினமகற்றிப் போரை விடுவாயேல், நலம் பெறலாமே!" என்று பொருள்படப் பாடினுர் ஓர் புலவர்! போரையும் நிறுத்தினுர் அப்புலவர்!

அப்புலவர்தான் 'புல்லாற்றூர் எயிற்றியனுர்'!

மன்னனும் அதன்படி நடந்து, சில காலம் ஆண்ட பின்னர், பிசிராந்தையாருடன் விண்ணுலகமடைந்தார்.

உத்தமரின் குணமும் செயலும் இவை தானே!

— மயூரப்ரியா.

அமர கோஸம்

திரு த. பழமலைநாதன்,
செங்கல்பட்டு-1

சைவ வைஷ்ணவ மதங்கள், வைதீக மதங்கள் மறறும் வைதீக மதங்கள் அல்லாதவை இவற்றில் வரும்படியான எலலாப் பதங்களுக்கும் அமரகோஸத்தில் பொருள் கூறப்பட்டுள்ளது.

வெகு காலத்திறகு முன் வாழ்ந்து வநத அமரசிம்மன் என்னும் ஜைன மதத்தைச சோந்தவன் மிகவும அறிவுக் கூாமையுள்ளவன். அவன் பல வகையான நூல்களை எழுதி இருந்தான்.

ஒரு சமயம் சங்கராச்சார்ய ஸ்வாமிகள் திக்விஜயம் செய்து கொண்டு வரும் போது, அவருக்கும் அவனுக்கும் தர்க்கம் நடந்தது. வேதத்தை அனுசரிக்காத கொள்கைகள் ஜைன மதத்தில் ஏராளமாக உண்டு. தெய்வம் அவர்களுக்கு இல்லை. புத்தர்களுக்கு மிகவும் உயர்ந்த நிலை சூனியந்தான். ஜைனர்கள் "எந்த பொருளும் இருககலாம்; இல்லாமலும் இருக்கலாம்; இருந்தும் இல்லாமலும் இருக்கலாம்" என்று அனேக வகையான அபிப்ராயங்களையும் சொல்வதுண்டு. 'ஆத்மாதான் எங்கும் நிறைந்து பரிபூர்ணமாக இருக்கிறவன்' என்பது உபநிஷத்தின் அபிப்ராயம். அந்தத் தத்துவங்களைப் பற்றி எல்லாம் விசாரிகக வேண்டும் என்று அமரசிம்மனை வாதத்திற்கு அழைத்தார் ஆசாாயார் அவர்கள்.

ஆசார்யா சொல்கிறவாதத்திற்கு முழுவதுமாக அமரசிம்மனல் சரியாக பதில் சொலல முடியவில்லை. அவன் ஜைனனராக இருந்தாலும் மகாபுத்திசாலி. ஆதலால் சரஸ்வதியை உபாசித்து வந்தான். அவன் சரஸ்வதியை மனதில் நினைத்து தனக்கு உதவியாக அவளை அழைத்தான்.

கலைகளுக்கு இருப்பிடமான சரஸ்வதியும் அவனுக்கு உதவுவதாகக் கூறினள். அவள் சொல்படி ஒரு திரையைக கட்டி ஒரு குடத்தில் சரஸ்வதியும் ஆவாஹனம் செயது விட்டு திரைக்கு வெளியில் இருந்தே ஆசார்யரை கேள்வி கேட்கும்படியாகவும் தான மட்டும திரைக்கு உள்ளே இருந்து பதில் சொல்வதாகவும் ஏற்பாடு செய்தான்.

ஆசார்யன கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் குடத்தில் இருந்த சரஸ்வதி அமரஸிம்மனுக்குப் பதிலாக பதிலைத் தட்டுத் தடங்கல்கள் இன்றி கூறிவந்தாள். சந்தேகம் அடைந்த சங்கராசார்ய ஸவாமிகள் பேசுவது அமரசிமமன இல்லை எனத் தெரிந்துகொண்டார். சரஸ்வதிதான் அவனுக்காக பதில் சொல்கிருள் என்பதையும் உணர்ந்தார். உடனே நேரடியாக "தெய்வம் இல்லை என்று பிறருக்குச் சொல்லக் கூடிய ஒரு மனிதனுக்காகவா பரிந்து கொண்டு பதில் சொல்ல வந்தாய்?" என சரஸ்வதியை கேட்டார். சரஸ்வதியும் தன் தவற்றிற்கு வருந்தி 'இனி பதில் சொல்லவில்லை' எனக் கூறி குடத்தை விட்டு மறைநது விட்டாள்.

இவற்றைக கண்ட அமரசிம்மன் வாதத்தில் தான் தோற்று விட்டதாகக் கூறி ஆசார்யர் காலில் விழுநது பணிந்தான். அந்த வாதத்தில் தோற்றுப் போனதால் மனத்துயரம் அடைநத அமரசிம்மன் தான் எழுதிய நூல்களை தீயில் போட்டு எரிக்கத் தொடஙகினன். விஷயம் அறிந்த சங்கராசார்யர் அவனது செயலைத் தடுத்து ஆறுதல் கூறினர். ஆனலும் அவர் தடுதததினல் அவன் எழுதிய ஓரே ஒரு நூல் மட்டும் தீக்கு இரையாகாமல் தப்பித்தது. அந்த தப்பிய நூல் தான் 'அமரகோஸம்' எனும் சம்ஸ்க்ருத அகராதி நூல் என்று குறிப்பிடப்படுகிறது

சித்தி விநாயகனே!

ஏண்ணை வ. நாராயணப் பெருமாள்.

எடுப்பு

சித்தி விநாயகனே — சித்தி விநாயகனே
செபங்கள் செய்தோம — செயம் பெறச் செயவாய் (சித்தி)

தொடுப்பு

பக்தியில் முத்தியர் பக்தர்கள் கூட்டத்தில்
பித்தனேன் பாவியேன் எனையும் சோப்பாய் (சித்தி)

முடிப்பு


எத்தனை எததனை பாவம்செய் திருந்தாலும்
சித்தம் திருநதிச் சொல்லிடி னுன்நாமம
உததம ஞவான் உயர்கதி யடைவான்
உன்னருட் பெருமை சொல்லவும் போமோ (சித்தி)
இகபர சுகங்கள் யாவும் அருளும்
என்னரும் இறைவா கணேசா அருள்வாய்
செல்வங்கள் யாவும் சேர்ந்திடச் செய்வாய்
செவ்விய வாழ்வுநான் வாழ்ந்திடச் செய்வாய் (சித்தி)

உள்ளங்கவர் பிள்ளையார்

நிலம் போறறும பனிக்கிரண நிலா-
வணிந்த நாயகனுர் நிருதர் வாழும
சலம் போற்றும் மதில் பொடித்த
ஞான்றினிய பூசனைகள் சால ஆற்றிப்
புலம் போற்றும் மெய்யடியார் விநாயகன்
என் றியம்புபதப் பொருளை நாட்டி
வலம் போற்றும் மணியிரதம் ஊர்ந்தமழ
இளங்களிற்றை வணக்கம் செய்வாம்
—(திருவானைக்காப் புராணம்)

"ஒருவர் ஒரு செயலைத்தொடங்கு முன் நின்னை வழிபட வேண்டும். அவ்வாறு வழிபட்டால் அச்செயலை இடையூறில்லாமல் நிறைவேற்ற வேண்டும். நின்னை வணங்காமல் தொடங்கினுல் இடையூறு ஏற்படுத்தி விடு. பிறகு உன்னை வழிபடுவார்கள்" என்று சிவபெருமான் விநாயகப் பெருமானுக்கு வரமளித்திருந்தார். சிவபெருமான் விநாயகருக்குத் தான் அளித்திருந்த வரத்தினை மறந்து விட்டார். மறதி யாரை விட்டது? அவரை மட்டும் விட்டுவிடுமா என்ன? சிவபெருமான் அசுரர்கள் மீது போர் தொடுக்கச் சென்றுர். சூரிய சந்திரர்களைச் சக்கரமாகக் கொண்டார். பூமியைத் தேராகக் கொண்டார். விநாயகரை வணங் [illegible] போருக்குக கிளம்பிவிட்டார். [illegible] டும்" என்று எண்ணி [illegible] சரிப் [illegible] சிவபெருமான் ஏறிச் சென்ற தேரின் அச்சினை முறியச் செய் [illegible]

சட்டம் வகுத்தவர் என்ன செய்திருக்க வேண்டும்; சட்டத்திற்கு உட்பட்டு நடந்திருக்க வேண்டும். நடக்கவில்லை. பிறகு அச்சு முறிந்ததில் வியப்பில்லையன்றே? விநாயகர்



செய்தது சரிதானே? இதனை, "முப்புரம் எரி செய்த அச்சிவன் உரை ரதம் அச்சது பொடி செய்த அதிதீரா" என்று அருணகிரிநாதரும் தம் திருப்புகழில் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்கள். இத்தகைய சிறப்புமிகு விநாயகரை வணங்கிடுவோம்.

[illegible] மாணிக்க விநாயகர், கற்பக விநா [illegible] யகர், வெயில் [illegible], வேலடி [illegible] ருக்குப் பல பெயர்கள் [illegible] ஞேர் கூறினர்கள். [illegible] ருல் பெரும்பாலும் பிள்ளையார் கோயிலைத்தான் குறிக்கும். எந்தக் கோயில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் பிள்ளையார் கோயில் இருப்பது உறுதி. அந்த அளவுக்கு பிள்ளையாரின் பேரில் மக்களுக்கு அளவு கடந்த பக்தி உண்டு. பிள்ளையார் மாடம் இல்லாமல் வீடு கட்டுதல் அத்துணை சிறப்பாகாது. அறிந்தவர் உணர்வார்; அறியாதவர் திண்டாடுவர். அந்த அளவுக்கு விநாயகர் கண்கண்ட தெய்வமாக விளங்குகிருர். வீடுகள், தெருக்கள், ஊரின் தொடக்கத்தில், ஆற்றங்கரை, குளத்தங்கரைகள், மரத்தடிகள் போன்ற இடங்களில் விநாயகர் கோயில் கொண்டெழுந்தருளியிருப்பதைக் காணலாம். அங்கிங்கெனுதபடி எங்கும் பரவி நிற்கின்ருர்.

மக்கள் விநாயகரை வெவ்வேறு பெயர்களில், உருவங்களில் வழிபடுகின்றனர்.

சீனுவில் பிள்ளையாரை 'க்வான் ஷிடியிங்' என்றும், ஜப்பானில் 'விஞயக்ஷா' 'க்வான்ஷன்-ஷேர்' என்றும்,பர்மாவில் 'மகாபிணி' என்

வெண்பாவூர் பொ. திருஞானம

றும், கம்போடியாவில் 'ப்ராகணேஷ்' என்றும், மங்கோலியாவில், 'தோக் கார்-அவுன்காகான்' என்றும் [illegible] இந்து கப்படுவதையறிய [illegible] காவில் பரப்பச் [illegible] சென்ற விவேகானந்தர் அங்கு ஒரு [illegible] கோயிலைக்கட்டி அனைவரும் [illegible] டது. 'கோபாதெயச [illegible] ஜப்பானில் ஒன்பதாம் நூற்றுண்டில் 'இடர்க்களையும் பிள்ளையார்' வழி

ஐயோ பாவம்? பசி!

கலைமகளின் அருளைப் பெற்றுள்ள புலவர்கள் திருமகளின் கடைக்கண பார்வைகூட தம்மேல் படாததால் வறுமையால் உழன்று கொணடிருந்திருக்கிறார்கள். பாவம்! வள்ளலையும் கோமகனையும் நாடி, அவர்கள் மேல் பாடியும், நூல்களியற்றியும் அவர்களிடமிருந்து பசுக களும், பொன்னும் பொருளும் பரிசாகப் பெற்று வநதனர். இருப்பி னும் பசிப் பிணியால் புலவர்கள் வாடினார்கள். ஏனெனில் எல்லோருக கும் எபபோதுமே பரிசுகள் கிடைப்பது நிச்சயமில்லாதிருந்தது. பாடல்கள் புனைந்தும பரிசு பெறாமல் ஏமாற்றத்துடன் திரும்பும் பாவ லர்கள், பசிக் கொடுமையால் தம் ஆத்திரத்தைப் பாட்டுடைத் தலை வன் மீது தீர்ததுக்கொள்வார்கள்! அவர்கள் கடைப்பிடித்த வழியை அறிய நேர்நதாலே நம்மைத் துணுககுறச செய்யும்!

பண்டிதன் தனக்குப் பரிசு கொடாத 'பாவி'யானவனின் மேலி யற்றிய நூலை, வேறுபட எழுதி, சிவந்த மலரினைச் சுற்றித் தன் வீட்டி னருகாமையிலுள்ள காளி கோயிலிலும், பாம்புப் புற்றினிலும், சுடு காட்டிலும், வீதியிலும் வைத்துத் தன் வழிபடு கடவுளைத் தியானித் துக்கொண்டு, அதனைக் கொளுத்தி விடுவான்! விளைவு? பாட்டுடைத் தலைவனை அந்தப் 'பாவி' ஓராண்டுக்குள் மரணமடைந்து விடுவான்! என்ன கொடுமை! மேலும், பாடிய பண்டிதன் பரிசு பெறாமையால் மயங்கிய மனத்தினனாய் நிலைகலங்கிச் சுழல்வானாயின், அப்பாடலுக்குத் தலைவனாயுள்ளவன்கூட, அதனைக் கேட்க நேர்ந்த அவனது உறவினருட் பட கெட்டழிந்து விடுவார்கள்!

"சங்கம் வளர்த்த அகத்தியனாரது சத்தியமொழி இது!" என்று தமிழ்மொழி அகராதி-1911 என்ற நூலிலிருந்து அறிகிறோம்!

பாவம்! பசிக கொடுமை!!

— மயூரப்பிரியா

பாட்டை எற்படுத்தினர். ஆலமரத் தில இயற்கையாகத் தோனறிய விநா யகர் திருவுருவத்தை செனனையில் [illegible]ள்ள இராஜாஜி மண்டபத்திற்கு [illegible]முள்ள ஆலமரத்தில் காண லாம். [illegible]படங்கூட எடுத்து வைத் துள்ளதைக் க[illegible] [illegible]லாம்.

ஒருசில ஆராய்ச்சியாளர்கள், நர சிம்மவர்மன் என்ற பல்லவ மன்னன் சாளுக்கிய மன்னர்களைப் போரில் வென்[illegible] பின்னர் [illegible] என்[illegible] [illegible] ரைத் [illegible] தான். அதற்குப் பிறகே தமிழகத் தில் பிள்ளையார் வழிபாடு பரவலா யிறறென்பா. நரசிம்ம வர்மனின் ஆட்சிக்காலம கி.பி. 630-668 ஆகும்

பண்டைத் தமிழர் மாதங்களை எண் ணும போழ்து ஆவணியே முதல் மாதமாகக கொணடு எண[illegible]கரும் னா [illegible] "முல்லை" எனும் தொல்காப் பியச் சூத்திரத்திற்கு உரை[illegible] சுட்டிக் போது நச்சின[illegible]ர்க்கினியார் [illegible] காட்டுகினறார் [illegible] [illegible]மை முக்கியமாக [illegible]ருப்பது போல திதிகளுள் சதுர்த்தி திதி விநாயகருக்குப் பிடித்த நாளா கும. மாதந்தோறும் வளர்பிறை யில் சதுர்த்தி வரும் விரதமிருகக லாம். மிகவும் சிறப்பானது ஆவணி யில் வளர்பிறையில் வரும் சதுர்த்தி தான். அதனைத்தான் 'பிள்ளையார் சதுர்த்தி' என்று கொண்டாடுகிறோம். விநாயகருக்கு எந்த நாளிலும் துளசி வைத்து வழிபாடு செய்தல் கூடாது. அவருக்குப பிடித்தமான மோதகம் அப்பம், அவல், பொரி, கடலை, கரும்பு, மா, பலா, வாழை, நாவற் பழம், விளாங்கனி, இளநீர், தேங் காய், சுண்டல், பிட்டு, பொங்கல், என்ளுருண்டை, தேன், கல்கண்டு, சர்ககரை, தினைமாவு, பால் முதலிய வற்றை வைத்து பூசனை செய்யலாம். கைமேற்பலன் பெறலாம்.

வி என்றால் சிறப்பு. நாயகர் என் றால் தலைவர். இரண்டும சேர்நது விநாயகர் என்ற சொல்லுக்குச் 'சிறந்த தலைவர்' என்பது பொருளா கும். ஓசை, ஒலிகளுக்கெல்லாம் மூலாதாரமாக விளங்குவது பிரண வம் என்ற ஓங்காரமேயாகும். அது அரிய பெரிய மந்திரமாகும். பழம் பெரும் ஞானிகள் அருளாலும், அநு பூதியாலும் உணர்த்தினர். அவர்கள் தாம் கண்டறிந்த ஓங்கார மந்திரத் தின் உருவத்தை யானையின் முகத்தில் கண்டு கண்டு மகிழ்ந்தார்கள். யானை யின் நீண்ட துதிக்கையினைக் காணும் போது ஓம் என்ற மந்திரம் நினைவுக்கு வரும் நினைத்துப் பார்த்தால் இதன் உண்மை புலனாகும்.

பண்ணியம ஏந்தும் கரம்தனக் காக்கிப்,
பாலநிலா மருப்பமர் திருக்[illegible]
விண்ணவர்க் காக்[illegible]
[illegible]கரம் தந்தைதாய்க் காக்[illegible]
கண்ணில் ஆண[illegible] ஆக்கும்
அண்ணலைத் தணிகை வரைவளர் ஆபற்-
[illegible]யனை அகந்தழீஇக்களிப்பாம்
—தணிகைப் புராணம்

விநாயகர் ஐந்து கைகளை உடைய வர். அதனால் 'ஐங்கரன்' என்றும் அழைப்பர். பொதுவில் கடவுளர் யாவருக்கும் நான்கு கைகள் இருக்

கும். ஆனால் விநாயகருக்கோ அந்த நான்கு கைகளோடு துதிக்கையாகிய ஐந்தாவது கையும் உண்டு. ஒரு கையில் மோதகம் என்ற சுவையான உணவு வைத்திருப்பார். மற்றொரு கையில் தேவர்களைக் காக்கப்படைக்கலம் போலத் தந்தம் வைத்திருப்பார். பிறிதொரு கையில் தாய்தந்தையரை (உமா சிவன்) வழிபாடு செய்வதற்காக பாசமும் அங்குசமும் வைத்திருப்பார். மற்றவர்களுக்கெல்லாம் ஒவ்வொரு கையையே பயன்படுத்துவார். அடியார்கள் மீது அவருக்குள்ள பெருங்கருணைத் திறத்தாலே இரண்டு கைகளைக் கொண்டு துன்பத்தைத் துடைத்து வருகின்றார். திருத்தணிகையில் உள்ள விநாயகர் 'ஆபத்சகாய விநாயகர்' என்றழைக்கப்படுகிறார். ஆபத்துக் காலத்தில் காத்து உதவுபவர். அவர்தம் ஐந்து கரங்களிலும் 'சிவயநம' என்ற திருவைந்தெழுத்து மந்திரம் அமைந்திருப்பதைக் காணலாம். இத்தகைய விநாயகரை வணங்கி அருள் பெறுவோம்

விநாயகப் பெருமான், வேத வியாசர் சொல்ல பஞ்ச பாண்டவர்களின் வரலாறான மகாபாரதத்தை மகாமேரு மலையில் எழுதினார் என்றியம்புகின்றது வீரசிங்காதன புராணம்.

" ஆழிசூழ உலக வேந்தர் ஐவர் சீர்
வரைந்த பிள்ளை "

ஒருமுலைப் பாலைப் பருகுகின்றபோது மழலைச்சொல் பேசுபவன் [illegible] உமையம்மை வைத்திருந்த மற்றொரு திரு[illegible]திக்கையாகிய திருக்கையினால் [illegible] போல்ப் பருகுகின்ற விநாயகப் பெருமாளின் திருவடிகளை இறைஞ்சுவாம்.

ஒரு முலை சுரந்த தீம்பால் உண்புழி
மழலைத் தீஞ்சொல்
முருகனுக் கென்றே ஈன்ற முதல்விவைத்
திருந்த மற்றைத்
திருமுலை வருடுவான் போற் றிரள்புழைக்
கரத்தா லுண்ணும்
வரிநுதற களிற்றின செந்தா மரையடி
வணங்கு வாமே.
—(சங்கர நாராயணர்
கோயிற் புராணம்)

எழுதத் தொடங்குவோர் முதலில் பிள்ளையாரின் துணை வேண்டி பிள்ளையார் சுழி இடுகின்றார்கள். பிள்ளையார் வடிவம் ஓங்கார வடிவமாகும். அந்த எழுத்து மருவிப் பிள்ளையார் சுழியானது. எழுத்துப் பணி இடையூறின்றி முடிவான் வேண்டி, 'இறைவனை வேண்டி' (உமையையும் சிவனையும் வேண்டி) போடும் சின்னமே "பிள்ளையார் சுழி" ஆகும்.

அகத்தியர் கங்கை நீரை கமண்டலத்தில் எடுத்துக் கொண்டு வடக்[கிருந்]து தெற்கு நோக்கி வந்தார். [கமண்]டல நீரை அருகி[ல் வைத்]தார். கமண்டார். சிவபூஜை செய்து [கொண்]டிருந்தார். இந்திரன் சீர்காழியில் பூசை செய்து கொண்டிருந்தான். மழையில்லாமையால் வழிபாடுசெய்ய மலர் கிடைக்கவில்லை. நந்தவனம் காய்ந்து கிடக்கிறது. இந்திரன் வருந்தினான். அப்போது நாரதர் வந்தார் அகத்தியருக்கு அருகில் உள்ள கமண்டல நீர் வெளியில் வந்தால் நந்தவனம் செழித்தோங்கும். உடனே இந்திரன் பிள்ளையாரை வேண்டினான்; அகத்தியரின் அருகில் உள்ள கமண்டல நீரை வெளியேற்றித் தரும்படி பணிவுடன் வேண்டிக் கொண்டான். பிள்ளையார் காக்கை உருவெடுத்துக்கமண்டலத்தில் அமர்ந்தார். அகத்தியர் காக்கையை விரட்டினார். காக்கை கமண்டலத்தைத் தள்ளிவிட்டுப் பறந்து போயவிட்டது. கமண்டலத்திலிருந்த நீர் காவிரியாகப் பெருக்கெடுத்தோடியது காக்கையின் பேரில் அகத்தியர் கோபமுற்றார். காக்கை சிறுவனாக உருமாறி நின்றது. சிறுவனைத் தலையில் குட்ட அகத்தி[யர்] ஓடினார். சிறுவன் ஓட[...] பிள்ளை[யார்] விரட்டிக் கொண்[டு] [...]வைக் காட்டினார். [பிள்ளை]யார் தம் [...] வியந்தார். "ஓங்காரப் பொருளை [...] சிறுவன் என்று எண்ணிக் குட்ட வந்தேன். நான் தான் சிறுவன்" என்றியம்பித் தன் தலையில் குட்டிக் கொண்டார், அகத்தியர். உடனே பிள்ளையார், "அகத்தியரே! இன்றிலிருந்து எம்முன் பக்தி

வேஷம் பலிக்கவில்லை!

ஸ்ரீரங்கத்தில் அப்போது உற்சவ சமயம். அன்று கோயிலில் மோகனாவதார சேவை. கூட்டம் பெருகிக் கொண்டிருந்தது. புறப்பாடு ஆரம்பமாயிற்று. மக்கள் மோகனாவதார அலங்காரத்தைக் கண்டு பரவசமடைந்தார்கள். ஆஹா! ஆஹா! என்ன அழகு! பின்னல் அழகைப் பார்! கையில் பூச்செண்டைப் பார்! கழுத்தில் மின்னும் வைர நகையைப் பார்! .....பராசரபட்டர் அப்போது கூட்டத்தில் புகுந்து வந்து கொண்டிருந்தார். அருகில் வந்ததும் பெருமாளைச் சேவித்தார். தன் இரு கரங்களால் தன் இரு கண்களையும் இடுக்கிக்கொண்டு பெருபெருமாளின் கண்ணழகைக் கூர்ந்து கவனித்தார். அவ்வளவுதான்! "ஆனாலும் நும்மால் அவ்விழி விழிக்க வொண்ணாதுகாண்!" என்று கூறிக்கொண்டே வெளியில் புறப்பட்டார். எப்போதும் ரங்கநாயகி தாயாரின் சன்னதியில் வாழ்ந்தவர் அவர். என்னதான் அலங்காரம் செய்தாலும் பெருமாளிடம் தாயாரைப்போல் கருணையுடன் கடாக்ஷிக்கும் அந்தப் பேரழகைக் காண பராசர பட்டரால் முடியவில்லை பெருமாள் போட்ட வேஷம் பட்டரிடம் பலிக்கவில்லை!

திரு. ஆர். சுப்பராவ் — திருக்கோவலூர்.

யுடன் தம் தலையில் குட்டிக் கொள்வோர் கூர்த்த மதியும் சீர்மிகு செல்வமும் பெற்று வாழ்வார்கள்" எனறு கூறினர். அனறிலிருந்து பிள்ளையார் கோயிலுக்குச் சென்ருல் குட்டிக கொள்ளும் வழிபாடு முறை நடைபெற்றுக் கொணடு வருகிறது.

கயமுகன் எனபவன் ஆனைமுக அசுரன். அவன் தவம்செய்து சிவனிடம் பல வரங்களைப் பெற்ருன். இந்த வரத்தைக் கொண்டு இந்திரன், பிரம்மா முதலான தேவர்களைத் தொல்லைப் படுததித கொணடு வநதான். மூன்று வேளைகளிலும வந்து தோப்புக கரணம போட வேண்டும் என்று கட்டளை இட்டிருந்தான் அசுரன்.

தொல்லைப் பொறுக்க முடியாமல் தேவர்களெல்லாம் சிவபெருமானிடம் சென்று முறையீடு செய்தார்கள். சிவபெருமான் பார்த்தார். ஆனைமுக அசுரனை அடக்கி, தேவர்களைக் காத்தருளுமாறு பிள்ளையாருக்கு ஆணை பிறப்பித்தார். அசுரனை அழிக்கப் பூத கணங்களுடன் புறப்பட்டார் பிள்ளையார். கடும்போர் நிகழ்ந்தது. அசுரன் சாகாவரம் பெற்றவனுதலால் பிள்ளையாரால் கொல்ல முடிய வில்லை. பிள்ளையார் தம் வலக் கொம்பை ஒடித்தார். மந்திரங்களை உச்சரிதது அவன் மீது ஏவிவிட்டார். கொம்பு அவனுடைய உடலைப் பிளந்ததே தவிர அவன் சாகவில்லை. பெருச்சாளி உருவெடுத்து மீண்டும் போருக்கு வந்தான். பார்த்தார் பிள்ளையார், "இனிமேல் இவனைக் கொல்ல முடி[illegible]. உண்மையான அறிவினைப் [illegible]ள் புரிவோம்" என்று எண்ணினர். [illegible] படியே அசுரனும் திருந்தினன். [illegible] பனே! நான் உங்க[illegible] [illegible]ன்று இயம்பினன் [illegible] பெருச்சாளி உருவில் வந்தவனின் அ[illegible]ந்தை அடஙகிய காரணத்தால் பிள்ளையார் தமக்கு வாகனமாக ஏற்றுக் கொணடார். தேவாதி தேவர்களெல்லாரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். அசுரனுக்குத் தோப்புக்கரணம் போட்டது போல பிள்ளையாருக்கும் 1008 முறை தோப்புக் கரணம போட்டனர் தேவர்கள். உடனே பிளளையார், "1008 முறை தோப்புக் கரணம் போடவேண்டிய தில்லை. மூன்று தடவை தோப்புக் கரணம் போட்டால் போதும்" என்று கூறினர். அன்றிலிருந்துதான் தோப்புக்கரணம் போடும் வழக்கமே நடைமுறையிலிருந்து வருகிறது.

சிதம்பரம் நடராசப் பெருமான் கோயிலின் மேற்கு வாயில் புறம் உள்ள விநாயகருக்குக கறபக விநாயகர் என்ற பெயருணடு. கற்பக மரம் தேவருலகததுககுச் சொநதமானது. கற்பக மரம் கேட்டதை யெலலாம் தரும் தன்மையுடையது. அதுபோல அடியாாகள் கேட்டதெல்லாம அருளும் தன்மை பெற்றவராதலால் அங்குள்ள விநாயகருககுக கறபக விநாயகர் என்ற பெயர் வநதது.

திருவையாறறு இறைவனை வழிபட சுந்தரர் சேரமான் பெருமாளுடன் செனருர். அப்போது காவிரியில் கரையை அழித்துக் கொணடு ஓடுகின்ற அளவில் நீர்ப்பெருக்கு இருந்தது. ஓடங்கள் செல்ல முடியாத நிலையில் இருந்தன. அப்போது சுந்தரர், 'பரவும் பரிசொன்று அறியேன்' என்று பதிகம் பாடலானர். ஒவ்வொரு பாட்டின இறுதியிலும் 'ஐயாறுடைய அடிகளோ' எனறியம்பிப் பாடினர் இதனையுணர்நத திருவையாறறுத்தல விநாயகர் 'அஞ்சேல்' என எதிர்க்குரல் கொடுத்து குறிப்பில் 'ஓலம்' எனறருளிப் போந்தார். அதனுல ஐயாற்றுத் தலவிநாயகருக்கு "ஓலம எனற விநாயகர்" என்[illegible] வரலா[illegible]

சுந்தரமூர்த்தி சுவாமிகள விருத்தாசலத்தில் உள்ள இறைவனை வேண்டினர். பன்னீராயிரம் பொற்காசுகள கிடைத்தன. இவற்றை மணிமுத்தா நதியில் போட்டு, தமக்குத் திருவாரூர்க் குளத்தில் கிடைக்குமாறு இறைவனிடம் வேணடினர் சுந்தரர். இறைவரும் சம்மதித்தார். ஆற்றிலிட்டப் பொன்னைத்திருவாரூர்க் கமலாலயம அருகில் உள்ள குளத்தில்தேடி எடுத்து விட்டார் சுநதரர். கிடைத்த பொற்காசுகள் சரியான மாற்றுள்ளவைதான என்று ஐயப்பட்டுக் கமலாலயக் குளக்கரையில் உளள கற்பகவிநாயகரிடம சென்றுர் சுந்தரர். பொற்காசுகள சரியான மாற்றுள்ளவைதான என்று விநாயகரைக் கேட்டார் விநாயகர் உரை கல்லில் தேய்த்துக் காட்டி, 'காசுகள் அனைத்தும் சரியான மாற்றுள்ளவை தான்' என்று அறிவித்தார். இதனல் அவருககு, 'மாற்றுரைத்த கற்பக விநாயகர்' எனற பெயர் ஏற்பட்டது.

நல்லா பழிப்பில எழிற்செமபவளத்தை
நாண நின்ற
பொலலா முகத்தெஙகள் போதகமே!
புரமுனறெரிதத
வில்லான் அளித்த விநாயகனே என்று,
மெய்மமகிழ
வல்லா மனத்தன்றி மாட்டாள் இருக்க
மலர்த்திருவே.
—(கபில தேவர்)

திருநாரையூரில் உள்ள பிள்ளையார் பொல்லாப் பிள்ளையார். சுயம்பு மூர்த்தியர்கத் தானே தோன்றிய விநாயகரை வழிபடும் அடியவர்கள் உள்ளத்திலும் வீட்டிலும் திருமகள் குடியிருப்பாள். அளவிலாச் செல்வம பெற்று வளமுடன் வாழ்வார்கள். அவரை வ்ழிபடாதவர்கள மனத்திலும் இல்லிலும மூதேவி வாசஞ்செய்வாள். அவர்கள் வறுமை[illegible] [illegible]பதில் ஐய வேதனையுறு[illegible] [illegible]னவே பிள்ளையாரை வழிபடுதல் எத்துணை இன்றியமையாதது என்பது தெரிய வருகிறதன்றே?





ஐங்கரத்தின் அருள்

இந்து மதம் போற்றிக் கொண டாடும் ஆறு சமயங்களில் ஒன்று காணபத்தியம். இககாண பததியத திலே விநாயகராகிய கணபதியை மூலாதார சக்தியுருவினராகக கொள் வர். அவரை பிரணவம் என்ற ஓங் கார வடிவினராகவும், அவருடைய துதிக்கை அவ்ஓங்கார உருவினைக் குறிப்பதாகவும் ஆன்றோர் கூறுவர். இக்காணபத்திய மார்க்கத்தினர் அவ ரையே பரம்பொருளாகக் கொண்டு வழிபடுபவர்.

மற்ற இறைவா திருவுருவங்களை விட விநாயகர் உருவத் திருமேனி சற்று மாறுபட்டது. அவருடைய தலை யானைத் தலை.உடல் தேவ உடல். கால் பூதக்கால், ஒற்றைக் கொம்பு, ஐநது திருககரஙகள. அவருடைய திருக்கரங்கள் சிறப்பு பேசுவதற்கு அரியவொண்ணுத பெருமையுடை யன.

விநாயகா திருவுருவம பெருங கருணைத் திறததினைப் புலப்படுத்து வதாய அமைந்துளளது. அவா அகரமாகிய எழுததைப போனறவர். பிரணவத்தின் வடிவம் அவர். அவா திருக்கரம் பஞ்ச மநதிரத்தின் உட் பொருளாய் அமைந்துள்ளது.

இவ் விநாயகரின் திருவுருவம்பற்றிப் பல நூல்கள் பலபடப் பேசுகின்றன. எவ்வாறு பேசினும் அவனுடைய ஐங் கரத்தின் சிறப்பினை மேன்மையுடன் பல நூல்கள் சுட்டிக் காட்டுகின்றன. நூலில் அமைத்துப பாடிய அருள் நந்தி சிவாச்சாரியார் அவாகள் தாம் இயற்றிய சிவஞான சித்தியில் அவருடைய திருவுருவம் பற்றிக் கூறு கினறுர்.

ஒரு கோடடன; இரு செவியன;
மும்மதததன;
நாலவாய், ஐஙகரததன, ஆறு
தரு கோடடம பிறைமிதழிற தாழ
சடையான;
தரும ஒரு வாரணததின தாள்கள
உருகோட்டு அனபொடு வணஙகி
—சிவஞான சிததியார்.

எனினும இவருடைய திருககரம பறறிப பலவிதமாக நூலகள எடுத்து இயம்புகின்றன. "எப்போதகத்தும் நினைவார்ககு இடரிலலை கைப் போத கததின கழல" என்று நால்வா நான் மணிமாலை நூல் பேசும். திருப்பாதிரிப் புலியூா வலமபுரி விநாயகா துதி 'துஙகமால் யானை முகமும ஐங்கரமும' என்று கூறுகிறது. இத்தகைய சிறப்பு மிக்க ஐஙகரத்தின சிறப்பினை இனி ஆய்வோம்.

பாரதம் எழுதியது :

விநாயகப பெருமான தனனுடைய திருக்கரத்தால் வாலமீகி முனிவன் சொலல பாரதம எழுதினுர். இதனைப் பல நூல்கள் பெருமையுடன் பேசு கின்றன. "பாரததததை மேருப் பருப பதததிலே எழுதி மாரத்தைத தந்தை யாவா வண்ணஞ்செய்-சீருடையோய் நற்றமிழை யாங்கள நயந்து கற்றுத் தேறு மனத் துறறருளை எங்கட்கு உதவு" எனபாா மகா வித்துவான் மீனுட்சி சுந்தரம்பிள்ளை.

திரு. வ. கோவிந்தன், எம் ஏ,
பதுப்பேட்டை

அருணகிரிநாதர் இககாட்சியினை மிகச் சிறப்பாகத தம் திருப்புகழில் அமைத்துப பாடுகின்றுர். அவர் 'முத்தமிழ அடைவினை முற்படுகிரி தனில் முற்பட எழுதிய முத



வோனே!" என்பார். பெருங்காப்பியமாம் பாரதத்தை தமிழ்ப் படுத்தியவர் பலர். அதில் வில்லியார் குறிப்பிடத்தக்கவர். வில்லியின் பாரதத்தை தம் பாடல்களுடன் சேர்த்துக் கொண்டு அதனை விரிவுபடுத்தியவர் நல்லாப்பிள்ளை. அவர் தம் நூலில்,

நீடாழி யுலகத்து மறைநாலொடைந்
தென்று நிலை நிற்கவே
வாடாத தவவாய்மை முனிரசன
மாபாரதம் சொன்ன நாள்
ஏடாக மாமேரு வெற்பாக அங்கூர்
எழுத்தாணி தன்
கோடாக எழுதும் பிரானைப் பணிந்து
அன்பு கூர்வாம் ஆரோ.
—நல்லாப்பிள்ளை.

என்று அவர் பாரதம் எழுதிய வரலாற்றை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுக் காட்டுகின்றார்.

ஔவையார்க்கு அருளியது :

ஔவையார் விநாயகரிடம் பேரன்பு கொண்டவர். அவர் விநாயகரைத் துதி செய்து கொண்டிருந்த போது இருவர் அவரிடம் வந்தனர். ஒருவர் வெள்ளை யானையின் மீது ஏறி வந்தார். மற்றொருவர் அரசராக வாழ்ந்து வந்த, சேரமான் பெருமான் நாயனார். அவர் வெள்ளைக் குதிரையின் மீது ஏறி வந்தார். அவர்கள் இருவரும் கையிலையை நோக்கி பயணம் செய்து கொண்டிருந்தனர்.

அவர்கள் ஔவையாரையும் தம்முடன் வருமாறு அழைத்தனர். ஆயினும் ஔவையார் அவ்வமயம் விநாயகர் தியானத்தில் ஈடுபட்டிருந்த காரணத்தால் அவர்களுடன் புறப்பட முடியவில்லை. ஆயினும் ஔவையார் தாமும் திருகயிலையை அடைய வேண்டும் என்று விநாயகரை துதி செய்தார். விநாயகர் அகவல் பாடினார்.

விநாயகப் பெருமான் ஔவையாரைத் தம் துதிக்கையால் தூக்கி கைலை சேர்ப்பித்தார். சேரமான் பெருமானும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் திருகையிலை வந்து பார்த்த போது ஔவையார் அங்கிருப்பது கண்டு மிகுந்த ஆச்சரியப்பட்டுப் போனார்கள். அவர்கள் எங்கட்கு முன்னர் எவ்வாறு கையிலையை அடைந்தீர்கள் என வினவியதற்கு,

மதுர மொழிநல் உமையாள்
புதல்வன் மலர் பாதத்தை
முதிர நினைய வல்லார்க்கு அரிதோ?
முகில போல முழங்கி,
அதிர நடந்திடும் யானையும்
தேரும் அதனபின் வரும்;
குதிரையும் காதம், கிழவியும்
காதம் குலமன்னனே!

என்று அருளினார். இவ்வாறு விநாயகரின் திருக்கரத்தால் கைலையை அடையும் பேறு பெற்றவர் ஔவையார். இனி விநாயகரின் திருக்கரங்களின் மேன்மையை ஆய்வோம்.

ஐங்கரங்கள் :

பொதுவாக கடவுளர்க்கு உரிய நான்கு திருக்கரங்களுடன் துதிக்கையையும் உடையவர் என்ற பொருளில் ஐங்கரன், ஐங்கரத்தான் என்ற பெயர்களில் விநாயகர் அழைக்கப்படுகின்றார். இவ் ஐங்கரன் என்ற பெயர் அவருடைய பேராற்றலை விளக்குவதாக உள்ளது.

இவர் ஐந்தொழில் புரிகின்ற தன்மையினை உணர்த்துவதாகவும் இச்சொல் விளங்குகிறது. இவர் தம் ஐந்து திருக்கரங்களிலும் ஐந்து பொருள்களை ஏந்தியுள்ளார்.

இவர் தம் திருக்கரங்களில் ஒன்றில் நீர்க்கலசம் ஏந்தியுள்ளார். இத்திருக்கை படைத்தலுக்கு உரியது என்பர்.

மோதகம் ஏந்தியது மற்றொரு திருக்கரம். அத்திருக்கரம் காத்தல் தொழிலை செய்கிறது. மூன்றாவது திருக்கரம் அங்குசம் ஏந்தியுள்ளது. அக்கரம் அழித்தல் தொழிலை செய்கிறது.

பாசம் ஏந்தியுள்ளது நான்காவது திருக்கரம். அத்திருக்கரம் மறைத்தல் தொழிலை செய்கிறது.

ஒற்றைத் தந்தத்தை ஏந்தியது ஐந்தாவது திருக்கரம். அருளல் தொழிலையும் செய்கிறது. இவ்வாறு ஐந்து திருங்கரங்களும் ஐந்தொழிலை புரிகிறது என்பர். இதனைத் தணிகைப் புராணம் மிக அற்புதமாகப் பாடுகின்றது.

பண்ணியம் ஏந்தும் கரம் தனக்
காக்கிப்
பால்நிலா மருப்பமர் திருக்கை
விண்ணவர்க்கு ஆக்கி, அரதனக் கலச
வியன் கரந் தந்தைதாய்க் காக்கிக்
கண்ணில் ஆணவ வெங் கரிபிணித்
தடக்கிக்
கரிசினேற்கு இருக்கையும் ஆக்கும்
அண்ணலை தணிகை வரைவளர் ஆபற்
சகாயனை அகந்தழீ இக்களிப்போம்.

என்று பாடுகின்றார். இப்பாடல் ஒரு பொருள் செறிந்த கருத்தினை நமக்கு நல்குகிறது. பிள்ளையார்

தம்முடைய துதிக்கை எனும் திருக் கரத்தால் குடம் கொண்டு நீர் கொணர்ந்து தம் தாய் தந்தைய ரைப் பூசிப்பார். பின்னுள்ள இரண்டு கைகளில் பக்தர்களின் நன்மைக் காக பாச அங்குசங்களை ஏந்தியுள் ளார்.

முன் கைகளுள் வலது கையில் ஒடிந்த கொம்பை வைத்துள்ளார். அக்கொம்பால் கயமுகாசுரனைக் கொன்று தேவர்களைக் காப்பாற்றி னார். இடது கையில் மோதகம் என் னும் உணவைத் தமக்காக வைத்துள் ளார்.

எனவே விநாயகர் தாய் தந்தை யர்க்கென்று ஒரு கரமும், தமக் கென்று ஒரு கரமும், தேவருக்கென்று ஒரு கரமும் வைத்துள்ளார். ஆயின் அவரின் பக்தர்களுக்கென்று இரண்டு கைகளைப் பயன்படுத்துகின்றார். எனவே அடியவர்களிடம் அவர் கொண்ட கருணையின் திறம் புலப் படும். இக்கருத்தைத்தான் நாம் முன்னர் கண்ட "பண்ணியம் ஏந்தும் கை" என்ற பாடல் மூலம் கச்சியப்ப முனிவர் அழகாகக் கூறியுள் ளார். இதனால் அவர் அடியவர்களி டம் கொண்ட அருட் திறம் புலப் படும். இவ்விரண்டு காரணங்கள் மூலம் மெய்யடியார் எண்ணிய எல்லா வற்றையும் கொடுக்கும் இறைவன் ஐங்கரன் என்பார் காஞ்சி புராண ஆசிரியர் சிவஞான முனிவர்.

பண்ணியமும் வெண்கோடும்
பாசங்குசப் படையும்
நண்ணிய செங்கைத் தலத்து
நாதா! ஒரு கோட்டுத்
தண்ணிய வெண் பிறைத
தாழ்சடை யாய்! மெய்யடியார்
எண்ணிய எண்ணியாங்கு
ஈந்தருளும் வள்ளலே.

—காஞ்சி புராணம்.

இவ் விநாயகப் பெருமான் பிர ணவப் பொருளாயும் உள்ளான் என்று முன்னர் கண்டோம்.

அங்குசம் ஏந்திய கை—சி
பாசம் ஏந்திய கை—வ
ஒறறைத் தந்தம் ஏந்திய கை—ய
மோதகம் ஏந்திய கை—ந
துதிக்கை ஏந்திய கை—ம

என்று பிரணவப் பொருளையும அமைத்து சிவயநம என்ற பஞ்சாட்சரத்தையும இசசொல குறிபபிடுகின்றது.

யானைப பாகா:

யானையை நடத்துவதறகு பாகன் பாசம அங்குசம போன்ற கருவிகளை ஏந்தியிருப்பான. ஆயின் விநாயகா என்ற யானையிடமே இப்பொருளகள உள்ளன. பாகன் ஏநதிய அடககுவதறகுரிய பொருட்களையே தன் திருக்கரஙகளில ஏநதியுள்ளது வியபபிற்குரியது. எனவே இவரே ஒரு பாகராய உள்ளார் எனலாம். உயிாகளாகிய யானைகளை நடததிச செல்லும் கருணை திறத்தார் என வியந்தார் ஒருவர் யானையின் செயலை, உயிாகளின் செயலாய் உயிாகளின் மேல் ஏற்றி அருமையாகத் தம நூலில் பாடி விநாயகரின பெருமையை மிகச சிறயபாய வெளிப் படுத்துகின்றா சிவஞான முனிவா.

முமமை மலமா மதமுறறுப் போத
முழுத் தறியற வீசி
முகிழ்ததலா அனபின் சஙகிலி யுதறி
முதிர்ந்த அருள் கூடத்து
இம்மென நீஙகி வெளிக்கொடு
புவனம் எனுமகடு வனம ஒடி
எபபாகர்க்கும் அடஙகல வாகி
இயங்கும் உயிர்க்கறிகள்
தமமை விடாது தொடாநது
பிணிபபத் தகும் அங்குசப் பாசம...

—கலைசைச செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ்.

மறறொரு இடததில் இம்முனிவரே ''ஐங்கரச் சிந்தூரத்தின் கழற் செஞ் சரணம் அஞ்சலிததுத் துதிப்போம்'' எனறு அமுதாமபிகைப் பிளளைத் தமிழில பாடி மகிழ்கின்றார். இவருடைய ஐங்கரத்தின பெருமையை அளவிட்டுச சொல்லுதறகரியது. அதனால்தான் அருணகிரியாரும் 'கைத் தலம் நிறை கனி அப்பமொடு அவல பொறி கப்பிய கரிமுகன் அடிபேணி' எனறு பாடுகின்றார். இவர் ஆணவ கன்ம மாய மலஙகளால் உருவாகும் கொடிய தீவினையினினறும் நமமைப் பாதுகாககின்ற பேரருள் கொணடவர்.

ஐங்கரனைப் பணியும் வழி :

இவ ஐங்கரத்தானைத் துதிக்கவேணடிய முறைகளை திருவிளையாடற புராணம அருமையான முறையில் கூறுகிறது.

விநாயகர் எனனும் யானையை நாம நம்முடைய உள்ளமெனும் பெருங் கூடததில், ஊக்கமெனும் கடடுத் தறியினை நிறுவி, வைராக்கியம என னும பெரிய இருமபுச் சஙகிலியால பிணைத்துக் கட்ட வேண்டும். பின் நம் தீவினையையும் அறியாமையையும் கவனமாக உணபித்துப் பக்தியுடன பணிநது வழிபட்டு வந்தால் நம வினைகள யாவும நீஙகி நாம் நலம் பெறலாம எனகிறார்.

உள்ளமெனும கூடத்தில ஊக்க
மெனும்
தறிநிறுவி உறுதியாக
தள்ளறிய அன்பெனும தொடர்பூட்டி
இடை படுததித் தறுகட பாசக
களளவினைப பசுபோதக் கவளமிடக்
களிததுண்டு கருணை யெனனும
வெளள மதம பொழி சிததி
வேதத்தை
நினைந்து வரு வினைகள தீாப்போம்.

—திருவிளையாடற் புராணம்.

எனவே விநாயகப் பெருமானின் மேன்மையை அளவிட்டுக் கூறுதற் கரியது. அவரின ஐங்கரததின் பெருமையைக் கணடோம். அவர் ஐஙகரத்தின் சிறப்பு அடியார்க்கு அருளும் நோக்கத்துடன அமைந்ததே எனில் மிகையன்று.

திருவுங் கலவியும் சீரும் தழைககவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்
கவும்
பருவ மாய் நமதுளளம் பழுக்கவும்
பெருகும் ஆழ்ததுப பிள்ளையைப்
பேணுவாம்.

—விருத்தாசலப புராணம்.

எனவே ஐங்கரத்தின் சிறப்பினை உணர்ந்து அவர் அருள மேனமையை அறிவோம. ★

ஈஸாவாஸ்யம் இதம் ஸர்வம்

ஓம்! ஈஸாவாஸ்யம இதம் ஸர்வம்
யத்கிஞ்ச ஜகத்யாம் ஜகத்
தேன த்யக்தேன புஞ்ஜீதா:
மா க்ருத: கஸ்யஸ்வித்தனம்.
—ஈஸாவாஸ்ய உபநிஷத்.

“உலகில் உள்ள உயிர்கள் அனைத்தும் ஈஸ்வரனின் படைப்பு ஆகையால், எப்பொருளையும் அவனுக்கு அர்ப்பணித்து விட்டு, கிடைப்பதை பகவத் பிரஸாதமாக நுகர்ந்து கொண்டிரு. யாருடைய பொருளிலும் நாட்டம் கொள்ளாதே”—இதைவிட சோஷலிஸ தத்துவம் வேறு ஒன்று வேண்டுமா? காந்திஜி கூறிய ‘தர்ம கர்த்தா’ கோட்பாடும் இதுவே யன்றோ.

கர்ணன் கேட்டவருக்கெல்லாம் இல்லை எனது வாரி வழங்கிய வள்ளல். இறுதியாக மோக்ஷத்தை அடைய தனது தான தர்மத்தின் பலனையே அன்றோ தானம கொடுத்தான்


“உண்ணலும் உனதே; உயிர்த்தலும உனதே
உடலுயிர் மனமெல்லாம் உனதே
எண்ணலும் உனதே; இச்சையும் உனதே
என்செயற பயனெலாம் உனதே”

என்று கண்ணன் வந்து யாசித்த போது, தான செய்த நற்செயலின் புண்ணிய பலன்கள் அனைத்தையும் தானம செய்து வீடு பெற்றான்.


திரு. ஜி. ஆர் சுப்ரமணியன்,
மதுரை.

சந்திர வம்சத்தைச் சேர்ந்த மன்னன் ரந்திதேவன யாக, யக்ஞாதி காரியங்களைச் செய்து கொண்டு “தேஹி” என்று தன்னை நாடி வந்தவர்களுக்கு “நாஸ்தி” என்று சொல்லாமல கொடுத்தான். நாமனைவரும் இறைவனிடம என்ன வேண்டிக் கொள்வோம். எல்லா இன்பமும் எனக்கு கிடைக்கட்டும் என்றுதானே. ரந்தி தேவனோ “எல்லோருடைய துன்பமும் எனக்கு வந்து சேரட்டும் அதன் மூலம் சகல ஜீவராசிகளின் துன்பங்களும் விலகிச் செல்லட்டும் “ஆர்த்தம் பிரபத்யே” என்று இறைவனை வேண்டினான். (ஆர்த்தி என்றால் துன்பம்).

சகல ஸௌபாக்யங்களுடன் வாழ்ந்த அவன் வறுமையில் வாடிய போதும், பிறரிடம் சென்று யாசிக்காமல், தன்னிடம் பரம கருணையுடன் மக்கள் கொண்டு வந்து கொடுத்த கூழைக் கூட பிராமணனுக்கும், பின் நாலாம் வர்ணத்தவனுக்கும் கொடுத்து விட்டுத் தான் பட்டினி கிடந்தான். தன்னை யாசித்தவனை “நாராயண ஸ்வரூபமாகவே கண்டான், தன்னிடம் கொஞ்சம் மிஞ்சியிருந்த கூழையும் கூட அவன் சாப்பிட முடியாமல், நாய்களோ



பூதேவி, ஸ்ரீதேவியுடன் ஸ்ரீ விஷ்ணு (கதையில்)
திரு. வி. முத்துராமன் - கோவை



ஓம் விகடாய நம:

ஸ்ரீ மகா கணபதியை ஆராதித்துப் பூஜை செய்யும்போது மஞ்சள் பிள்ளையாரை ஆவாஹனம் பண்ணுகையில் புஷ்பம், அக்ஷதை எடுத்துக் கொணடு 'ஓம் ஸுமுகாய நம' எனறு தொடஙகும ஷோடச நாமக்களால் அர்ச்சனை செய்கின்றோமே! அதில வரும் ஆறாவது நாமாவே 'ஓம் விகடாய நம:' என்பதாகும். இந்தப பெயரின காரணத்துககோர் வரலாறுண்டு!

காஞ்சீபுரத்தில் ஸ்ரீ ஏகாம்பரேஸ்வரர் ஆலயத்தில் 'விகடசககர விநாயகர்' எனற பெயருடன் ஒரு விநாயகரிருக்கிறார்! தக்ஷன யாகம் செய்தான். பரமேஸ்வரனை யாகத்துக்கு அழைக்கவேயில்லை! பார்வதி தேவியானவள தந்தைப் பாசம் மேலிட, தாமாகவே யாகத்துக்குச் சென்றாள். அவமதிப்புக்காளானாள். சிவனார் வெகுண்டு தக்ஷன செய்யும யாகததை அழிக்கும்படி வீரபத்திரரைப பணித்தார். வீரபத்திரரும தக்ஷனின் யாகத்தை அழிக்கச் சென்றார்.

தக்ஷனுக்கு உடந்தையாயிருநது மகாவிஷ்ணு தன் சக்கராயுதத்தை வீரபத்திரா மீது பிரயோகிததார். அதனை வீரபத்திரர் தரித்திருநத கபாலம் கவ்விக் கொணடது! அதைத் திரும்பப பெற விஷ்ணுவின சேனைத் தலைவரான 'விஷ்வக்ஸேனா' வீரபத்திரர் முன் விகடக் கூத்தாடினார்! அனைவரும் சிரித்தனர். கபாலமும் சிரித்தது! திருமாலின் சக்கரம் வெளியே வந்தது!

விஷ்வக்ஸேனர் அதனை எடுத்துக்கொள்வதற்கு முனனமேயே விநாயகர் அதனை எடுத்து மறைத்துக் கொண்டார்! இப்போது விநாயகப்பெருமானை மகிழ்விக்க, அவர் முன் விகடக் கூத்தாடி, சக்கராயுதத்தைத் திரும்பப் பெற்றார்! விகடக்கூத்தைக் கண்டு மகிழ்ந்து சக்கராயுதத்தைத் திருப்பியளித்ததால் விநாயகப்பெருமானுக்கு 'விகடசக்கர விநாயகர்' என்ற பெயர் உண்டாயிற்று!

— மயூரப்ரியா

னுக்குக் கொடுத்து விட்டான். நாய்கள், நாய்க்காரன் எல்லாமே அவனுக்கு ஈஸ்வரனாகவே தோன்றியது. நாய்களின் உருவத்தில் இருககிறவன், நாய்களை வைத்திருக்கும் வேடனாக இருககிறவன், இருவரையுமே ருத்ரத்தில் பரமேஸ்வரனாக சொல்லப்பட்டிருக்கிறது. ரநதிதேவன் உண்மையில் தான் காணும் அனைத்தையும் ஈஸ்வர ரூபமாகவே பார்த்தான்.

பகவான் கிருஷ்ணரும் கீதையில்,

"சுனி சைவ ஸவபாகே ச
பண்டிதா: சமதர்சின:"

என்று சொல்லியிருக்கிறார். எல்லாமே ஈஸ்வர ரூபம்தான் என்ற "ஈஸாவாஸ்யம் இதம ஸாவம்" என்ற உபநிஷத் வாககியமும இதையே சொல்கிறது.

எல்லாமே உன்னுடையதுதானே. அநத எண்ணம் வந்து விட்டால் பிறருடைய பொருளைக் கவர வேண்டும் என்ற எண்ணம் வருமா? சிநதிகள் மகாத்மாவாகப போறறும தாதா வாஸ்வானி தனனிடம உள்ள பொருள்களைப் பிறருக்குக் கொடுக்க இறைவன் அவற்றைத் தனக்குக கடனாகத் தந்திருப்பதாகக் கூறுவார்.

பவஹரிபாபா என்ற ஒரு சாது இருந்தார். ஒரு நாள் அவருடைய வீட்டில் திருடன் புகுந்து அவரது உடமைகளை எடுத்துச செல்ல முயன்றான். தூங்கிக் கொணடிருந்த பாபா விழித்துக் கொண்டதும, திருடன் தப்பித்தோம், பிழைத்தோம என்று, ஓட ஆரம்பித்தான. பாபாவும் அவனைத் துரத்திக கொணடு ஓடினார்.

'ஓ! திருடனே! நாராயணா, இந்த மூட்டையை வைத்துவிட்டுப் போய் விட்டாயே. இதனையும் எடுத்துக் கொள்' எனறு திருடன் மூட்டையாகக் கட்டி வைத்திருந்த தனது வெள்ளிப் பாத்திரங்கள் முதலானவற்றை அவனுக்குக் கொடுத்தாராம். திருடன் அவர் காலில் விழுந்து மன்னிப்பு

கேட்டதோடு, திருட்டுத் தொழிலை விட்டுத் திருந்தியதாகக் கூறுவதுண்டு.பாபா திருடனை மோசக்காரனாகப் பார்க்காமல் "நாராயணாகவே" பார்த்தார்.

"ஆண், பெண் சிறுடோரனைவரையும் நாராயணன் எனும் எண்ணும் வகைபுரி இறைவா" என்பது பக்த துக்காராமின் பிரார்த்தனையாகும். ஞானிகளிடம்தான் இந்த சமதர்சனம் இருப்பதைக் காணலாம். அதனால்தான், "இராமா நீ காட்டுக்குப் போ; என் மகன் பரதன் நாட்டை ஆளட்டும்" என்று கைகேயி கூறியதும், "என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ" என்று இராமன் முகமலர்ச்சி அடைந்தான் என்றால், அதுவும் உபநிஷத் கருத்தை தெளிவுறுத்துகிறது அல்லவா?

ஈஸ்வரனது அபிகாரத்தை உணர்ந்து தியாக மனப்பான்மையுடன் வாழ்ந்து வருவோமேயானால் பிறரது போக போக்கியங்களைக் கண்டு பொறாமைப்படக் காரணம் இல்லாது போகும் என்பதையே நாம் மேலே காட்டிய நிகழ்ச்சியிலிருந்து அறிகிறோம். அதுவே "மா க்ருத: கஸ்ய ஸ்வித் தனம்" என்ற வாக்கியத்தால் கூறப்பட்டுள்ளது.

"ஜகத்" என்றால் உயிர் வாழ்பவை; உயிர் உள்ளவை என்று அர்த்தம். உலகில் உள்ளவை அனைத்தும் உயிர் உள்ளவைதான். ஜடப்பொருள் என்று எதுவுமே இல்லை. உயிர் ஒன்றில் உறங்கிக் கிடக்கிறது என்றால், மற்றொன்றில் வெளிப்படுகிறது. எங்கும், எல்லாவற்றிலும் கடவுள் வசிக்கிறார்; வியாபித்திருக்கிறான். அவரே ஸர்வாந்தர்யாமி; ஸர்வ வியாபி; ஸர்வ வல்லமை உடையவராக இருக்கிறார். அவர் இல்லாத இடம் உண்டா? கல்லினுள் தேரைக்கும், கருப்பை உயிருக்கும் ஜீவன் அளிப்பது அவரே அன்றோ.

தேவி தானே சகல உயிர்களுக்கும் உணவளித்துக் காப்பதாக நினைத்துக் கொண்டிருந்தாள். ஈஸ்வரன் அவளது இந்த எண்ணத்தைப போக்கத் திருஉள்ளம் கொண்டார். பகவானுககுத் தெரியாமல் ஒரு சம்புடத்தில் தேவி ஒரு எறும்பை போட்டு மூடி, ஈஸ்வரனுக்குத் தெரியாமல் மறைத்து வைத்தாள். இந்த எறும்புக்கு ஈஸ்வரன் எப்படி உணவு அளிக்கிறான் பார்ப்போம் என்று! என்ன ஆச்சர்யம்! மூடியிருந்த அந்த சம்புடத்திற்குள் அந்த எறும்புக்குச் சிறு துளி அரிசியை இறைவன் போட்டு வைத்திருந்தான். சம்புடத்தைத்திறந்து பார்த்ததேவி அதி ஆச்சர்யமடைந்து, ஈஸ்வரனே சகல ஜீவராசிகளையும் காக்கின்றான் என்ற உண்மையை உணர்ந்து கொண்டாராம்.

"வேறு படுஞ் சமயமெலாம புகுந்து
பார்க்கின்
விளங்குபரம் பொருளே நின் விளை
யாட்டெல்லாம்
மாறுபடுங்கருத்தில்லை முடிவில்மோன
வாரிதியில நதித்திறள்போல் வயங
கிற்றம்மா!"

"ஜகத்யாம் ஜகத்" ஸ்தூல சிருஷ்டியின் உதரத்தில் சூக்ஷ்ம ஸ்ருஷ்டி மறைந்துள்ளது. கடவுள் வீற்றிருக்கும் இடமும் அதுதான். வெளிப் போர்வை கவர்ச்சிகரமாக இருப்பதால் உள்ளே நமக்குக் கவனம் செல்லுவதில்லை. முட்டத்தை விலக்கிப் பார்த்தால் இறை தரிசனம் தெரியும். நாமெல்லாம் மாயைக்கு ஆட்பட்டவர்களே. மாயத்திரையை நீக்கி விட்டுப் பார்த்தால் இறைவனைக் காண முடியும். சிதம்பர ரகசியம் இதைத்தான் காட்டுகிறது.

"வாஸுதேவ: ஸர்வமிதி" எனற கீதையின் வாக்கியத்திற்கும், உபநிஷத் வாக்கியத்திற்கும் பொருத்தமிருக்கிறது. இந்த அண்ட சராசரங்கள் அனைத்துமே "வஸுதைவக குடும்பமே"—"யாதும் ஊரே; யாவரும் கேளீர்" என்ற தமிழ் நூல் கூறும் கருத்தும் இதுவே.

பாரதியின் நோக்கிலும் இதைக் காணலாம்.

"தீக்குள் விரலை வைத்தால நந்தலாலா நினைத் தீண்டும் இன்பம் தோன்றுதையே" என்று கண்ணன் பாட்டிலே தீயின் ஜ்வாலையிலும் பாரதி இறைவனைக் காண்கிறான்.

சுந்தரரை நீற்றறையில் போட்ட போதும், இறைவன் நாம ஸ்மரணத்தில் இருந்ததால், அவருககு, தீ சுடாமல், குளிர்ச்சியாக இருந்ததாம்.

"மாசில் வீணையும், மாலை மதியமும்
வீசு தென்றலும், வீங்கிள வேனிலும்
மூசு வண்டறைப் பொய்கையும்
போன்றதே
ஈசன் எந்தன் இணையடி நிழலே"

என்று அவனது கருணையை உணர்ந்து போற்றுகிறார்.

"ஈஸாவாஸ்யம் இதம் ஸர்வம் இறைவன் இல்லாத இடம் எது "எங்கேடா உன் ஹரி?" என்று பிரஹலாதனிடம் ஹிரண்யாக்ஷன் கேட்ட போது,

"தூணிலும்உளன்; துரும்பிலும்உளன்
நீ சொன்ன சொல்லிலும் உளன்"

என்று ஹரியின் பெருமையை தந்தைக்கு உணர்த்தவில்லையா?

"யஸ்மின ஸர்வபூதானி
ஆத்மைவாபூத் விஜானத:
தத்ர கோ மோஹ: க: சோக:
ஏகத்வ மனுபச்யத;"


எவரது நோக்கில் ஆன்மாவே ஸர்வ பூதங்களாக, காணும் பொருள்கள் அனைத்திலும் ஒருமைக் காட்சி தென்படுகிறதோ, அவனுக்குமோஹம் ஏது? சோகம் ஏது? ஆகவேதான் "ஆத்மா ஏவ ஸர்வ பூதானி" என்பதும், "ஈஸாவாஸ்யம் இதம் ஸர்வம்" என்பதும் ஒன்றே. ஒன்று ஆன்ம ஞானத்தைக் குறிக்கிறது. மற்றொன்று பக்தியைக் குறிக்கிறது.

அவனே பூரணன். ஆகவேதான் முழுமையானவனாக,பரப்ரம்மத்தைக் காண்கிறோம். அந்தப் பூரணனிடம் ஐக்யமாகிவிடடால் அதுவே சாந்தி தரும்.

"ஓம்! பூரணமத: பூர்ணமிதம்
பூர்ணாத் பூரண முதச்யதே
பூர்ணஸ்ய பூர்ணமாதாய
பூர்ணமேவாவசிஷ்யதே"

தோன்றா இறைவன் பூரணப் பொருள். அவனே பிரம்மம். தோன்றும் வையகமும் பூர்ணமே.இவ்வையகம் இறைவனிடமிருந்து தோன்றினாலும் பூர்ணம் பூர்ணமாகவே உள்ளது.

ஓம் தத் ஸத்!



நாததன விநாயகர்
திரு வி. முதது ராமன்-கோவை.

றும் நிலே, எங்கும் நிறைந்த தன்மை இவை இரண்டும் பகதர்களின தனிப் பெரும் தெய்வமாகப் பிளளேயாரை ஆக்கியிருககின்றன.

ஆவணி மாத சதுர்த்தி திதியில் அவருடைய சதுாத்தி விழா வரு கிறது. அனறைய நாளில் பிளளே யார் வழிபாடு நடைபெருத வீடே இருகக முடியாது. நாடே விழாக் கோலததில மூழகி மகிழ்கிறது. சிறிது சிந்தித்தோமாஞல நம் முன ஞோகளின அறிவார்ந்த இவ்விழா ஏறபாட்டின நுட்பம் புலப்படும. அப்பம், அவல, கடலே, பொரி, கரும்பு, வெல்லம, பால், தேன, இள நீர், எள, பயிறு, முப்பழம், மோத கம் எனறு பலவும் படைதது வணங் கும அநத நாளே சிறியோரும, பெரி யோரும் ஆவலுடன் எதிர்பாாத் திருபபர். குடை தாங்கிய மண் பிள் ளேயாரை கடைவீதியினினறும் தத் தம வீடுகளுககு வாஙகிச் செல்லும் போதும, வழிபாடு முடிந்ததும நீர் நிலேகளில் அவரைச் சேர்த்து விடுவ தறகாக கொணடு செல்லும் போதும் மக்களிடையே காணும் உற்சாகம் தான் என்னே! அநத உற்சாகத்தோ டேயே பகதி உயர்வும வளர்வதை யாரால மறுக்க முடியும்? காம வயப் பட்ட சாதாரண மக்களும கடவுளு ணர்வில் திளேக்கவே ஒவவொரு ஆண டும அவவப்போது வரும் விழாக்களே

விநோத பிள்ளேயாரைப் போற்றுவோம்!

சிவன பெற்ற பிளளேகளிலே ூத்த பிள்ளே நம் நெஞசஙகளில் ிறைநத அருட்பிள்ளே. அவரை ணங்கினுர்க்கு இலலே ஒருதொல்லே. ளிதில் கிட்டி வரும முகதி நிலே. ந்த பிள்ளேயாருககுக் கோவிலில ாத ஊரே தமிழ்நாட்டில் இல்லே.

மஞ்சள், சநதனம், மண், பசுஞ் ாணம் ஆகியவற்றில் ஏதாவதொன் றைக் கைப்பிடி அளவுக்குப் பிடித்து வைத்தால கூட போதும, பிள்ளேயார் தோன்றுவதற்கு. ஆற்றங்கரை, மரத் தடி, நடைபாதை, முச்சந்தி, நாற் சந்தி, மருததுவமனே, கல்விசசாலே, தொழிலகம் எனறு எங்கும் இடம் பிடித்துக் கொணடு காட்சி தருபவர் தான் பிள்ளேயார். எளிதில் தோன்

திரு. வே. சோமசுந்தரம்—சென்னே-61.

நம் ஆன்ஞேர் உணடாக்கி உள்ளனர். அத்தகைய உன்னத விழாககளில் ஒப்புயர்வறறதே பிள்ளேயார் சதுர்த் தியாகும்.

தமிழ்நாட்டில பிள்ளேயார் வழி பாடு ஆறு அல்லது ஏழாம் நூற்ருண் டிலேயே தொடங்கியதாகச் சொல் லப்படுகிறது. குறிப்பாக அகத்திய ரால் உணடாக்கி வழிபடப்பட்ட வாதாபி கணபதியை இறுத்தொண்

டர் திருச்செங்காட்டங்குடிக்குக் கொண்டுவந்து அமைத்த கோயிலே தமிழகத்தில் பிள்ளையாருக்கு ஏற்பட்ட முதற்கோயில் என்பர். அவ்வாறு தொடங்கிய வழிபாடு பெருகிய போது 'காணுபத்தியம்' என்ற தனிநெறியாகவே போற்றப்பட்டது. ஆயினும் காலப்போக்கில் சைவத்தோடு ஒன்றிவிட்டது. பிள்ளையாரை வணங்கியபின்பே பிற எத்தெய்வ வழிபாடும் செய்யப்பட வேண்டும் என்ற நியதியும் பிறந்தது.

பிள்ளையார் நின்றவாறும், அமர்ந்தவாறும், நடனமாடியவாறும் பலநிலைகளில் காட்சி தருகிறார். யானைமுகம், மனித உடல், பூதங்களின் கால்கள் இவை அவருடைய யாவுமாகிய தன்மையைக் காட்டுகின்றன. நான்கு கரங்களோடு துதிக்கையும் சேர ஐங்கரனாகத் திகழ்கிறார். ஐங்கரத்திலும் எழுத்தாணி (கொம்பு) கலசம், பாசம் அங்குசம், கனி என்பவற்றைக்கொண்டுள்ளார். சிவபிரானைப்போல் செஞ்சடை, நெற்றிக்கண், எட்டுத்தோள்கள் உடையவர் எனவும் கூறுவர். பேழை வயிற்றின் மீது புலித்தோல் ஆடை பூண்டுள்ளார். குறுகலான கால்களில் கிண்கிணி, பாதசாலம், நூபுரம், சதங்கை அணிந்துள்ளார். அறுகு, கொன்றை, எருக்கு, கரந்தை போன்ற பூக்களைச் சூடியுள்ளார். அவரின் துதிக்கை வலப்புறம் திரும்பி இருந்தால் வலம்புரி எனவும், இடப்புறம் திரும்பி இருந்தால் இடம்புரி எனவும் சொல்லப்படும்.


பிள்ளையார் சதுர்த்தி அன்று ஔவையார் அருளிச்செய்துள்ள 'விநாயகர் அகவல்' ஓதுவதென்பது தமிழகத்தில் வழக்கமாகி விட்டது. அத்திருப்பனுவலில் பிள்ளையாரை விளிப்பதாக வரும் அவாதம் திருக்கோல வர்ணனை ஈண்டு அனுபவிக்கத் தக்கது.

"சீதக களபச் செந்தாமரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும்
பூந்துகிலாடையும்
வண்ண மருங்கில் வளர்ந்தழ
கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக்கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடி கொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன்
முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழொளி
மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!"

பிள்ளையார் குழந்தைகளும் மகிழ்ந்து நோக்கும் பிள்ளைமைத் தோற்றம் கொண்டவர். எவரும் வணங்கும் தனித்தலைமைப் பூண்டவர். அவருக்கு இலங்கும் திருநாமங்களோ எண்ணற்றவை. தனக்கு மிஞ்சிய தலைவனில்லாதவன் என்பதால் விநாயகன் என்றும், கணங்களுக்கெல்லாம் அதிபதியாகையால் கணபதி என்றும், துன்பத்தடைகளைப் போக்குபவராதலால் விக்கினேசுவரர் என்றும், நம்புவோர்க்கு வெற்றி தருபவராதலால் சித்திதாதா என்றும், எலிவாகனர் என்பதால் ஆகுரதன் என்றும் இன்னும்பலவாறுகவும் போற்றி வழிபடப்படுகிறார்.

அவர் பிறப்பு குறித்தும் வேறுபட்ட கதைகள் சொல்லப்படுகின்றன. ஒருகதை, 'பார்வதி குளிக்கும் முன் பிடித்து வைத்த அழுக்குருண்டையே' பிள்ளையார் எனச் சொல்கிறது. பார்வதியால் 'யார் வந்தாலும் குளிக்குமிடத்திற்குள் விடக்கூடாது' எனக் கட்டளையிடப்பட்ட அழுக்குருண்டை பாதியில் பரமசிவன் வர அவரை உள்ளே போகக்கூடாதெனத் தடுத்தது. அதனால் கோபமுற்ற சிவன் அதன் தலையை வெட்டி வீழ்த்தினர். பின் பார்வதி மூலம் தம் மகனே அவ்வழுக்குருண்டை எனத்தெளிந்த சிவபெருமான்,'இடது பக்கம் சாய்ந்துறங்கும் மிருகத்தின் தலையை எடுத்து வந்து வெட்டுண்ட உடலோடு சேர்க்குமாறு' எழுந்த அசரீரியின்படியே செய்தார். அவ்வாறுபிறந்தவரே பிள்ளையார் எனப்படுகிறது.

இனி இன்னொரு கதை சொல்வதைக் கவனிப்போம். ஒருமுறை சிவனும், உமையும் கைலாயத்தே வசந்த



அருள்புரியக் காத்திருக்கும் அழகு பிள்ளையார்கள்
திரு. எல். ஜி. சேஷகிரி - கோவை

மண்டபத்திலிருந்த யானைமுகம் போன்றிருந்த பிரணவத்தின் ஓவியத்தைக் கண்டு களித்தவாறு உலவினராம. அப்போது பெருக்கெடுத்த ஆனந்த மிகுதியால் களிறும் பிடியுமாகி இன்புற்ற நிலையில் தோன்றினார் பிள்ளையார். இககதையைக் கருத்தில் கொணடவராய் திருஞான சம்பந்தர் பாடிய பாடல் பினவருமாறு:

"பிடிதன் உரு உமைகொள மிகுகரியது வடிகொடுதனதுஅடிவழிபடுமவர் இடர் கடிகண பதிவர அருளினர் மிகுகொடை வடிவினர் பயிலவலிவலம் உறை இறையே"

பிள்ளையாரின தோற்றம மற்ற தெயவஙகளின் பிறபபைக் குறித்துச் சொல்லபபடுவதறகு மாறாக விநோதமாக அமைநதுளளது. அவ்விநோதமே ஒருவகையில் பிள்ளையாரின் இறைத்தன்மையை விளககுவதாயும் உள்ளது. இறைவன் என்பவன நம் அறிவால் அறியும் பெற்றியனல்லன். நம் அறிவிற்ககப்படாத அற்புதன் அவன. அத்தகைய வன் பிறபபு இவ்வாறுதான் இருக்கவேண்டுமென்றோ நாம் எதிர்பார்க்க முடியாது. அதனாலேயே உலக உயிர்கள் உய்யும் பொருட்டுப் பல வடிவினனாக இறைவன தோன்றுவதாகக் கூறும் போதெல்லாம் நம் முன்னோர் 'அவதாரம செயதான்' எனறுரைப்பர். அவதாரம் என்றால் 'உலகை உய்விககும பொருட்டு ஆணடவன் தன் முழுமுதற தன்மையினின்றும் இறங்கி வருதல்' எனப் பொருளாகும்.

பிள்ளையாரின் தோறறம்தான் ஒரு விநோதமெனறால் அவரின் திருவிளையாடல்களோ எணணிறந்த விநோதங்களாக மிளிர்கின்றன.

வியாச பகவான் மகாபாரதத்தைச் சொல்லிவர அதைத் தம தந்தங்களில ஒன்றாலேயே மகாமேரு மலையில எழுதினாராம் பிள்ளையார்.

'தந்தையேயாயினும் தம்மைத தொழாது தொடங்கப பெறும் வினை தோல்வியுறும்' என்பதை உலகோர்க்கு உணர்த்தியவிதம் சிறப்புடையதாகும். ஒருமுறை முப்புரங்களைக் கைப்பற்றி அடாத செய்து வநத அரக்கரை அழிப்பதற்காக இரதமொனறில் ஏறிப் புறப்பட்டார் சிவபெருமான். அப்போது அவர் 'முதற்கண் பிளளையாரைத்தொழுதே ஈணடுவினைககண் ஈடுபட வேண்டும்' என்பதை மறநது விட்டார். அதனால் அவர் ஏறிய இரதமானது தூள் தூள் ஆகச் சிதறிப் போய்விட்டது. தவறுணர்ந்த சிவபிரான் பிள்ளையாரை வணங்கியபின் பிறிதொரு தேரிலேறிச சென்று நினைத்த காரியத்தை முடித்தார்.

சுப்பிரமணியா என்னன்னவோ செய்து பாாத்தும வள்ளியின் மனதைத் தமபால் கவரமுடியாமைகண்டு கலங்கினார். பின்னர் தம தமையன் பிள்ளையாரை வழிபட்டு அவர் துணை கொணடு வள்ளியைச் சேரப் பெற்றார்.

மேற்கூறிய மூன்று நிகழ்ச்சிகளையும் நினைவூட்டும் அருணகிரியாரின் திருப்புகழ் பாடலடிகள் வருமாறு:




பறக்கும் விநாயகர்
நலகொண்டா காகதீய சிற்பக்கலை

முத்தமிழ் அடைவினை முற்படுகிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவனுறைரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும
அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே!"

பிள்ளையார் மாங்கனி பெற்ற கதை யாவரும் அறிநததேயாகும். சிவபெருமான் உலகை யார் முதலில் சுற்றி வருகிறார்களோ, அவர்களுக்கே அக் கனி உரியதென்று கூற முருகப் பெருமான் உடனே மயிலின் மீதேறி அவனியை வலம் வரப் புறப்பட்டு விட்டார். பிள்ளையாரோ, பார்வதி பரமசிவனைச் சுற்றி வந்து மாங்கனி யைப் பெற்றதன் மூலம் 'பிள்ளை களுக்கு தம தாய்தந்தையரே அனைத் துலகும் ஆகுவர்' என்பதை நிருபித துக் காட்டினர்.

பிளளையாருக்கு எலி வாகனமாய் அமைந்தது குறித்தும் வேறுபட்ட கதைகள் உண்டு. ஸ்கந்த புராணத் தில் காணப்படுவதாவது: மகரிஷி சௌபரின் மனைவியிடம் கிரௌஞ்சன் என்ற அசுரன தவருக நடக்க முயன் ருன். அப்போது அவள் அஞ்சி கூச்ச லிட்டாள். அதையறிந்து அங்கே வந்த முனிவர் அசுரனை எலியாகு மாறு சபித்தார். உடனே அசுரன் அவரிடம் மன்னிப்புக் கோரினை. அதற்கு அவர் மனமிரங்கி பிள்ளை யாரால் அவன் சாபவிமோசனமா கும் என்ருர். அவவாருக எலியாக மாறி பலருக்கும் தொல்லை கொடுத்து வந்தவனை பிள்ளையார் அடக்கி வாகன மாக்கிக் கொண்டார்.

இனி, பிறிதொரு கதையினை க காண்போம்: தேவர்களுக்கும், மற்ற வர்களுக்கும் ஒரு காலத்தில் கயமுகா சுரன் என்பவன் துன்பம் இழைத்து வந்தான். அவனேடு பிள்ளையார போரிட்ட காலத்தில் இறுதியாக பெருச்சாளி வடிவில் போருக்கு வநத வனை அடக்கி தம் வாகனமாக்கிக் கொண்டார். தேவரும் பிறரும் அசு ரன் முன் பயத்தினல் போட்டுவந்த தோப்புக்கரணத்தை அதற்குப் பிறகு பிள்ளையாரின் முன் நன்றியோடும் வணக்கததோடும செய்து வரலா யினர்.



அஷ்டாங்க விமானம் - திருக்கோஷ்டியூர
சனமிஷ்பை - தஞ்சை

பிள்ளையார முனனிலையில் தோப் புக் கரணம் போடும் வழக்கம் எழுந் தது குறித்து இன்னெரு வேடிக்கை யான கதையும் உளளது. ஒருமுறை மகா விஷ்ணுவின் சக்கரத்தைப் பிடுஙகி பிள்ளையார வாயில் போட் டுக கொண்டு விட்டார். அதைப் பக்குவமாக வெளிக கொணர்வதற் காக விஷ்ணு தன் நான்கு கைகளா லும காதுகளைப பிடித்துக் கொணடு ஆடலானர். அதைப்பார்த்த பிளளை யாா விழுந்து விழுநது சிரிததார். அப்போது சககரம் அவர் வாயினின் றும் வெளியே வநது கீழே விழுந்தது. உடனே திருமால் அதனை எடுத்துக் கொண்டு விட்டார். அவ்வாறு திரு மாலால் பிள்ளையாரின் முன் முதன முதலாக போடப்பட்ட தோப்புச் கரணமே பின் எல்லோராலும் வழி பாட்டின் போது செய்யபபடுகிறது தோப்புககரணம என்ருல் கைகளால்

ாதைப் பிடித்துக் கொள்வதெனப் பொருள்.

பிள்ளையாரின் அருள் கனிந்த திருவிளையாடல்களில் இன்னும் சிலவற்றைக் காணபோம்.

பண்டாசுரனை வதம் செய்யப்புறப்பட்ட அமபிகையை அசுரனல் நிறுவப்பட்ட விக்னயந்திரம் தடைசெய்தது. அதைநீக்கும்படி பிள்ளையாரை உதவி வேண்டினள். அவரும் அதைப் பொடியாக்கி அசுரனைக் கொல்ல தேவிக்கு உதவினர்.

சூரியன் தன ஒளி குறையாதிருக்கும் பொருட்டுத் தென்மணடலத்தில் அர்க்க கணபதி வடிவத்தில் ஆராதிப்பதாகச் சொல்லப்படுகிறது.

சந்திரன் தன் வடிவழகில் மயக்கம் கொணடு பிள்ளையாரை அவர் தோற்றம் குறித்துப் பரிகசித்தான். அதனல் அவனை யாருமே பார்க்கலாகாதெனச்



சபிக்கப் பட்டான். தவறுணர்ந்து சாபவிமோசனம் வேண்டிய போது நான்காம் பிறைச்சந்திரனை மட்டும் யாரும் காணலாகாதென சாபம் மாற்றியுரைக்கப்பட்டது.

பிரம்மா தம் படைப்புத் தொழிலைத தொடங்குமுன் பிள்ளையாரை வழிபடாததால் அவர் படைத்த மனிதன் மிருகம் மற்றவெல்லாம் பேய் பிசாசுகளாக மாறிவிட்டன. பிழையுணர்ந்த பிரம்மா பின் பிள்ளையாரை வழிபட்டு சரியான படைப்புத் தொழிலைக் கைவரப் பெற்றர்.

இராவணனைக கொன்றபின இராமர் பிரும்மஹத்தி தோஷததைப் போக்கிக் கொள்ள கணபதி பூசனை செய்தபின்னரே சிவலிங்க வழிபாடாற்றித் தோஷம நீங்கபபெறறர் எனக் கூறுவா.

அதே இராவணன முன்பொரு சமயம் சிவபிரான் தந்த சிவலிங்கத்தை இலங்கைக்குக் கொணடுவரும் காலத்தில் திருக்கோகர்ணத்திடத்தே பிள்ளையாா அதனை நிலைபெறச் செய்தார்.

அவ்வாறே விபிஷணனிடம் குட்டுப் பட்டு ஸ்ரீரங்கநாதன் விக்கிரகத்தை தரையில் பிளளையார் வைத்ததால் திருவரஙகம உண்டானதாகச் சொல்லப்படுகிறது.

தென்னடு போந்த அகததியர் காவிரியைக் கமணடத்தில் ஏந்திவந்த போது காக்கை வடிவில் சென்று கவிழ்த்ததின மூலம் காவிரியைக குடகு மலையினின்றும் பெருக்கெடுத்தோடி தமிழ்நாட்டில் பாயச் செய்தார் பிள்ளையார்.

நம்பியாண்டாா நம்பிகள் தம் திருமுன்பு படைத்தவற்றை நேரிலே தோன்றி உண்டருளியதோடு அவா மூலம திருமுறைகள் வெளிபபடவும் செய்தாா. அது மட்டுமா? குதிரை மீதேறிச சென்ற சேரமான் பெருமாளுக்கும், சுநதரருக்கும் முன்பாகவே ஔவைப் பிராட்டியாரைக் கைலையில் கொணடு சோதத பெருமையும் அவருக்கு உணடு.

பிள்ளையாரின் அருமை பெருமைகளையும் அளப்பெரும் கருணை பொதிந்த செயல்களையும் சொல்லிக் கொணடே போகலாம். சொலலி மாளாததல்லவா அவா பெருமை

பிள்ளையார் ஓங்கார வடிவினர். மறைமுடிக் கணணே நினறிலங்குபவர். பிரமச்சரியத்தை மேற்கொண்டவராகவும், சித்தி, புத்தி, வல்லபை என்ற துணைவியரைக் கொண்டவராகவும் அவர் பல நிலைகளில் வழிபடப்படுகிறர். அவரை வழிபடடால் பரபோகமும், முக்தியும அடையலாம. இதனை இராமலிங்க அடிகள் பாடல் ஒனறின் மூலம் கூறுவதைக் காணக.

"பெருமபொருட கிடனும பிரணவ வடிவிஸ்
பிறஙகிய ஒருதனிப பேறே
அரும்பொருள ஆகி மறைமுடிக் கண்ணே
அமர்நதபோ ஆனநத நிறைவே
தருமபர போகசித்தியும சுத்த
தருமமும முத்தியும் சார்ந்து
விரும்பினேர்க களிக்கும் வளளலே-சிததி
விநாயக விக்னேச் சுரனே"

பிள்ளையாரின் திருவடிகளைப பணிவதால் நாம் அடையலாகும் பேறுகளை மகாகவி பாரதியாா விநாயகர் நானமணி மாலையில படடியலிட்டுக் காட்டுகிறர். அதைக காணபதோடு இககடடுரையை முடிப்போமாக.

"கணபதி தாளைக் கருததிடை வைப்போம
குணமதிற் பலவாம கூறக்கேளீர்
உடசெவி திறக்கும; அகக்கண் ஒளிதரும
அககினி தோனறும்; ஆண்மை வலியுறும
திககெலலாம் சென்று ஜெயக்கொடி நாடடலாம
விடததையும, நோவையும
வெமபகை யதனையும
துசசமெனறெண்ணித துயரிலா திஙகு
நிசசலும வாழநது நிலைபெற் றேஙகலாம
அசசம் தீரும அமுதம விளையும
விததை வளரும; வேளவி ஓங்கும
அமரத தனமை எய்தவும
இங்கு நாம் பெறலாம;
இஃதுணர்வீரே"

ஆகமங்கள்

உலகில் ஆஸ்திகர்கள் இவ்வுலக சுக போகங்களை அனுபவிப்பது போல் பரலோகத்தின் பலன்களையும அடைய விருமபுகிறார்கள். பரலோகத்தில் நற்பலன்களையடைய தர்மங்களே அடிப்படையான காரணங்களாகும். தர்மங்களைப் பற்றி தாம சாஸ்த்ரங்களான ஸ்மிருதி முதலான நூல்களே கூறுகினறன. சாஸ்த்ரம் என்று பொதுவாக எடுத்துக் கொணடால் அதனை நிகமம், ஆகமம் என்று இரணடு வகையாகப் பிரிக்கலாம். நிகமம் எனறால் மந்த்ரம், பிராம்மணம் முதலியவைகளைக் கொணட வேதஙகளேயாகும். நிகமம என்றால் நிச்சயமான, நேர்மையான வழியில் தர்மங்களை அறிவதேயாகும். வேதங்களில் கூறப்பட்ட தர்மங்களை ஸ்மிருதிகள், இதிகாச, புராணங்கள் கூறுகினறன. ஆகையினால,

वेदोऽखिलो धर्ममूलं श्रुतिशीले च तद्विदाम् ।
आचारश्चैव साधूनामात्मनस्तुष्टिरेव च ॥

எனறு கூறப்பட்டுள்ளது.

வித்யைகளுக்குப் பிரமாணம் கூறும்போது யாக்ஞ்ய வல்க்யர் பின் வருமாறு கூறுகிறார்:

पुराणन्यायमीमांसाधर्मशास्त्रांगमिश्रिताः ।
वेदाः स्थानानि विद्यानां धर्मस्य च चतुर्दश ॥
तत्र वेदाः प्रधानं शिक्षा व्याकरणं छन्दः ।
निरुक्त ज्योतिष कल्पश्चेति षडंगानि ॥

புராணம், மீமாம்சை, நியாயம், தர்ம சாஸ்த்ரங்கள் உபாங்கங்கள். வேதங்களில பரா, அபரா என்ற இரண்டு விதங்கள். (பரா-என்றால் உபநிஷத்துக்கள், அபரா-என்றால் நான்கு வேதங்கள்) ச்ருதி என்றாலும் நிகமம் என்றாலும் வேதங்களுககுத்தான் பெயர். தர்ம சாஸ்த்ரங்கள் வேதங்களில் கூறப்பட்டுள்ள பொருட்களைக் கூறுவதால் அவைகளும் முக்கிய மானவைகளாகும். இதே போல் ஆகமங்களும் பிராமணங்களே.

" पुराणवत् प्रमाणं स्यात् तथा मन्वादिवाक्यवत्
वेदमूलतया तन्त्रमाप्तमूलतयाथवा ॥ "
(ஸ்மிருதி வாக்யம்

ஆகையினால ஆகமங்களுக்குப் புரா ணங்களின் தகுதியோ, ஸ்மிருதிகளின் தகுதியோ உண்டு எனலாம. ஆனா் வேதஙகளுக்குரிய தகுதிகள் இவை களுக்குக் கிடையாது. இந்த கலி யுகத்தில் வேதஙகள, புராணங்கள் இதிகாசங்கள், ஸ்மிருதிகள முதல் யவைகளில் நம்பிக்கை குறைந்த தர்மங்களில் நாட்டமில்லாமை யாலும மக்கள் வாழ்வதால் அவ களை உய்விக்க பரமேச்வரனால் கூறப பட்டதே ஆகமங்கள் ஆகும்.

आगत शिववक्त्राब्जात् गतं तु गिरिजाश्रुतौ
तदागम इति प्रोक्तं शास्त्र परमपाव॰म् ॥


என்று கூறப்பட்டுள்ளது. ஆகமங என்பது உருவ வழிபாட்டிற்கே உகநதது. மக்கள் நாளுக்கு நாள ஆத்ம சக்தியை இழந்து வெளியில் காணும் காக்ஷிகளையே நம்பி வாழ கிறார்கள். அவர்களுடைய மனட ஓரிடத்தில் நிலைத்து நின்று நல்வழி படவே உருவ வழிபாடு ஏற்பட்டது.

ஸம்ஹிதை, தநத்ரம், மநதரம், ரஹஸ்யம் முதலிய பெயர்கள் கொண் சம் மாறுதலையடைந்து ஆகமங் களோடு சேருகின்றன என்று சிலர் கூறுகிறார்கள். பதினான்கு வித்யா ஸ்தானஙகளில் ஆகமங்களுக்கு இடம் இல்லாமையினால் இவைகளுக்கு பிர மாணம் கிடையாது என்று கூறு கிறார்கள். பதினான்கு வித்யாஸ்தா னங்களாவன

अङ्गानि वेदाश्चत्वारो मीमांसान्यायविस्तरः
पुराणं धर्मशास्त्रं च विद्याह्यताश्चतुर्दश ॥ '

இவைகளில் ஆகமங்கள் காணப படாவிட்டாலும், தந்த்ரம் என்ற சாஸ்த்ரத்தினால் வேதங்களில் பொருள்களையறியலாம் என்று கூற

டாகடர். டி. ஜி. அனந்தசுப்ரமணியன்,
திருப்பதி.



ஸ்ரீ விஷ்ணு ஸ்ரீ மகாலக்ஷ்மி உருவங்களுடன் தசாவதாரக்காட்சிகள் கோயில் சுற்றிலும் திகழ அமைக்கப்பட்டுள்ளது — பேலூர் கோயில்.
திரு. எஸ். ஜி. சேஷகிரி, கோவை.

ிருப்பதால் ஆகமங்களும் வித்யா ஸ்தானங்களில் இடம் பெறும்.

ஆகமம் என்பது இரண்டு வகைப் படும். வேதத்திற்கு சம்மதமானது, வேதத்திற்கு அசம்மதமானது என்று. வைகளில் வேதத்திற்கு சம்மத மானது ஆகமம் என்பதை யாக்ஞ்ய வல்க்யர், பதினான்கு வித்யாஸ்தானங் களை கூறிவிட்டு,

सांख्यं योगः पाञ्चरात्रं वेदाः पाशुपतं तथा ।
अतिप्रमाणान्येतानि हेतुभिर्न विरुद्ध्यते ॥

என்று கூறுகிறார். ஆகையினால் பாஞ் சராத்ர ஆகமமும், சைவ ஆகமமும் வேதங்களுக்குச் சமமானது என்று தெரிய வந்துள்ளது.

மகாபாரதம் பின்வருமாறு கூறு கிறது:

उमापतिर्भूतपतिः श्रीकण्ठो ब्रह्मणः सुतः ।
उक्तवानिदमव्यग्रो ज्ञानं पाशुपतं शिवः ।
पञ्चरात्रस्य कृत्स्नस्य वक्ता च भगवान् स्वयम् ।

உமையின் பதியான பரமேச்வரன் சைவ, வைணவ ஆகமங்களைக் கூறிய தாகச் சொல்லப்பட்டுள்ளது. பிரு ஹத்பராசரம் என்ற நூலில்,

वैदिकं तु जपं कुर्यात्पौराणं पाञ्चरात्रिकम् ।
यो वेदस्तानि चैतानि यान्येतानि च सा श्रुतिः ।
पञ्चरात्रविधानेन स्थण्डिले वापि पूजयेत् ।

என்று கூறப்பட்டுள்ளது. ஆகமங் களும் வேதங்களுக்குச் சமமாகும் என்று கூறப்பட்டுள்ளது. ஆகமங்கள் ச்ரௌதமாகவும், ஸ்மார்த்தமாகவும் பிரிக்கலாம். அதாவது வாயுஸம்ஹி தையில் ச்ரௌத அச்ரௌத விதங் களாகக் கூறப்பட்டுள்ளது.

சைவாகமத்திலும் இதுபோல் இரண்டு விதங்கள் காணப்படுகின் றன.

शैवागमोऽपि द्विविधः श्रौताश्रौतश्च संस्मृतः ।
श्रुतिसारमयः श्रौतः स्वतन्त्र इतरो मतः ॥

வேதங்களை அடிப்படையாகக் காண்டு செய்வது ச்ரௌதம் என் றும், மற்றவை அச்ரௌதமென்றும் கூறப்படுகிறது. இவ்விதம் வைஷ்ண வாகமங்களும் பிரிக்கப்படுகின்றன.

हेमाद्रौ विष्णुधर्मोत्तरे सांख्यं योगः पाञ्चरात्रं वेदाः पाशुपतं तथा ।
कृतान्तपञ्चकं विद्धि ब्रह्मणः परिमार्गणे ।

வேதங்களுக்குச் சமமானது பாஞ்ச ராத்ர ஆகமம் என்று கூறப் பட்டுள்ளது.

காபாலம், பாஞ்சராத்ரம், யாமளம், வாமம், ஆர்ஹதம் முதலியவைகள் அவைதிக ஆகமங்களாகும். 'मोह-नार्थानि' என்றால் அவைதிகம் என்று பொருளாகும். பதினான்கு வித்யா ஸ்தானங்கள் என்று ஒரு எண்ணிக் கைக்காகவே சொல்லப்பட்டது. அவ் வளவுதான் என்று நிசசயமாகக் கூறினால் இராமாயணம் மகாபாரதம் போன்றவைகளுக்குக்கூட அப்ரா மாணயம் ஏறபட்டுவிடும்.

பொதுவாக ஆகமங்கள் வேத மந் திரஙகளை அடிப்படையாகக் கொண் டவை அல்ல என்ற பொருளில் அவைதிகம் என்று கூறப்பட்டுள்ளது ஆனாலும் தந்த்ரம் என்று ஆகமங் களைக் கூறுவதுமுண்டு.


स्त्रीशूद्रद्विजबन्धूनां त्रयी न श्रुतिगोचरा ।
अतो भारतमाख्यानं कृपया मुनिना कृतम् ॥

பெண்கள், மற்றும் சிலர் வேதங்களை அத்யயனம் செய்யத் தகுதியற்றவர்களானதால் அவர் களுக்கு வேதங்களில் உள்ள கருத்துககளை அறியச் செய் வதற்கே பாரதம், இராமாயணம் முதலானவைகள் மகரிஷிகளால் செய் யப்பட்டுள்ளன. அதேபோல்தான் ஆகமம் கூட. ஸ்மிருதிக்குச் சமமான ஆகமங்களைக் கூற சிலர் மறுப்பைத் தெரிவிக்கிறார்கள். எவ்விதம் ஸ்ரீமந் நாராயணன் வேதங்களை நானமுக னுக்கு உபதேசித்தாரோ அதே போல் ஆகமங்களையும் சிவனுக்கு உபதே சித்தார் என்று கூறப்பட்டுள்ளது. பிறகு சிவன் பார்வதிககும், பார் வதி நாரதர், சௌனகர் முதலான முனிவர்களுககும் கூறப்பட்டதாகும்.

प्रथमं सात्वतं शास्त्रं सम्यगध्यापितं मया ।
वासुदेवेन यत्प्रोक्तं शास्त्रं भगवता स्वयम् ॥

ஈசான ஸம்ஹிதையில்,

तथापि सारमुद्धृत्य तन्त्ररूपेण नारद ।
वर्णयामि यथैवोक्तमीश्वरेण दयालुना ॥



வள்ளி நாயகி, முருகன் (வேடன் வேடத்தில்), நாரதர் (குதையில்)
திரு. வி. முத்துராமன், கோவை.

என்று கூறப்பட்டுள்ளது. ஆகையினல் வேதங்களைப் போல் ஆகமங்கள் அநாதியானது, புருஷர்களால் எழுதப்பட்டதல்ல என்று கொள்ள வேண்டும். எவ்விதம் விநாயகர் மகாபாரதத்தை எழுதினரோ, அதே போல் ஆகமங்களையும் விநாயகர் தான் எழுதினர்.


अथ मां पृच्छती वाक्यं मद्वक्यं च द्विजोत्तम ।
संलिखत्यप्रमत्तोऽसौ गणेशो मत्सुतोऽन्तिके ॥

இந்த ச்லோகத்தினல் ஆகமங்களைச் சொல்லியவர் சிவனென்றும், அவைகளை எழுதியவர் விநாயகர் என்றும் தெரிகிறது.

வேதங்கள் எவ்விதம் கணக்கிட முடியாதவையோ, அதே போல் ஆகமங்களும் (**तन्त्रान्येतानि विप्रर्षे! अयु-तान्यर्बुदानि च**) கணக்கில் அடங்காதன. அவைகளில் வைஷ்ணவ, சைவ, சாக்த, காணுபத முதலான பல ஆகமங்கள் இருக்கின்றன. அந்தந்த தேவதைகளை முக்யமாகக் கொண்டதால் அந்தந்த தேவதைகளின் பெயரிலேயே அந்த ஆகமங்கள் அமையப் பெற்றன எனலாம்.



வெள்ளெருக்கு வேரில் செய்யப்பட்ட ஸ்ரீ விநாயகர்
திரு. குத்தாலம் பாலச்சந்திரன்



ஸ்ரீ சங்கமேஸ்வரர் ஆலயம் - பவானி
திரு. எம். ராஜகோபால் - சென்னை.

ஆகமங்களில் பல விஷயங்கள் கூறப்பட்டுள்ளன. பூஜை முறைகள் மட்டுமல்ல ஆலயம் நிர்மாணிப்பதற்காக பூமியை சோதித்தல் மூர்த்திகளைச் செய்ய கற்களைச் சோதித்தல், துவஜஸ்தம்பம் செய்ய மரங்களைச் சோதித்தல் முதலியவைகளும், பிம்பங்கள் செய்வதற்கு வேண்டிய பொருட்கள், அவைகளின் லக்ஷணங்கள்,சிற்ப சாத்திர முறைகள்,முத்ரைகள், நாட்யம், சங்கீதம் முதலிய சாஸ்த்ரங்களின் குறிப்புகள், இவ்விதம் எவ்வளவோ விஷயங்களையும் கூறுகின்றன. மேலும் ஆசார்ய லக்ஷணம், அவருடைய ச்ரௌத ஸ்மார்த்த க்ரமாக்களைப் பற்றியும் கூறுகின்றன.

மூர்த்தி வழிபாட்டிற்கே ஆகமங்கள் உண்டாயின. தவம், தியானம் முதலியவைகளைச் செய்ய புலன் அடக்கம் தேவைப்படும். மனதை ஒரு வழிபடுத்த முடியாதவர்கள் ஆலயம் சென்று மூர்த்திகளை வழிபடுவதற்காக ஏற்பட்டது. சாதாரண கல்லானது உருவம் பெற்று சக்தி வாய்ந்ததாகச் செய்யப்பட்டு அருள் பாலிக்கச் செய்ய வழிமுறைகளைக் கூறுகிறது ஆகமம்.

अभिरूप्याच्च बिम्बस्य पूजायाश्च विशेषतः ।
साधकस्य च विश्वासात् सन्निधौ देवता
भवेत् ॥

பிரதிமைகள் அழகாக மட்டும் இருந்தால் போதாது. அதற்கு விசேஷ பூஜைகள் செய்யப்பட்டு, பிம்பங்கள் சக்தி பெற்று அருளும் தன்மையை உண்டாக்குவதே ஆகமங்களின் நோக்கம்.

எங்கும் நிறைந்த கடவுளை பிம்பங்களில் ஆவாஹனம் செய்து மந்த்ர, தந்த்ர, யத்ரங்களாலும், முத்ரைகளாலும் சக்தியை ஏற்படுத்தி அப் பிம்பங்களை வழிபடுபவர்களுக்கு அருளும் சக்தியை ஏற்படுத்திக் கொடுப்பதே ஆகமங்களாகும். ஆகையினல் ஆலயத்தில் இருக்கும் இறைவன் சக்தி வாய்ந்ததாக இருக்க வேண்டுமென்றல் ஆகமங்களை வளர்க்க வேண்டும்.

*

விநாயகர் வழிபாடு

திரு மா சீதாராமன்,
காஞ்சி

'திருவாக்கும்' பெருமைக்குரிய தெய்வம் விநாயகப் பெருமான. விநாயகர் பெரியவர். தெயவங்கள் பல வற்றுக்கும் மேலான தெயவம். தலைமைத் தெய்வம். எச்செயலைத தொடங்கினாலும் விநாயகரையே முதலில் வழிபடுவது வழக்கம்.

விநாயகருக்குப் பெயர்கள் பல உள. மேலான தலைவர் என்பதால் விநாயகர். கணங்களுக்கு அதிபதியாக முடி சூட்டிக கொண்டதால கணபதி. கணங்களுககு நாதன. என்வே, கணநாதன். சிவபிரானுக்குத் தலைப் பிள்ளையானதால மூதத திருப்பிள்ளையார், யானை முகம் பெற்றிருப்பதால கரிமுகன, கஜமுகன், யானைமுகன, தடைகளை உடைப்பதால் விககினேசுவரன. ஐநது கைகளையுடைமையால் ஐங்கரன. முன்னா வழிபடுதற்குரிய தெய்வமானதால முனனவன் பிள்ளை போல இருந்து காப்பதால் பிள்ளையார்.

பெயாகள் பல இருப்பினும, விநாயகரைப் பிள்ளையார் என்றே அன்புடன அழைப்பது வழககம். பிள்ளையாருக்குத தமிழ்மொழிமீது தணியாத காதல் உண்டு. காப்புச் செய்யுள் பெருமபாலும் விநாயக வழிபாடாகவே தமிழ் நூலகளில் அமைந்திருக்கும்.

விநாயக வழிபாட்டுக குகநத நாள வெள்ளிக்கிழமை. சிறப்புடைய திதி சதுர்த்தி. ஆவணி மாதச் சுக்கில பட்சச் சதுர்த்தி ஆணடு தோறும் விநாயகருககுகந்த பெருவிழா நாளாகும்.

விநாயகர் வளங்களை வாரி வழங்கும் வள்ளல் மட்டும் அல்லர். அவரால் நலம் பெற்றோர் மக்கள் மட்டும் அல்லர். கடவுளருங்கூட அவரால் நலம் பல பெற்றுள்ளனர். திரிபுரங்களை எரித்த காலத்தில், விரிசடைக் கடவுளாகிய தந்தைக்கே அருள் புரிந்தவர். தாயாகிய உமையம்மை பண்டாசுரன் என்பவனை வெல்வதற்குப் பிள்ளையாரின் அருளே தேவைப் பட்டது. தம்பியாகிய வேலவன் தும்பிககை அண்ணனின் துணையைக் கொணடே வள்ளியம்மையின கரம் பற்றினான். திருமாலும் திருமகளும் கூட விநாயகரைப் போற்றியதாகச் 'சுதே வல்லப கணபதி மகாத்மியம்' என்னும் நூல் கூறுகிறது. பிரமனும், சூரியனும் கூடப் பிள்ளையாரை வழிபட்டுப் புலன் பெற்றனர் எனின், நாம் வழிபாடு செய்வதில் வியப் பேதும இல்லையன்றோ!

'ஓம' எனும் பிரணவ மந்திரத்தின் வடிவமே விநாயகரின் திருவுருவம்.

விநாயகரின் முகம் யானைமுகம். யானை விலங்குகளில் பெரியது. விநாயகர் கடவுளரில் பெரியவர். விநாயகருக்குத் தும்பிக்கை உண்டு. அது நீணட கை. நீண்ட கையினால்தான் அனைவருககும் எளிதாக வாரி வழங்க முடியும். முகம் விலங்கு அமைப்புடன் அமைந்துள்ளது. ஆனால, திருவடிகளோ மனித அமைப்புடன் கூடியது. மனிதன் அடைய வேணடிய ஞானம ஒரு திருவடி. அந்த ஞானத்தை அவன அடைதற்குச் செய்ய வேண டிய கிரியைகளை உணர்த்துவது மற்றொரு திருவடி. வயிறோ பேழை வயிறு. உலகங்களை அனைததும் விநாயகருககுள் அடஙகும் எனபதை உணர்த்துகிறது.

அவருககுத் திருககைகள் ஐந்து. ஆக்கல், அளிததல, அழித்தல், மறைததல், அருளல் ஆகிய ஐந் தொழில்களையும் இயற்ற வல்லது. அவருடைய காதுகள் மிகப் பெரியவை. எனவே, நாம் கூறும் குறைகள அனைத்தும் அவருடைய திருச்செவி கட்குக் கேட்கும்.

விநாயகரால் அருள் பெற்றோர் பலா. அவருள் தமிழ்ப் பெருமாட்டியாராகிய ஔவையார் குறிப்பிடத் தக்கவர். பாலும், தெளிதேனும், பாகும், பருப்புமாகிய நான்கினைப் பிள்ளையாருககுப் படைத்தார். அதன் பயனாக, இயல் இசை நாடகம எனப் படும முத்தமிழினையும் பெறும பாக கியம் அவருககுக் கிட்டியது.

கணபதியைத் தெய்வமாகக் கொண்ட சமயம் காணபத்தியம் எனப்படும். பிளளையாா கோயில் இல்லாத ஊர்களைத் தமிழகத்தில எங்குமே காண முடியாது. ஊர்க் கோடியும், தெரு முனையும, குளக் கரையும், அரச மரத்தடியும் பிள்ளையாருக்கு உவப்பான இடங்கள்.

விநாயக வழிபாடு இநதியா முழுவதும் சிறப்பாகக் காணப்படுகிறது. மகாராட்டிர மாநிலத்தில பிள்ளையார் சிறப்பாகப் போற்றப்படுகிறார். தமிழகத்தில் கி. பி. ஏழாம் நூற்றாண்டு முதலே பிள்ளையார் வழிபாடு தொடங்கியது. சங்க காலப பாடல களில் விநாயகரைப பற்றிய குறிப்பு கள காணப்படவில்லை. எனினும், தேவார காலம முதல் இவருககுத தமிழ் நூலகளில் மிகச சிறப்பான இடம கொடுக்கப்பட்டு வருகிறது. விநாயக புராணம, விநாயகர் அகவல் முதலியவை பிள்ளையாரின பெருமையைப் பரககப பேசுபவை.

வந்தாரை வரவேறபதில தமிழர்கள் சிறந்தவர்கள் வாதாபியிலிருந்து வந்தருளும் விநாயகப் பெருமானுககே இங்கு முதலிடம. விநாயகர் வழிபாட்டால் நாம அறிய வேணடிய நுட்பம ஒனறுணடு.

வநத விருநதினர்ககு வரவேற பளித்து உபசரிததுப் பெருமை செய்தலே தலைசிறந்த பண்பு என்பதனையே விநாயக வழிபாடு நுட்பமாக உணாத்துகிறது. வள்ளல் பிள்ளையாரின் அருள் வையகம் முழுவதுக்கும் கிடைப்பதாக, ★

வால்மீகி திருவுள்ள விளக்கு

ஸ்ரீ காஞ்சீ காரி அனந்தாசார்யஸ்வாமி அருளிய வால்மீகி பாவ தீபத்தின் மொழிபெயர்ப்பு

ஸ்வர்க்கமென்னும் சொல் வேதங்களில் பெரும்பாலும பகவானுடைய லோகமாகிய வைகுண்டமென்னும் பொருளைக் குறிப்பதாகக் காணப்படுகிறது. அவற்றுள், தைத்திரியாரண்யகம் முதல் ப்ரபாடகம் இருபத்தேழாம் அநுவாகத்தில், 'நித்ய ஸூரிகளின் நகரம் (யாரும் போா செய்து தம் வசமாக்கிக் கொள்ள முடியாத தனுல்) அயோத்யை எனப்படும். அந்நகரத்தில் ஸ்வர்ண மயமானதும் பேரொளியினுல் சூழப் பெற்றதும் ஸ்வர்க்கமென்று பேர் பெற்றதுமான இடமொன்று உள்ளது. எவனேனும் ஒருவன் நித்ய-முக்தர்களால் சூழப் பெற்றதான பரப்ரஹ்மத்தின் அந்த நகரத்தை அறிவானுகில் அவனுக்குப் பரப்ரஹ்மமும் ப்ரஹ்மாவும் ஆயுள் புகழ் ஸந்ததி ஆகியவற்றை அளிக்கின்றனர்' என்று கூறும் மந்திர மொன்றில் ஸ்வர்க்க சப்தம் வைகுண்டமென்ற பொருளை-[illegible] தாகக் காண்கிற-[illegible]

இங்கு, 'பேரொளியினுல் சூழப் பெற்ற ஸ்வர்க்க லோகம்' என்று கூறப்பட்ட ஸ்வர்க்க லோகமானது, '[illegible]ஹாத்மாவான விஷ்ணுவினுடைய தாய் ஸூர்யன் அக்நி இவர்களை விஞ்சிய ஒளியையுடையதான அந்த ஸ்தானம்' (மகாபாரதம்.வன-163-19)என்றிது முதலியவற்ருல் கூறப்பட்டுளள- மிகச சிறந்த ஒளியுடன் கூடிய வைகுண்டமென்னும் பகவானுடைய லோகமேயாகுமென்பது - இதற்கு அடுத்த மந்திரத்தில் 'அபராஜிதையைப் புகுந்துள்ளான்' என்று அந்த லோகத்திலுள்ளதோரிடத்துக்கு அபராஜிதை என்று பெயருள்ளமை கூறப்படுவதனுலும், 'முற்கூறப்பட்ட ப்ரஸித்தமான இந்த பரப்ரஹ்ம லோகத்தின் அருகில் அரம் என்றதோர் மடுவும் முகூர்த்தர்களென்னும் பெயருடையவர்களாய் - ப்ரஹ்மஜ்ஞானமில்லாதாரைத் தடி கொண்டு துரத்தும் சில புருஷர்களும் விரஜையென்பதோர் நதியும் தில்யமென்னும் மரமும் ஸாலஜ்யமென்னும் (மலையரண் நீரரண் காட்டரண ஆகிய) இடமும் அபராஜிதமென்னும் (பரப்ரஹ்மத்தின்) பட்டணமும் உள்ளன' (கௌஷீதகீ 1-22-26) என்று பரப்ரஹ்மலோகத்திலுள்ள ஓரிடத்திற்கு அபராஜிதமென்று பெயருடைமை அறியப்படுவதனுலும், இங்கும் 'எவன் பரப்ரஹ்மத்தின் நகரத்தை அறிகிருனே' என்று முன்பு ப்ரஸ்தாவிக்கப்பட்ட ஸ்வர்க்க லோகத்திற்குப் பரப்ரஹ்மத்தை ஸ்வாமியாகவுடைமை கூறப்படுவதனுலும், அங்[illegible]மான இங்[illegible]த்திறகுப் பொருந்தாமையாலும்—அறியப்படும்.

தலவகாரர்களின் கேநோபநிஷத்து நான்காவது கண்டத்தில் (9), எவனொருவன் இந்த ப்ரஹ்மவித்யையைக் கீழ்க் கூறியபடியே அறிகிருனே அவன் பாபத்தைக் கழித்து அழிவற்றதும் மிகவுயர்ந்ததுமான ஸ்வர்க்க (=வைகுண்ட) லோகத்தில் நிலை பெற்றவனுகிருன்' என்று கூறும் மந்த்ரத்திலும் ஸ்வர்க்க சப்தம் வைகுண்டத்தைக் குறிப்பதாகக் காண்கிறது. இங்கு 'பாபத்தைக் கழித்து' என்று பாப விமோசனம் முன்னுக அவ்வுலகையடைகின்ருனென்று சொல்லப்படுவதனுலும், 'அழிவற்றது' என்று திரும்பி வருதலில்லாமையாகிய காலவளவின்மை என்னும் நித்யத்வம் கேட்கப்படுவதனுலும், 'மிகவுயர்ந்தது' என்று எல்லாவுலகங்களைக் காட்டிலும் உயர்த்திக் கேட்கப்படுவதனுலும் ஸ்வர்க்க சப்தம் வைகுண்ட லோகத்தையே குறிப்பதாகும் - இந்திரலோகமென்னும் ஸ்வர்க்கத்தில் இத்தன்மைகள் பொருந்தாமையால் என்க.

இங்ஙனமே கடோபநிஷத்து முதல் வல்லியில் 'ஸ்வர்க்க (வைகுண்ட)த்தில் எவ்விதமான பயமும் இல்லை. யமதர்மனே நீ அங்கு (அரசனுக) இல்லை. அங்கு இருப்பவன் கிழத்தனத்தினுல் அஞ்சுவதில்லை. பசி தாகங்களிரண்டினையும் வென்று சோகமற்று ஸ்வர்க்க (வைகுண்ட)த்தில களித்திருக்கிருன்' என்று கூறும் பன்னிரண்டாவது மந்திரததில் ஸ்வர்க்க சப்தம் வைகுண்டத்தைக் குறிப்பதாக ப்ரயோகிக்கப்பட்டுள்ளது.

~~அங்கு, ஸ்வர்க்க~~

தமிழாக்கம் :
திரு. தி. அ. கிருஷ்ணமாசாரியர்,
சிரோமணி வித்வான்
திருப்பதி.

வித பயமுமில்லாமை கூறப்படுவதாலும் கிழத்தனம் பசி தாகம் சோகம் ஆகியவற்றின் இல்லாமை குறிக்கப்படுவதனுலும் ஸ்வர்க்க லோக சப்தம் பிரசித்தமான இந்திரலோகத்தைக் கூறுதல் பொருந்தாமை இதற்குக் காரணமாகும்.

அதே வல்லியில் 'ம்ருத்யுதேவனே ஸர்வஜ்ஞனென்று பிரசித்தி பெற்ற நீ ஸ்வர்க்க (வைகுண்ட)த்திற்குச் செல்லுதற்கு உரிய அக்நியை அறிவாய். ச்ரத்தையை உடைய எனக்கு அவ்வக்நியைப் பற்றிச் சொல்லக்

கடவாய். ஸ்வர்க்க (வைகுண்ட)த்தை அடைந்தவர் முக்தியைப் பெறுவர். இது தனனே இரண்டாம் வரமாக வேண்டுகிறேன்' என்ற பதின்மூன்று வது மந்திரத்திலும் ஸ்வாக்க சப்தம பகவானுடைய லோகத்தைக கூறுவ தாகக் காணப்படுகிறது. ஸ்வர்க் கத்தை அடைந்தவர்கட்கு மோக்ஷ ப்ராப்தி வருணிக்கப்பட்டுள்ளதனுல் இங்குள்ள ஸ்வாக்க சப்தம் வைகுண்ட வாசகமெனறு அவசியமாக இசைய வேணடுமனறே.

மேலும் அதே வல்லியில் 'அயம் வாவ ய: பவதே' என்றிது முதலிய மூன்று அனுவாகங்களே அத்யயனம் செய்த யாவனெருவன் முறகூறிய ப்ரஹ்மஸ்வருபத்தையும் அப்பிரஹ் மத்தை ஆத்மாவாகக் கொண்ட தனது ஆத்மஸ்வருபத்தையும் மூன்று தடவைகள் அநுஷ்டிக்க வேணடியவ் அக்நிஸ்வரூபத்தையும் குரு முகமாக அறிந்து இம்மூன்று விஷயங்களேயும் நினைத்துக் கொண்டே நாசிகேதாக்நி யைச் சயனம் பண்ணுகிருனே அவன் ம்ருத்யு பாசமெனப்படுகிற விருப்பு வெறுப்பு முதலான துர்க்குணங்களை இவ்வுடலுக்கு முன்னமே தூர அகற்றிச் சோகங் கடந்து ஸ்வர்க்க (வைகுண்ட)த்தில் களிப்புறுகிருன்' என்ற பதி னெட்டாவது மந்திரத்திலும் ஸ்வர்க்க சப்தம் பகவல்லோக வாசக மாகக்காணகிறது—விருப்பு வெறுப்பு முதலிய அழுககனைதது்ம் அகன்ற பிறகு ஸ்வர்க்க லோகம் அடையப்படு வதாக அறியப்படுவதனுலும் அங் குள்ளவனுக்குச் சோகங்கடந்தமை சொல்லப்படுவதனுலும் என்க.

இங்ஙனம் ப்ருஹதாரண்யகத்தில் (6-4-8) 'புத்திசாலிகளான ப்ரஹ் மஜ்ஞாநிகள் அநத ஆர்ச்சிராதி மார்க்கத்தாலே, இந்த சரீரத்தி லிருந்து விடுபட்டு மேலுள்ள ஸவர்க்க (வைகுண்ட)த்தை அடைகிருர்கள்' என்ற மந்த்ரத்திலும் ஸ்வர்க்க சப்தம் வைகுணடமென்னும் பொருளுடைய தாக ப்ரயோகிக்கப்பட்டுள்ளது. அதில் ஸ்வர்க்கத்துக்கு ப்ரஹ்மவித் துக்களால் அடையப்படுந்தன்மை கூறப்பட்டதனுலும் முக்தி பெற்ற வர்களால் பெறப்படுந்தன்மை குறிக் கப்படடதனுலும் இங்ஙனே கொள்ள வேணும்.

ஆகையால் இங்ஙனம் பகவானு டைய லோகமான வைகுணடம், இந திரனுடைய லோகம் என்னும இரண்டு பொருள்களிலும் ஸ்வர்க்க சப்தமஸமானமாக பிரயோகிக்கப்பட் டிருந்த போதிலும், ஸ்வர்க்க சப்தத் திற்கு இந்திர லோகத்தில் மட்டுமே சக்தி (=நேராகப் பொருளைக் கூறும் ஆற்றல்) உள்ளது, வைகுண்டத்தில் இல்லையென்பதற்கு அத்தாட்சியில்லா மையினுல், அச்சொல்லுக்கு இரண்டு பொருள்களிலும் சக்தியுள்ளமை அவசியமாக அங்கீகரிக்க வேண்டி யிருப்பதால், 'தமேவ ஹத்வா' (ராமா. பால. 15-33) என்று முற்கூறிய இந்த ச்லோகத்தில் ஸ்வர்க்க சப்தத் தினுல் வைகுண்டமென்ற பொருள் தோன்றுதலில் தடையில்லையென்க.

உண்மையாக நோக்கினுல், ஸ்வர்க்க சப்தம் பகவல்லோகமான வைகுண்டத்தைக் குறிப்பதிலேயே சக்தி படைத்துள்ளது என்று கொள்ள வேண் டும்—'யத் ந து:க்கேந ஸம்பிந்நம்... தத ஸுகம ஸ்வ:பதாஸ்பதம்'—எது துன்பத்தோடு கலசாததோ அந்த ஸுகமே (ஸுகமயமான இடமே) ஸ்வர்க்க பதத்தின் பொருளாகும் (?) என்ற ச்லோகத்தினுல், ஸ்வர்கக சப்த சக்திககு காரணமாகச் சொல் லப்பட்ட துக்கமகலசாமை என்பது பூர்ணமாக இருப்பதனுல்-என்க.

பிரசித்தமான இந்திர லோகமென் னும் ஸவாககத்திலோவென்னில் - 'ஸ்வர்க்கததில இருந்தாலும் புண் ணியம் நசிக்கப் பெறறவனுய், நாம் ஒரு நாள் கீழே விழப போகிறோ மென்று நினைத்து அஞ்சினவனுக்கு ஸுகமில்லை' (விஷ்ணுபு 6-5-50) என்று கூறியபடியே விழுவதில் அச் சத்தைத் தவிர்கக முடியாமையினுலே, ஸ்வர்க்க சப்தார்த்தமாவதறகுக காரணமான - துக்கம் கலசாத தொடர்ந்த ஸுகத்தைத் தருந தன்மை ஒரு நாளும் பொருந்தவே பொருந்தாது.

பகவானுடைய வைகுண்ட லோக மானது - 'முக்தியடைந்தவன் (பர மாத்மாவைக் கிட்டியனுபவித்துப பேரின்பம் துய்ப்பவன) அழுது கொண்டிருககும் பந்துக்களின் அருகே கிடக்கும் தனது உயிரிழந்த துக்கரூபமான சரீரத்தை நினையாத வனுய்' (ச்சாந்தோ 8-12-3) என்று கூறியபடியே (துக்கரூபமான தன னுடலையும் நினைத்தற்கு இடமில லாமல்) சிறிதேனும் துக்கத்தோடு கலசாத ஸுகத் தொடர்ச்சியை உண்டு பண்ணுமதென்பதில் கருத்து வேற்றுமையில்லை.

ஆகையால் 'ஸ்வா லோகமாகசச கதஜ்வர: சிரம்' என்ற பாடத்திலும், வைகுண்டத்திற்கு ஸ்வாமியாயிருத்த லென்னும் தன்மை தோன்றுதல் தடையற்றதாகையால் அதுவே கார ணமாக விஷ்ணுவுக்குப் பரம்பொருட் டன்மையைச் சாதிப்பது மிகவும் பொருத்தமென்று தேறியது

இனி ஏழாவது காரணம்-ஸரஸிஜ ஸமத்வாத் என்பது. இங்கு, குளத் தில் உண்டாவது என்று பொருள் படும் ஸரஸிஜமென்ற சொல் பர்யாயமென்னும் சொலலாற்றலினுல் புணடரீகம் (தாமரை மலா) என்னும் பொருளில் வந்துள்ளது. (தாத்பர்ய மாவது ஒரு சொல்லுக்குப் பல பொருளகள உள்ளனவாயினும் இடத் திற்குத் தககவாறு அவற்றில் ஒன் றையே கருதுதலாகும். இவ்விடத் தில், குளத்தில் முளைப்பதென்று பொருள் தரும் ஸரஸிஜமெனற சொல் லிறகு குளத்தில் உண்டாகும் அல்லி முதலிய பல பொருள்கள் இருப் பினும், அவற்றுள் பகவானுடைய திருககண்களுக்கு உபமானம் கூற வேண்டிய இவ்விடத்திற்கேற்பத் தாமரையெனனும பொருளையே கருதுதலாகும்.) ஆக, புண்டரீகங்

கள் போலுங் கண்களையுடைமை யினால் என்பது தேறிய காரண மாகும். புண்டரீகாக்ஷத்வம் பர ப்ரஹ்மத்திற்கே உரியதொரு தன்மை யாகும்.

அவ்விதமாகவே 'தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகம் ஏவம் அக்ஷிணீ. தஸ்ய உத் இதி நாம, ஸ ஏஷ: ஸர் வேப்ய: பாப்மப்ய: உதித., உதேதி ஹவை ஸர்வேப்ய. பாப்மப்ய: - ய ஏவம வேத' என்று ச்சாந்தோக்யம் முதல் ப்ரபாடகம் ஆறும் கண்டத் தில் (7) கேட்கப்படுகிறது.

அப்புருஷனுக்குக் கப்யாஸமான புண்டரீகம் எத்தகையதோ அத் தகைய இரண்டு கண்கள் உள்ளன. அவனுக்கு உத் என்று பெயர்-அப் படிப்பட்ட இப்புருஷன் எல்லாப் பாபங்களையும் கீழே தள்ளி உயர்ந்த வனாகையால. எந்த ஜீவாத்மா இப் படிப் புருஷனை அறிவானோ அவன் எல்லாப் பாவங்களையும் கீழே தள்ளி உயர்ந்தவனாகிறான் என்பது இதன் பதப்பொருள்.

இனி இதற்கு விளக்கம் வருமாறு: தஸ்ய=சூரிய மண்டலத்திற்கு உள்ளே யிருக்கும் அப்பரம புருஷனுக்கு. அக்ஷிணீ=இரு கண்கள். கப்யாஸம்— (1) கம் பிபதி [illegible] [illegible]யதே இதி கப்யாஸம்= நீரைக குடிக்கிறான் (வற்றச் செய் கிறான்) ஆகையால் கபி: எனப்படு பவன ஸூர்யன், அவனால் மலர்த்தப் படுவது காரணமாக [illegible]ஸம்=நீரைக் குடிப்பது (உள்ளே நீரைக் கொண்டு செழித்துள்ளது) ஆகையால் கபி: என்பது தாமரைத் தண்டு, அததண் டில் (பறிக்கப்படாமல்) இருப்பது காரணமாக கப்யாஸமென்பது தாமரை மலர். அல்லது (3) கே அப் யாஸ்தே இதி கப்யாஸம்=நீரில் (உல ராமல்) இருப்பது காரணமாக கப் யாஸமென்பது தாமரை மலர். புண் டரீகமாவது தாமரை மலராகும். கப் யாஸம் புண்டரீகம் யதா ஏவம் தஸ்ய அக்ஷிணீ=சூரியவொளியால் முகிழ் விரியப் பெற்றதும் பறிக்கப்படாமல தணடிலேயே இருப்பதும் நீரில் உண் டானதுமான தாமரை மலர் போன் றன அப்புருஷனுடைய இரண்டு திருக் கணகள் என்றபடி. தஸ்ய உத் இதி நாம=அவனுக்கு உத்(=உயர்ந்தவன்) என்பது வாசக சப்தம (பெயர்) ஆகும். உத் என்று பெயர் வந்த மைக்குக் காரணம் 'ஸ ஏஷ: ஸர்வே ப்ய: பாப்மப்ய: உதித:' என்பதனால் கூறப்படுகிறது முற்கூறிய இப்பரம புருஷன் எல்லாப் பாபங்களையும் தள்ளி மேலே யேறி உயர்ந்தவன். அதாவது அபஹதபாப்மா (=பாபத் தின் ஸம்பந்தமில்லாதவன்) என்ற படி. எல்லாப் பாபங்களினுடையவும் ஸம்பந்தமில்லாமல் உயர்ந்தவனாகை யால் பகவானுக்கு உத் என்ற பெயரு டைமை இத்தால் சொல்லிற்றாய்த்து. 'ய: ஏவம் வேத ஸ: ஸர்வேப்ய: பாப் மப்ய: உதேதி' = யாவனொரு ஜீவாத்மா இப்படி (பரம புருஷனை) அறிகிறானோ அவன் எல்லாப் புண்ய பாபங்களிருந்தும் விட்டு நீங்கி உயர்ந் தவனாகிறான் (=புண்ய பாபத் தொடர்ச்சியற்று முக்[illegible] [illegible] பயனை விளக்கும்— என் [illegible] உலகத்தில் தென்படாததொரு பொருளே பாபமென்று குறிக்கப்படு வதனால், இஹபரலோகங்களில் உள்ள ஐச்வர்யம் முதலிய பயன்களை விளைக் கும் புண்யங்[illegible] [illegible]ஸாம்யம் உபைதி' (முண் டகம் 3-1-3) (பக்தன் பரம புருஷ னைக் கண்டபோது புண்ய பாபங்களை உதறித் தள்ளிவிட்டு சரீரத்தில் பற்றற்றவனாய் பகவானோடு பூர்ண மான ஸாம்யத்தை (ஒப்புமையை அடைகிறான்)'—என்றிது முதலிய இடங்களில் பாபம்போல் புண்ணியத் திற்கும் விடப்பட வேண்டுந்தன்மை கேட்கப்படுவதனாலும் புண்யமும் இங்கு 'பாப்மா' என்பதன் பொருள் ளாதல் தகும். இந்த ச்ருதியில்— சூரிய மண்டலத்தின் நடுவில் இரு பவனாய் மோக்ஷத்தையடைய விரும் மவர்களால் தியானிக்கத் தக்கவனாய் மோக்ஷமளிப்பவனுமாகிய பரம பு ஷனுக்குப் புண்டரீகாக்ஷத்வம் தனி பட்டதொரு தன்மையாகக் கூற பட்டுள்ளது. 'திருவுக்கும் திருவா வன் யார்? ரஜோ குணமும் தமோ குணமும் கலசாத சுத்தமான ஸத்து குணத்துக்குக் கொள்கலமானவ யார்? புண்டரீகாக்ஷன் யார்? புருஷ களில் மிக உயர்ந்தவன் யார்? எ றன்றோ பகவத்யாமுனமுனிகள் (ஆ வந்தார்) அருளிச் செய்தது.

பரப்ரஹ்மத்திற்கே உரிய தன தன்மையான முற்கூறிய இப்புண்ட [illegible] போன்ற திருக்கண்களையுடை விஷ்ணுவானவர் தம்மை நால்வரா கொண்டு (அவதரிப்பதற்காக) போது தசரத மஹாராஜ [illegible] அது விஷ்ணுவே பரப்ரஹ்மமெ பதை அறிவிககின்றது. (தொடரு

முடியுமா?

தீவளைகள் கூச்சலிடுவதை மந்திரஒலி என்று கொள்ள முடியுமா? கங்கையில் மூழ்கி கிடககும் கல்லை கங்கா ஸ்நானம செய்தது என்று கூறிவிட முடியுமா? ஸ்ரீ புரந்தரவிட்டலனைப் பாடிப் பரவாத பாபியை மனிதன் என்று மதிக்க முடியுமா?

— ஸ்ரீ புரந்தரதாசர்.

அனுப்பியவர் : ஆர். சுப்பராவ்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

நன்கொடைத் திட்டத்தின் கீழ் குடில்கள்

திருமலையில யாத்திரிகாகளின் நலனுக்காக நன்கொடைத தொகைகளின் மூலம பல தங்குவசதிகளான குடில்கள, அறைத்தொகுதிகள, சத்திரங்கள், விருந்தினர் விடுதிகள் போன்றவற்றைக் கட்டுவதற்குப் பொது மக்களிடமிருந்து தேவஸ்தான மேலாண்மை நன்கொடைகள் பல பெற்று வருகின்றது. இத்திட்டத்தின் விவரங்கள் பின் வருமாறு:

கருடாத்ரி நகர் குடில்கள் திட்டம

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொனறும் 4 அறைத தொகுதிகளைக் கொணடு விளஙகும்படியான 18 குடில்கள் கட்டிடத்தின் அடிததளத்திலும், முதல் தளத்திலும் கட்டப்படும்.

* பொதுத் தாழவாரம் மற்றும் குளியலறை இணைப்பு வசதியுடன் கூடிய 10×12 அடி பரப்பளவு கொண்ட அறையும் உள்ளதாக ஒவ்வொரு அறைததொகுதியும் விளங்கும.

* ரூ. 30,000 வழங்கும் நனகொடையாளரின் பெயரில 320 சதுர அடி கடடிட பரப்பளவு கொண்டதாக இவ்அறைத்தொகுதி விளஙகும். நன்கொடையாளர் விருமபி, 8 அறைத் தொகுதிகளைக் கொண்ட ஒரு தனிக்குடிலுக்கு ரூ. 2 4 இலட்சமும், 4 அறைத் தொகுதிகளைக் கொண்ட ஒரு தனிக்குடிலுக்கு ரூ. 1.2 இலட்சமும், 2 அறைத் தொகுதிகளைக் கொண்ட ஒரு தனிக்குடிலுக்கு ரூ. 60,000-ம் வழங்கினுல், அவை கட்டித் தரப்படும்.

ராம் பகீச்சா விருந்தினர் விடுதி திட்டம்

கோயிலுக்கு வடகிழக்குப் பக்கத்தில் இந்த விருந்தினர் விடுதி கட்டப்படும். இவவிடுதி மூன்று தளங்களையும், ஒவ்வொரு தளமும் 50 அறைத தொகுதிகளையும், ஒவ்வொரு அறைத்தொகுதியும் 600 சதுர அடி கட்டிடப் பரப்பளவில் விளங்கும்படியாக 14×18அடி என்ற பரப்பளவில் உள்ள அறைகளையும் கொண்டு விளங்கும். மேலும் ஒரு பொதுத் தாழ்வாரமும் கொண்டு விளங்கும்.

* ஒவ்வொரு அறைத்தொகுதிக்கும் நன்கொடையாளர் ரூ. 60,000 வழங்கவேண்டும்.

ஸப்தகிரி தர்மசாலை

[illegible] "ஸப்தகிரி சத்திரங்கள" எனும் பெயரில் இம்மாபெரும் திட்டம் மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு அறைத்தொகு[illegible] 80,000/- செலவில் கட்டப்படும்.

ஆகும செலவில் ரூ. 40,000/- நன்கொடையாளர் வழ[illegible]அறைத்தொகுதி அவருடைய பெயரில் அமையும்.

தொகுதியில [illegible]
களுக்கும் 15 வருடங்களுக்கு மட்டும[illegible]

இத் தங்குவசதி ஒதுக்கீடுகளின் போது நன்கொடையாளர்களின் [illegible] அவருடைய நன்கொடை அறைத் [illegible] வாணிகக் கழகங் ரிமை வழங்கப்படும்.

* ஒவ்வொரு அறைத்தொகுதி அல்லது குடிலிலும் சம்பநதப்பட்ட நனகொடையாளர்களின் பெயர்ப் பலகைகள் நிரந்தரமாகப் பொருததப்படும்.

மேற்படி திட்டங்களில் பங்கேற்க விருமபும் நனகொடையாளர்கள அதறகான தொகையினைச் "செயலாட்சித் தலைவர், தி. தி. தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயரில் காசோலை மூலமாகப் பெற்று, தேவையான தகவல்களுடன் கூடிய கடிதத்துடன் இணைத்து அவற்றை, "தலைமை கணக்கு அலுவலர் தி. தி. தேவஸ்தானம் திருப்பதி" எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு "செயலாட்சித்தலைவர், தி. தி. தேவஸ்தானம், திருப்பதி" எனும் முகவரியுடன் தொடாபு கொள்ளவும்.

செயலாட்சித் தலைவர்.

"தரும் பொருள் சிறிதே; பெறும் அருள் பெரிதே"

கீதை காட்டும் நல்வழி

சிரத்தாத்ரய விபாக யோகம்
அத்தியாயம் — 17
பகுதி — 11

செய்கின்ற செயலில் எவ்வளவுக் கெவ்வளவு சுயநலம் குறைகிறதோ, அந்த அளவு அது புனிதம் அடைகிறது. மாறாக அதில் எவ்வளவுக் கெவ்வளவு சுயநலம் கூடுகிறதோ, அந்த அளவு அதில் குற்றமும், தோஷமும் வந்துறுகின்றன. செய்கின்ற கர்மம் எவ்வளவுதான் நல்லதாயிருந்த போதிலும் அது தனக்காகச் செய்யப் பட்டால் அது தோஷம் உடையதாகிறது. அதே வேளையில் குற்றம் பொருந்தியவை போலப் புறத்தே தோன்றும் காரியங்கள் பொது நலத்திற்காகச் செய்யப்பட்டால் அவை புனிதம் வாய்ந்தவை யாகின்றன. யாகம் புனிதமான காரியம்தான். ஆனால் அதனால் தனது இன்பமும் செல்வமும் கூட வேண்டும் என்ற சுயநல எணணம் மிகுந்தால் அது குற்றம் உடையதாகிறது. மாறாகப் போர்புரிதல் பலருடைய உயிரைப் போக்கும் ஒரு செயலாகும். ஆனால் தனக்காக அல்லாது மறத்தை முறியடிப்பதற்காக, அறத்தை நிலைநாட்டுவதற்காகச் செய்யப்பட்டால் அது புனிதம் வாய்ந்ததாகிறது. அர்ஜுனன் உற்றார் உறவினரைக் கொல்ல விழையாது, போர்புரிய மறுத்தான. ஆனால் பகவான கிருஷ்ணன் அவனிடம், "அர்ஜுனா, மறவழி நிற்கும கௌரவர்களைக் கொல்வது புனிதமான செயலாகும். இதனால் உனக்கு பாபம் எதுவும் கிடையாது. இது தர்ம யுத்தம். எடுவில்லை தொடு அம்பை', என்று அவனது கடமையை நினைவூட்டினார். நமக்கு நல்லது போலத் தெரிவது இறைவனது பெரும் திட்டத்தில் தீயதாகலாம். மாறாக நமக்குத் தீயதாகத் தென்படுவது இறைவனது திட்டத்தில் நல்லதாகலாம். செய்யும் செயலை 'கிருஷ்ணார்ப்பணம்' என்ற நோக்கில் செய்தால் கர்மபலன் செய்பவனை ஒட்டாது. 'அனைத்தும் அவனுக்கே' என்னும் மனோபாவம் மிகச்சீரிய நிலையாகும்.

ஸத்பாவே ஸாதுபாவே ச
ஸதித் யேதத் ப்ரயுஜ்யதே |
ப்ரசஸ்தே கர்மணி ததா
ஸச்சப்த: பார்த்த யுஜ்யதே ||(17-26)

'பார்த்தா, உண்மையென்ற கருத்திலும், நன்மை என்கின்ற கருத்திலும், 'ஸத்' என்னும் சொல் வழங்கப்படுகிறது. மங்களகரமான கர்மங்களிலும் 'ஸத்' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது'

'ஸத்' என்ற சொல்லுக்கு என்னென்ன கருத்துக்கள் உண்டு, எந்தெந்த இடங்களில் அது பயன்படுத்தப்படுகிறது என்பது பற்றிய விளக்கம் இந்த சுலோகத்திலும், அடுத்த சுலோகத்திலும் தரப்படுகிறது.

உண்மையில் உள்ளது பிரம்மம் ஒன்றே.அதுவே ஸத்.மற்ற அனைத்தும் அதாவது இப்பிரம்மாண்டமான பிரபஞ்சம் முழுவதும் அஸத். ஆனால் பூவுடன் சேர்ந்த நாருக்கும் பூவினால் பெருமை சேருவது போல, வைர மூக்குத்தியால் அது வைக்கப்பட்டிருக்கும் பெட்டிக்கும் மகிமை வருவது போல பிரம்மனின் தோற்றமாக விளங்குவதால் சுட்புலனாகும். தோன்றி மறையும் பொருள்களையும் 'ஸத்' எனப்பாவித்தல் வேணடும். உதாரணமாக 'கல்யாணம்' என்ற சொல்லுக்கு மங்களம் என்பது பொருள். ஆனால் லௌகிக வழக்கில் பிரம்மச்சாரி ஒருவன பெண்ணொருத்தியைக் கைப்பிடித்து இல்லறம் புகுவதைக் கல்யாணம் எனகிறோம். உண்மையில் பந்தம் எதுவும் இல்லாமலிருந்த பிரம்மச்சாரி கல்யாணத்தினால் பந்தத்திறகுள்ளாகிறான். சுதந்திரப் பறவையாயிருந்த ஒருவன் கல்யாணத்தினால் சுதந்திரத்தை இழந்து விடுகிறான். இது உண்மையில் மங்களத்தையா குறிக்கிறது? இல்லை. அதைப் பேச்சு வழக்கில கல்யாணம என்கிறோம். அதுபோல லௌகிக வாழ்வில் உண்மையல்லாததையும் உண்மையாகப் பாவித்தல் வேண்டும் என்ற கருத்தில் 'ஸத்' என்ற சொல் வழங்கப்படுகிறது.

உண்மையாகவே ஒருவன் கெட்டவனாக இருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அவனைக் கெட்டவன் என்று திட்டினால் அவன் மேலும் கெட்டுப் போவானே ஒழிய திருந்த

திரு. டி. கே. நாராயணன,
M.Sc., M Phil.,
ஆசிரியர் "சமயஜோதி" மதுரை.

வழியில்லை. மாறாக அவனை 'நல்லவன், நல்லவன்' என்று சொல்லி வந்தால் காலக்கிரமத்தில் அவன் நல்லவனாகத் திருந்த வாய்ப்புணடு. இத்தகைய நோக்கிற்கு 'ஸாது பாவம்' என்று பெயர். அனைத்திலும் நல்லதைக் காணுதல் என்று இது பொருள் படுகிறது. ஸ்ரீசுவாமி சிவானநதர் தமது வாழ்நாள் முழுவதும் போற்றி வந்த பண்பும் இதுவேயாகும். ஏனைய அனைத்தும் குற்றம் உடையது. எனினும் அனைத்தையும 'ஸத்'தாகவே கருதுதல் மற்றும் காணுதல் ஒரு சீரிய பண்பாகும்.

அடுத்து 'ஸத்' ஒரு மஙகள வாக்காகவும் பயன்படுகிறது. மங்களம்

அல்லாததையும் மங்களமாகச் சொல்லிப் பழகுதல் மனதிற்கு இதமளிக்கும். நமது இந்த உடல் தோன்றி மறையும் காரணத்தால் பொய். ஆனால் இதை மெய் என்று உபசாரச் சொல்லாக வழங்குகிறோம். பொய்யான இந்த உடலினுள் மெய்யான பிரம்மம் குடிகொண்டுள்ளது என்பதைக் குறிப்பதற்காக அப்படிச் சொல்லுகிறோம். அதுபோல மங்கள மல்லாததை மங்களமாகச் சொல்ல 'ஸத்' என்கிறோம். கொடியது, கெட்டது, பொய்யானது, அமங்கள கரமானது ஆகியவற்றிலும் இனியதையும் நல்லதையும் கண்டு பழகும பாங்கை வளர்த்துக் கொணடால் தான் வாழ்க்கை இனிக்கும். 'ஸத்' என்ற உயர்சொல் அத்தகையதொரு மனப்பான்மையை வளர்க்கப் பயன் படுகிறது.

யக்ஞே தபஸி தானே ச
ஸ்திதி: சோச்யதே |
கர்ம சைவ ததர்த்தீயம்
ஸதித்யேவாபிதீயதே || (17-27)

'யக்ஞம், தவம் மற்றும் தானத்தில் நிலைத்திருப்பது 'ஸத்' என்று சொல்லப்படுகிறது. மேலும் பிரம மத்தின் பொருட்டுச் செய்யும் கர்மமும் 'ஸத்' என்றே சொல்லப்படுகிறது'.

யக்ஞ, தான, தபம் ஆகியவையெல்லாம் கர்மத்தின்பால்படுகின்றன. கர்மம் செய்தால் வினைப்பயன் உண்டாகுமே. அப்படியானால் இத தகைய கர்மங்களில் ஒருவன் ஈடுபடலாமோ என்ற ஐயம் ஒருவனுடைய மனதில் எழக் கூடும். அதைப் போக்கும் வகையில் பகவான இந்த சுலோகத்தில் விளக்கம் தருகிறார். 'தீ' என்று சொன்னதுமே நமக்கு சுட்டுவிடாது. அதுபோல கர்மம் என்று சொன்னவுடனேயே அது ஒருவனை பந்தப்படுத்தும் என்று கருதுவது தவறு. உதாரணமாக சென்ற சுலோகத்தில் கல்யாணம் என்ற சடங்கு ஒருவனைப் பந்தத்திற்குள் ளாக்கும் என்று கூறப்பட்டது.ஆனால் அதே செயலால் இலட்சிய இல்லற வாழ்வு வாழ்ந்து, கணவனும் மனைவியுமாக இறைத் தொண்டில் ஈடுபட்டு, பந்தத்திற்குள்ளாக்கும் என்று கருதப் படும் அதே இல்லறத்தை பநதத்தி லிருந்து விடுபடும் ஒரு சாதனமாக ஆக்கி முக்தி பெற்றவர் அநேகர் உளர். மற்றொரு எடுத்துக்காட்டை யும் இங்குக் காண்போம். வீடு கட்டுகிறோம். வீடு கட்டுதல் நிலைத்த செயல். சாரம கட்டுதல் நிலையற்ற செயல். இருப்பினும் சாரம் கட்டாமல் வீடு கட்ட முடியாது. அதுபோல யக்ஞ, தானம், தவம் போன்ற கர்மங்களைச் செய்தேயாக வேண்டும். தம மளவில் இச்செயல்கள் நிலையான செயல்கள் ஆகமாட்டா. ஆனாலும் பிரம்மத்தை அடைவதற்கு இவை உறுதுணையாக அமையுமேயானால் இவையும் 'ஸத்' கர்மங்களாக ஆகி விடுகின்றன. ஒரு கர்மம் தன்னளவில் குறையுடையதன்று. அது எதற்காகச் செய்யப்படுகிறது என்பதைப் பொறுத்து அது மகத்வம் வாய்ந்த தாகிறது. கத்தியைப் பயன்படுத்தி ஒருவனது உயிரைப் பறிக்கலாம். அது கொலைச் செயலாகிறது. மாறாக ஒருவனுக்கு கத்தியினால் 'ஆபரேஷன்' செய்து உயிரையும் காப்பாற்றலாம். அது சிகிச்சையாகிறது. அடிப்படை நோக்கத்தைப் பொறுத்து கர்மம் கீழானதாகவோ அல்லது மேலானதாகவோ அமைகிறது. கடவுள் பொருட்டுச் செய் யப்படும் காரியம் எவ்வளவு குற்ற முடையதாயிருந்தாலும் அது ஸத் காரியமாய் மாறிவிடுகிறது.

அச்ரத்தயா ஹுதம் தத்தம
தபஸ்தப்தம க்ருதம் ச யத் |
அஸதித்யுச்யதே பார்த்த
ந ச ததப்ரேத்ய நோ இஹ ||
(17-28)

'சிரத்தையின்றிச் செய்யும் யாகமும், தானமும், தவமும் மற்றக் கர்மமும் 'அஸத்' எனப்படும். 'அர்ஜுனா!' அது மறுமைக்கு உதவாது, இம்மைக் கும் உதவாது'.

எந்தக் காரியத்தைச் செய்தாலும் சிரத்தையுடன் செய்தால் அது செய் பவனுக்கும், மற்றவர்களுக்கும் பயன் படுகிறது. சிரத்தையின்றிச் செய்யப் படும் செயல் மேலாம் பலனை அளிப்ப தில்லை. உதாரணமாக டேப் ரிகார் டரில் மந்திரங்களும், சுலோகங்களும் உச்சரிக்கப்படுவதால் அந்த இயந் திரத்திற்கு ஏதாவது பலன் உண்டா? இல்லை. ஆனால் அதே மந்திரங்களையும், சுலோகங்களையும் ஒருவன் பக்தி பூர்வமாக சொல்வானானால் அதனால் அவனது மனம் தூய்மையடையும். ஜீவபோதம குறைந்து பரபோதம் மேலிட வாய்ப்புண்டு.

'ச்ரத்தாவான் லபதே ஞானம்' என்று பகவான் கூறுகிறார். சிரத்தையுள்ள வன் ஞானத்தை அடைகிறான் என் பது இதன் பொருள். ஞானம் மட்டு மல்ல, எந்தக் காரியத்தில் வெற்றி பெற வேண்டுமானாலும் மனம் அதில் லயித்து விட வேண்டும். மனம் லயிப் பதுவே சிரத்தையின் முக்கிய அம்ச மாகும். சிரத்தையில்லாது ஒருவன் செய்யும் செயல் இயந்திர மயமாய் விடுகிறது. இயந்திரத்திற்கும், அம் மனிதனுக்கும் வேறுபாடு எதுவு மில்லை. சிரத்தையுடன செய்யப் படும் மேலான செயல்களெல்லாம் அனைவருக்கும் நலம் பயக்கின்றன. மற்றும் யக்ஞ, தான, தபம போன்ற புனிதமான செயல்களை ஒருவன் சிரத்தையோடு செய்வானானால் அவை நாளடைவில் அவனது ஜீவ போதத்தை அறவே இல்லாதாக்கி பரபோதத்தை நல்கி முக்தியை நல்க வல்லதாகிறது. நற்காரியங்களைச் செய்கையில் 'ஓம் தத் ஸத்' என்று சொல்லிக் கொண்டு செய்தால் அவை மேலும் புனிதமடைந்து மோட்ச சாதனமாயமைகின்றன.

(தொடரும்)

தெரிந்தும் தெரியாதன. . . .

திரு ஏ. சுந்தரராஜன்
சென்னை

அனுமானம :

பிரமாணங்களில் முதலாவது பிரத்யக்ஷம்; இரண்டாவது அனுமானம்.

புகையைக் கண்டால் அக்கினியும் இருக்கும் என்று நிச்சயிக்கிறோம். ஏனென்றால் புகைக்கும் அக்னிக்கும் இடையறாத ஒரு சம்பந்தம்-வியாப்தி இயல்பாக உண்டு.

புகையிருக்குமிடமெல்லாம் அக்கினி இருக்கும் என்பது அன்வய வியாப்தி. அக்கினி இல்லாத இடத்தில் புகை வராது என்பது வியதிரேக வியாப்தி. ஒருவன் தனக்குள் அனுமானித்ததை ஸ்வார்த்த அனுமானம் என்றும்; பிறர்க்கு உணர்த்த விரும்பியதை பாரார்த்தானுமானம் என்றும் கூறுவர். உண்மை வியாப்தியை அறிவது தொகுப்பு அனுமானம் (INDUCTION); இன்மை வியாப்தியை அறிவது பகுப்பு அனுமானம் (DEDUCTION).

அஷ்டக்கிராமம் :

மைசூரை ஆண்டு வந்த ஜைன சமய மன்னன் பிஜ்ஜளன் (ஹொய்சள அரசன்) ஸ்ரீராமானுஜரால் வைணவ ராஜன்; விஷ்ணுவர்த்தன் என்று பெயர் பூண்டான். அவன் ஸ்ரீரங்கப் பட்டினத்திற்கருகே காவிரியின் இரு கரைகளிலும் உள்ள எட்டுக் கிராமங்களையும் அவருக்குப் பரிசாக அளித்தான். இவையே அஷ்டக்கிராமம் என வழங்கப்படுவன.

அஷ்டாதச ரகசியங்கள் :

இரகசியமாகக் கேட்டு உணரத்தக்க பதினெட்டு வைணவநூல்களின் தொகுதி. இப்பதினெட்டும் மணிப்பிரவாள உரை நடையில் பிள்ளை லோகாச்சாரியரால் இயற்றப்பட்டவை. அவை :

1. **முமுக்ஷுப்படி :** திருமந்திரம், துவயம், சரம சுலோகம் என்னும் மூன்று மந்திரங்களின் விளக்கவுரை.

2. **தத்துவத்திரயம் :** விஷிஷ்டாத்வைதத்தின் மூன்று தத்துவங்களை—சித்து, அசித்து, ஈஸ்வரன்—கூறுவது.

3. **அர்த்த பஞ்சகம் :** வீடுபேற்றை விரும்புவோர் அறிய வேண்டிய ஐந்து கருத்துக்களை விளக்கும் நூல் ஐந்து கருத்துக்களாவன: இறைவன் இயல்பு, உயிர் இயல்பு, உயிர் இறைவனை யடையாமல் தடுத்து நிற்கும் வினையியல்பு, அத்தடையைப் போக்கி இறைவனையடைவதற்குரிய உபாயத்தின் இயல்பு, இறைவனை அடைந்து பெறும் பயன்—என்பன.

4. **ஸ்ரீவசன பூஷணம் :** வேதம் முதலிய நூல்கள், ஆழ்வாருடைய பாசுரங்கள், பூர்வாசாரியர்களுடைய ஒழுக்கங்கள் முதலியவற்றிலிருந்து அதற்குரிய நுண் பொருள்கள் பலவற்றைத் தொகுத்துரைக்கின்ற ஒரு சிறந்த நூல்.

5. **அர்ச்சராதி :** ஸ்ரீவைஷ்ணவர்கள் முக்தி பெறும் பொழுது செல்லும் வழி, ஆங்காங்கெய்தும் சிறப்பு இவற்றைக் கூறும் நூல்.

6. **பிரமேய சேகரம் :** உய்தற்குரிய மக்கள் இறைவனருள் தொடங்கி வீடுபேற்றுக அடையும் நிலைமைகளைக் கூறும் நூல்.

7. **பிரபந்நபரித்ராணம் :** வீடுபேற்றிற்குத் தன் முயற்சியைவிட்டு இறைவனையே தஞ்சமாக அடைந்த ஒருவனுக்கு அவ்இறைவனைத் தவிர பிறர் எவரும் ரக்ஷகரலலர் என்பதை விளக்கும் நூல்.

8. **சார சங்கிரகம் :** மந்திர ரத்தினமென்னும் துவயத்திற்குப் பத்து பொருள் கூறி, அவற்றைத் திருவாய்மொழியின் பத்துப் பகுதிகளோடும் ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு பொருளாக அமைத்துக் கூறும் நூல்.

9. **சம்சார சாம்ராஜ்யம் :** உடலை ஒரு ராஜ்ஜியமாகவும், அறியாமை முதலிய தீக்குணங்களை அங்கங்களாகவும், உயிரை அரசனுகவும் உருவகப் படுத்திக் கூறிப் பின்னர் உயிர் நல்வழியடையுமாற்றைக் கூறும் நூல்.

10. **நவரத்ன மாலை :** ஸ்ரீ வைஷ்ணவர்கள் இறைவனையும் அடியார்களையும் உலக மக்களையும் பிறரையும் எவ்வாறு கருத வேண்டும் என்பது பற்றி ஒன்பது கருத்துக்களைக் கூறும் நூல்.

11. **நவவித சம்பந்தம் :** இறைவனுக்கும் உயிர்க்கும் உள்ள ஒன்பது விதமான சம்பந்தங்களை அஷ்டாக்ஷர மந்திரங்காட்டி கூறும் நூல்.

12. **யாத்ருச்சிகப்படி :** திருமந்திரம் சரம சுலோகம், துவயம் என்னும் மூன்று மந்திரங்களைப் பற்றிக் கூறும் நூல்.

13. **பரந்தபடி :** இதுவும் மேற்கூறிய மூன்று மந்திரங்களைப் பற்றிய மிக விரிவான நூல்.

14. **ஸ்ரீய :பதி படி :** மேற்கூறிய மூன்று மந்திரங்களைப் பற்றிய நூல்.

15. **தத்துவ சேகரம் :** ஸ்ரீ மந் நாராயணனே முழு முதல் கடவுள் என்பதை வேதம் முதலிய பல நூல்களிலிருந்து மேற்கோள் காட்டி நிறுவும் நூல்.

16. **தனித்வயம் :** துவய மந்திரத்தின் விரிவான உரை.

17. **தனிச்சரமம் :** சரமசுலோகத்தின் விரிவான உரை.

1 . **தனிப்ரணவம் :** பிரவணத்தின் விரிவுரை.

இப்பதினெட்டு நூல்களுள் முமுக்ஷுப்படி, தத்வத்ரயம், ஸ்ரீவசன பூஷணம் ஆகிய மூன்றும் உரைநடையாக இருப்பினும் சூத்திர யாப்பு போல் இருத்தலால், இவற்றிற்கு மணவாள மாமுனிகள் விரிவுரை இயற்றியுள்ளார்.

ஆகமம் :

ஆகமம் என்றால் தொன்றுதொட்டு வரும் அறிவு என்பதாகும். பொதுவாக வேதங்களுக்கும் சாஸ்த்திரங்களுக்கும் அமைந்த பெயராக இருப்

(திருப்புக)

திருமாலின் திருஅவதார அந்தாதி

ஓமெனும பிரணவ உடபொரு ளானவனே
ஓதிடும வேதமதை எழுதினேனே - வேதநாயகன
திருஅவதாரம் காவிய மாககிடவே முன்னின்று
திருவருள தந்தெனைக காபபாயே!

பணணெல்லாம் பரந்தாமன் பகதிப் பணணுக
மண்ணெல்லாம் திருமாலின் அவதாரப புகழபாட
பாறகடலில் அரவணைத் துயில் கொணடானை
பார்முழுதும் போறறிப் பணிந்திட அவதாரமே!

அவதாரம் எத்தனையோ எடுத்திட்ட போதிலும்
அவனியில் போற்றுவதோ பத்துவித அவதாரமாம்
அவற்றுள் முதலாகும் மச்சா வதாரமே
அவனியில் நீரினஉயிரே முதலெனும அறிவியலே

அறிவியல கூற்றினை பரிணும வளர்ச்சியை
அறிநதிடச் செய்திடும் அவதார வரிசையும்
நீரினில் நீந்திடும் மீனுகிப் பின்னர்
நீர்நில உயிரான கூர்மமாய் தோற்றம்

தோற்றம் இன்பம் பயக்கா வராகம்
தோன்றும் உயிரின வளர்ச்சியைக் காட்டும்
தடித்ததன் தோலுடன் நீர்நிலை நாட்டம்
தடுத்திட முடியா மண்ணகழ் வேகம்

வேகமாய் விலங்கினம் மண்ணில் பெருகிட
வேறுபாடு மிகுந்திட்ட உயிரினக் கூட்டம்
மாறுபட்ட உருவமாய் மனிதனும் தோன்றுமுன்
மாறுபாட்டை விளக்கவே ஸ்ரீநரசிம்ம மூர்த்தியாம்.

மூர்த்தி சிறிதெனின் கீர்த்தி பெரிதனவே
மூவுல களநத வாமன அவதாரம்
மனிதனின் தோற்றம் சிறிதாம் முதலில்
மனிதன் வளாந்திட பயனும் ஆயுதம்

ஆயுதம ஏந்தியே போர்நிலை கொணடான்
ஆயினும் ஆராயும அறிவினில தேராநிலையாம்
அறிவியல் அமைப்பை அமைத்துக் காடடிய
ஆற்றலின் திறனும் அடுத்ததாய பரசுராமன்.

ராமனுல் மககளாட்சி மலாநதிடச செயததை
ராமனுக்கு மகுடம் சூட்டலைக் காடடாது
“வசிட்டனே புனைந்தான் மௌலி” எனறுமே
வழுத்திய கம்பனுல் காட்டும் நன்னீதி.

நீதிமதி நாட்டில் நிலைத்திடச் செய்திட
நதிமீது ஓடமவிடும் குகனுேடும் நட்பாம
பாதகம் செய்திட்ட ராவணனுல் தம்பிக்கு
பாங்குடன் உரைசெயச் செய்த மேன்மை.

மேன்மை பெற்றிடவே அன்பினைத் துணையாக்கி
மேதினியில் புள்ளொடும் விலங்கொடு நட்பாகி
மாதவன வாழ்வியல் முறைதனை நமக்காககி
மாதவள் சீதையிடம் மனையற ப்பாசமாம்.

பாசமும நேசமும் பணபினை வளர்க்கும்
பசிதீர்க்க உழுதொழிலே மண்ணில் சிறப்பாக்கும்
பலவுயிரும் புரிந்திட பலன்மிகக் கணடிடவே
பலராம அவதாரம் காட்டுதலைக் காண்.

காண்கின்ற உயிரெலாம் கண்ணன் உருவென
காண்பிக்கும் அவதாரம் கீதையின் உபதேசம்
காண்கின்ற தீயவெலாம் கடிதாய் மறைந்திட
கண்ணன் நாமமே துணையென ப்பாடு.

பாடுபடும் மக்கள் பயன்மிகக் கணடிடவே
படுவேகச் செயல்களில பக்தியை மறைத்திடவே
பிரிவினை வேற்றுமை உயர்வு தாழ்வெனப்
பிறநததை மாற்றவே தோனறும்கல்கி அவதாரம்.

அவதாரம் அனைததும் ஆருயிாகட் கின்பமாககும்
அவனியில் இறைபக்தி யொன்றே பாவம்போக்கும்
அன்பாலே இணைந்து அறமே நன்குணர்ந்து
பணபாலே பாடுவாய நாளுமே பக்திப்பண.

பரமககுடி வெ. சுந்தரம்.

(முன் பககத் தொடர்சசி)

பினும் சிறப்பாக கடவுளுடைய வழி பாட்டை இரகசியம், மந்திரம், மூர்த்தி, கோயில் ஆகிய முறைகளில் விவரித்துக் கூறும் தொகுதியின் பெயராக வழங்கி வருகிறது.

கோயில்களிலும், இல்லங்களிலும் வைணவ வழிபாட்டு முறைகளை விவரிபபவை பாஞ்சராாத்த ஆகமம என்றும் வைகானச ஆகமம் எனறும் கூறுவர்.

இவை விக்கிரக வழிபாட்டின் அடிப்படை தத்துவத்தை விளக்குவதோடு, கோயிலகளை விஷ்ணு மூர்த்தஙகளை நிர்மாணிக்க வேண்டிய முறைகள், தேவப் பிரதிஷ்டை செய்வதற்கான விதிகள், நாடோறும் செய்ய வேணடிய வழிபாட்டு முறைகள், விழாக் காலங்களில் வழிபடுவோரிடம் காணப்பட வேண்டிய தகுதிகள், பக்தி சிரத்தையோடு வழிபடுவோர் அடையும் புண்ணிய பலன்கள் ஆகியவற்றை விரிவாகக் கூறுகின்றன.

அர்த்தமுள்ள எட்டு

திருமாலை வழிபடும் பக்தர்களுக்கு "ஓம் நமோ நாராயணு" என்ற எட்டு எழுத்துக்கள் கொண்ட மகாமந்திரம் வரப்பிரசாதம். இந்த மந்திரத்தை அஷ்டாக்ஷரம் என்றும் அழைப்பதுண்டு.

திருமாலின் மருமகனை திருமுருகனை வழிபடும் முருக பக்தர்கள், எட்டு எழுத்துக்கள் கொண்ட "ஓம் சரவணபவ" என்ற மந்திரத்தை ஜபிப்பார்கள். இதுவே அவர்களுக்கு மூலமந்திரம்.

எனவே எட்டின் பெருமையை இதன் மூலம் அறியலாம்.

வஸிஷ்டர், வாமதேவர், ஜாபாலி, கஸ்யபயர், காத்யாயனர், ஸாயஜ்ஞர், கௌதமர், விஜயர் என்ற எண்மரையும் "அஷ்டவசுக்கள்" என்று புராண காலத்தில் அழைத்து அவர்களைப் பெருமைப் படுத்தியுள்ளார்கள்.

யாக சாலையை அமைக்கும் போது ஸ்ரீவத்ஸம, உதகும்பம், பேரீ, ஆதர்சம், மத்ஸ்ய யுக்மம், அங்குசம், சங்கம், ஆவர்த்தம் என்ற எட்டு விருக்ஷங்களைக் கொணடு ஆவாஹணம் செய்து "அஷ்டமங்கலம்" என்று பெயர் சூட்டுவார்கள்.

ஆகம சாஸ்த்திரத்தில் ராஜகோபுரம், பிராகாரம், துவஜஸ்தம்பம், பலிபீடம், மஹாமண்டபம், அர்த்த மண்டபம், அந்தராளம், கெற்பக்கிரஹம் என்று எட்டுவித ஸ்தானங்களைக் கொண்டுதான் அமைக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

திருக்கோவில் விமானத்தை "எட்டு" அங்கங்களாக அமைக்க வேணடும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

சிற்ப சாஸ்த்திரத்தில் திருக்கோவில், அரண்மனை, வீடு, விக்ரஹம், கற்சிலை, பொம்மை, கையினுல் எழுதுவது, வர்ணம் தீட்டுவது என்ற "எட்டு"விதக் கலைகளை எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

கும்ப அபிஷேகம்,குடநீராட்டுவிழா குடமுழுக்கு விழா என்ற எட்டு எழுத்துக்கள் சேர்ந்த ஓர் புனிதச் சொல்லானது - புனித தீர்த்தங்களைக் கொண்டு திருக்கோவில்களில் நடத்தும் ஒரு பெருவிழாவாகும்.

இந்த புனித தீர்த்தத்தில் ப்ராண ஸ்வரூபம், அமுர்த ஸ்வரூபம், ஜோதி ஸ்வரூபம், சாந்த ஸ்வரூபம், ஸத்ய ஸ்வரூபம், வ்யாஹ்ருதி ஸ்வரூபம், பிரணவஸ்வரூபம், ஸர்வ தேவதா ஸ்வரூபம் என்ற எட்டுவித ஸ்வரூபம் அமைந்துள்ளதாக ஆன்றோர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

"அஷ்ட பந்தனம்" என்ற எட்டு எழுத்துச் சேர்ந்த மருந்தில் சுக்காங்கல், காவி, கொம்பரக்கு, கருங்குங்கிலியம், தேன்மெழுகு, லிங்கம், செம்பஞ்சு, வெண்ணெய் என்ற எட்டுவித பொருள்களும் சேர்ந்து உள்ளது என்பது நமது சிந்தனைக்கு ஒரு விருந்து.

வல்லாள கணபதி—சாலியில்,
துண்டி விநாயகர்—காசியில்,
வலம்புரி நர்த்தன விநாயகர்—
ஹளபேடில்,
விக்னராஜர்—விஜயபுரியில்,
ப்ரம்ப வரதர்—தேவூரில்,
பூஸ்வானந்தர்—மயூரேசத்தில்,
வரத விநாயகர்—மட்டில்,
மதுகைடப வரதர்—சித்டேக்கில்

அமர்ந்து கொண்டு நமது கஷ்டங்களைத் தீர்த்து வைக்கும் "அஷ்ட கணபதி"யாக விநயகர் அருள்பாலிக்கிருர்.

சிவபெருமான், திருக்கணடியூரில்— பிரம்மன் தலையை கொய்தது, திருவதிகையில் — திரிபுரங்களை எரித்தது, திருக்கோவிலூரில் — அந்தகாசுரனை அழித்தது, திருக்கடவூரில் — யமனை காலால் உதைத்தது, திருப்பறியலூரில்—தக்கனின் தலையைப் பறித்தது, திருவழுவூரில் — யானையின் தோலை உரித்தது, திருக்குறுக்கையில் — காமனை தகனம் செய்தது, திருவிற்குடியில்— சலந்தர வதம் செய்தது யாவும் "அட்ட வீராட்டானம்" என்ற திருப்பெயரோடு எட்டு திருத்தலங்களும் ஏற்றம் பெற்று விளங்கி வருகிறது.

"அஷ்ட புஜங்கள்" கொண்ட திருமால் நித்ய சேவை சாதிக்கும் திருத்தலம்-காஞ்சீபுரம். ஆழ்வார்களின் அமுத வாக்கில் "அட்ட புயகரம்" என்ற எட்டு எழுத்துக்கள் கொண்ட திருச்சொல்லோடு மங்களாசாஸனம் செய்தருளியது சிந்திக்க வேண்டியதொன்று. வீரச் செயல் புரிந்த திருமால் எட்டுத் திருக்கரங்களோடு காட்சி அளிக்கும் ஒரே நிலையும் இங்கு மட்டும்தான்.

திரு. எம். எஸ். பிச்சுமணி, சென்னை-56.

ஆரோக்ய வாழ்வுக்கு-ஆதிலட்சுமி
தான்ய விருத்திக்கு-தான்யலட்சுமி
வீரத்திற்கு - தைரியலட்சுமி
குழந்தை பாக்யத்திற்கு -
சந்தானலட்சுமி
புகழ், கீர்த்திக்கு - விஜயலட்சுமி
சௌபாக்யத்திற்கு - கஜலட்சுமி
வித்தைக்கு - வித்யாலட்சுமி,
செல்வத்திற்கு - தனலட்சுமி

என்ற "எட்டு" வித திருக்கோலத்துடன் நமது கஷ்டங்களைத் தீர்த்து வைக்க "அஷ்டலட்சுமி" எப்போதும் அருள்பாலித்து வருகிறுள்.

சிவபெருமானை உள்ளன்போடு வழிபட திங்கட்கிழமை விரதம், திருவாதிரை விரதம், உமா மகேஸ்வரி விரதம், சிவராத்திரி விரதம், கேதார

திருவேங்கட மாலை

பேராசிரியர் கா. பொ. இரத்தினம். — கிளிநொச்சி.

அருள்திரு வேங்க டத்தில்
அமர்ந்துறை அரியே! எங்கள்
மருளினை நீக்கும் மனனு!
மலைப்பினைப் போக்கும் மாலே!
இருளுறை மனத்தேன் என்றுன்
இணையடி கண்டு வாழ்த்தித்
திருவருட் கடலில் மூழ்கிச்
சிந்தையில் உன்னை வைப்பேன்.

திருவுறை மார்பா! அன்பர்
திருவுற அருளும் சீரும்
மருளினைப் போக்கும் மாண்பும்
மலரடிச் சிறப்பும் ஓர்ந்து
வருத்திடும் வினைகள் நீங்கும்
வழியினை அறிந்து போற்றித்
திருவுறு வேங்க டத்தைத்
தேடி வந்தடைந்தேன், காப்பாய்

கண்ணனே! கரிய மாலே!
கருணையின் உருவே! தேனே!
எண்ணுவார் நெஞ்சில் என்றும்
இருந்தருள் எந்தாய்! உன்னை
நண்ணினேன் தவத்தால் என்னை
நல்லருள் புரிந்து காப்பாய்
விண்ணுயர் வேங்க டத்து
வினைகள் போக்கும் வேந்தே!

கருணையின் கடலே! மாலே!
கரையிலா அருளைப் பெய்யும்
பொருவறு முகிலே! உன்னைப்
போற்றுவார் உள்ளக் கோயில்
மருவிநின் றருளுந் தேவே!
மாசறு மனத்தோர் போற்றும்
பெரும்புகழ் வேங்க டத்துப்
பெட்புற அமர்ந்த தேவே!

ஆண்டருள் என்னை நாளும்
அமைதியைக் காணு மக்கள்
மாண்டநின் கோயில் புக்கு
மலரடி போற்றி அன்பு
பூண்டுதம் குறைகள் தீர்ந்து
புனிதராய் வாழ வைப்போய்!
ஈண்டுயர் வேங்க டத்தில்
என்றுமே நின்று காப்பாய்.

நின்றுநீ அருளும் பாங்கை
நீணிலத் தடியார் என்றும்
நன்கறிந் துன்னைத் தேடி
நாடிவந் திறைஞ்சி உய்வர்
உன்மலர் அடியைப் பற்றி
உருகுமென் வினைகள் தீர்ப்பாய்
இன்னிசை வேங்க டத்தில்
இருந்தருள் இறைவா, மாலே!

ஈடிலாத் தெய்வம் எங்கும்
இலங்கிடும் தெய்வம் என்றும்
பாடியேத் துவோர்கள் உய்யப்
பழவினை போக்கும் தெய்வம்.
நாடிய அடியார்க் கெங்கும்
நல்லருள் பொழியும் தெய்வம்
தேடினல் வேஙக டத்தில
திருவுருக் காட்டும் தெய்வம்.

அச்சுதா! அமரர் ஏறே!
ஆதர வில்லா நாயேன்
பச்சிளங் குழந்தை போலப்
பனிமலர்த் தாளைச் சேர்ந்தேன்
இச்சகம் போற்ற என்னை
எடுத்தணைத் தாண்டு கொள்வாய்
நச்சிடும் வேங்க டத்தில்
நயந்துறை தேவர் கோவே!

வந்தவா றும்போ மாறும்
வரவுடன் செலவும் எண்ணேன்
சிந்தையில் உனையே கொண்டுன்
திருவடி மலரைச் சேர்ந்து
முந்தைய வினைகள் தீர்ந்து
முடிவிலா இன்பம் பெற்று
மந்திவாழ் வேங்க டத்தில்
மகிழ்ந்துறை யஅருள் வாயே!

சுழலுமென் மனத்தை வாட்டிச்
சுற்றமும் தந்தை தாயும்
குழவியும் நீயே என்று
கொண்டுனை நம்பி வந்தேன்
கழலடி காட்டி ஆள்வாய்
கவின்மிகு வேங்க டத்து
அழகனே! அருளின் ஊற்றே!
அச்சுதா! அமரர் தேவே! ★

விரதம், கலியாண சந்திர விரதம், சூலவிரதம், இடப விரதம் என்ற எட்டுவித விரதங்களும் மிகமுக்கியம் என்று நமது முன்னோர்கள் எடுத்துக காட்டியுள்ளார்கள்.

திருப்பாற்கடலை தேவர்களும் அசுரர்களும் கடையும்போது முதலில் சுரபி என்ற புனிதமான யாகக் குடமும், பிறகு ஐராவதம் என்ற வெண்ணிற யானையும், கௌஸ்தபமணி என்ற செந்நிறமான ரத்னமாலையும், உச்சைஸ்ரவஸ் என்ற வெண்ணிற குதிரையும், பாரிஜாத மரமும், அப்சஸ்ரைஸ் என்ற கன்னிககளும், வருணி என்ற மங்கையும், இறுதியாக தன்வநதிரியும் தோன றினார்கள். இதில் அடங்கிய தத்துவம் என்ன வென்றால் எட்டுவித சக்திகளுடன் "அமிர்தம்" தோன்றிற்று என்பது தான்.

ஜோதிட சாஸ்த்திரத்தில் எட்டாவது இடமாக, ஆயுள் ஸ்தானத்தைச் சொல்வதுண்டு. ஆயுள் காரகனுக சனி கிரஹத்தைச் சொல்வதுண்டு. இந்த சனிக்கு உரிய எண் எட்டு ஆகும்.

எட்டுவித அமைப்புக்களுடன் கூடிய ஒரு வகையான கணித முறை தான் "அஷ்ட வர்க்கம்" ஆகும். இந்த சோதனையை வைத்துக் கொண்டு பலன்களைச் சொல்வதுண்டு.

அங்கசாஸ்த்திரங்களைக் கற்றுணர்ந்தவர்கள் "எண் சாண்" உடம்பு என்று சொல்லுவார்கள். அதன்படி ஒவ்வொருவரது உடல் அமைப்பும் அவரவர்களது கையினல எட்டுச் சாண்கள் இருக்கும் என்பதையும் கண்கூடாகக காணலாம்.

கை, கால், முழங்கால், மார்பு, சிரம், நேத்திரம், வாய், மனது ஆகிய எட்டும் இணைந்த செயலே "அஷ்டாங்க நமஸ்காரமாகும்".

பாலிமார் மடம், அதமார் மடம், கிருஷ்ணுமார் மடம், புத்திகெ மடம், சிரூர் மடம், சோதே மடம், கரனூர்

மடம், போஜவார் மடம் போன்ற எட்டு மடங்களையும் — மாத்வர் குருவாகிய "மத்வாச்சாரியார்" ஏற்படுத்தியதாகும். அதற்குரிய பால சன்யாசிகளும் "எட்டு" தான்.

வைணவ சமயத்தினர்களால் போற்றப்படுவது "அஷ்ட பிரபந்தம்" ஆகும். இதில் எட்டுவித பாராயண வழிபாடும் அமைந்துள்ளது.

அணிமா, மகிமா, வகுமா, கரிமா, பிராத்தி, பிரகாமியம், ஈசாத்துவம், வசித்துவம் என்ற எட்டும் "அஷ்டமா சித்தி"களாகும்.

தபோ வலிமைக்கு - விசுவாமித்திர சபதம், விபரீத புத்திக்கு - மந்தாரை சபதம், கொடுமையின் காரணத்திற்கு-பாஞ்சாலி சபதம், இச்சையை பூர்த்தி செய்ய - பீஷ்ம சபதம், அகந்தையை அடக்க - துரோண சபதம், வம்சத்தை அழிக்க - சாணக்கிய சபதம், வெறுப்பை வளர்க்க - அசோக சபதம், கற்பின் மகிமைக்கு-கண்ணகி சபதம் ஆகிய "எட்டு"வித சபதங்களும் - மனித வாழ்கைக்குரிய அடிப்படை தத்துவங்கள் ஆகும்.

அருளுடைமை, இன்னாசெய்யாமை, கொல்லாமை, புலால் உண்ணாமை, கள் உண்ணாமை, கூடாவொழுக்கமின்மை, கோபம் இல்லாமை, வாய்மை—

ஆகிய "எட்டும்" நித்திய விரதங்களாகும்.

மேலும், அஷ்டதிக்கு-எட்டுஜாமம்-அஷ்டதிக் கஜம் ஆகியவைகள் எட்டின பெருமையை எடுத்துக் காட்டும்.

சரியான தீர்மானம்,
ஆனந்த அனுபவம்,
தூய்மையான குணம்,
உண்மையான முயற்சி,
அன்றாடத் தொழில் நிறைவு,
பதட்டமின்மை,
சரியான நம்பிக்கை,
நேர்மையான பேச்சு

ஆகிய எட்டு விதச் செய்கைகளும் நமது துன்பத்தைப் போக்கக்கூடியவைகளாக புத்தர் கூறியுள்ளார்.

18 புராணங்கள்,
18 நாள் யுத்தம்,
18 அட்சௌனிய சேனை,
18 அத்தியாயம்

என்று எட்டின் பெருமையை புராண காலத்து அறிஞர்கள் காட்டியுள்ளார்கள்.

108 நாமாக்கள்
108 திருத்தலங்கள்

என்று எட்டின் ஏற்றம், நமது பெரியோர்களால் நிலைநிறுத்தப் பட்டுள்ளது.

ஞான பூமியின் ஆன்மீகக் காவலர்களான பதினெட்டு பெரியார்களும் பதினெட்டுத் திருத்தலங்களை அடைந்து சித்தி பெற்று ஞான சித்தர்களாக அருள் பாலித்து வருகிறார்கள்.

"ஜார்ஜ் ஸ்மித்" என்பவர் 'பிலீவ் ஆர் நாட்' என்ற ஒரு நூலில் ஒரு அதிசயத்தை எடுத்துக் காட்டுகிறார்.

ஒரு குடும்பத்தில ஒருவர் தனது 88வது வயதில் இறந்தார்-அவரது மனைவியும் 88வது வயதில் இறந்தாள். அவர்களது மகளும் 88வது வயதில் இறந்தாள். அத்தோடு இல்லாமல் அவர்கள் மருமகளும் 88வது வயதில் இறந்தாள் என்றும் அந்த "எட்டின்" அதிசயத்தைக் காணபித்துள்ளார்.

இப்படியாக சில அதிசயங்களும் அர்த்தமுள்ள பல அரிய பெரிய விஷயங்களும் எட்டு என்ற எண்ணோடு சம்பந்தப்பட்டுள்ளது.

எட்டின் பெருமைகளை நமது பெரியோர்கள் எடுத்துக் காட்டியது எண்ணின், தன்மைகளைக் கொண்டு தான்.

ஆகவே, நாம் எட்டின் எல்லையை அறிந்து கொள்வது அவசியமாகிறது

எட்டு என்ற எண் தனித்தும், இணைந்து இருந்தும், அதன் அருமை பெருமைகளை சில அர்த்தங்களோடு பொருளோடு விளங்க வைத்துக் கொண்டிருக்கிறது.

துவாபர யுகத்தில் கண்ணன் எட்டாவது குழந்தையாக, எட்டாவது திதியான அஷ்டமியில், எட்டாவது திருவவதாரமாக அவதரித்தார் என்பதை அறிந்து கொள்ளும் போது எட்டின் பெருமையை அளவிட்டுக் கூறமுடியாத நிலை ஏற்படும்.

எட்டு என்ற எண் எட்டாத எண்ணங்களை எளிதில் புரிய வைக்கும் ஒரு அஷ்டாவதானச் செயலேயாகும்.

இறுதியாக, ஆழ்வார்கள் வரிசையில் எட்டாவது ஆழ்வாராக, "பெரியாழ்வாரை"ச் சொல்வதுண்டு. இப்பெரியாழ்வார் எட்டாவது திருவவதாரமாக அவதரித்த கண்ணனையே பாடி மங்களாசாஸனம் செய்துள்ளார் என்பதை எண்ணும் போது "எட்டு" என்ற எண் எவ்வாறு பெருமைப்படப்பட்டுள்ளது என்பதை நன்கு அறிநது இன்புறலாம்.



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

ஸ்ரீ வேங்கடேஸ்வரா நித்ய அன்னதான திட்டம்

இவ்வுலகில் ஏழைகளுக்கு உணவு இடுதலைவிட வேறு எந்தவிதமான தர்மமும் சிறந்தது இல்லை. அதிலும் திருவேங்கடவன் குடி கொண்டிருக்கும் திருமலையில் யாத்திரிகளுக்கு இலவசமாக உணவு வழங்குதல் மிகவும் அருளுடையது. இவ்வகையில் தி.தி. தேவஸ்தானம், திருமலைக்கு வரும் பக்தர்களுககு இலவசமாக "முழுச் சாப்பாடு" அளிக்கும் வகையில் "ஸ்ரீ வேங்கடேஸ்வரா நித்ய அன்னதான திட்டம்" ஒன்றினை செயற்படுத்தியுள்ளது.

திட்டம் எப்படி வேலை செய்கிறது

* தேவஸ்தானத்திற்கு ரூ. 10 இலட்சம் அல்லது அதுபோன்று பல மடங்கு நன்கொடை அளிககவேண்டும். தி.தி.தே. அத்தொகைக்கு ஈடான தன் பங்கினைச் செலுத்தும். மொத்தத்தொகைக்கு வரும் வட்டித் தொகையிலிருந்து நாள்தோறும் 400 யாத்திரிகர்களுக்கு உணவு வழங்கப்படும.
* நன்கொடைகள் யாவும் தனிமனிதர்கள், சிறு கழகங்கள், தனியார் நிறுவனங்கள் ஆகியோரிடமிருந்து பெறப்படும்.
* உணவு அருந்தும் கூடத்தில் நன்கொடையாளர்களின் பெயர் முக்கிய இடததில் வைக்கப்படும்.

பயன்களும உதவிகளும்

* வருடத்தில் மூன்று நாட்களின்போது திருமலையில் நன்கொடையாளர் தன் குடும்பததாருடன் இலவசமாகத் தங்கவும், மேலும் அவர்களுக்கு ஹாரத்தியுடன் இலவச தரிசன வசதியும் செயது தரப்படும்.
* எண் 80 (ஜி) பிரிவின்கீழ் நன்கொடையாளர்கள் வருமான வரிவிலக்குப் பெறுவாாகள.
* நாள்தோறும் நடைபெறும் இறைவனின் கொலுவு சேவையின்போது நன்கொடையாளரின் பெயரும் கோத்ரமும் வாசிக்கப்படும்.
* இத்திட்டப்பணியினை மேற்பார்வையிடும்வகையில், ஆலோசனைக்குழுவின் உறுப்பினர்களாக நன்கொடையாளர்கள் சேர்க்கப்படுவர்.

இதுவரை கீழ்வரும் நபர்கள் இத்திட்டத்திறகு நன்கொடை அளித்துள்ளனா.

1. திரு. எல். வி. ராமய்யா - சென்னை. ரூ. 10 இலட்சம்
2. திரு. மன்சிஙகா - பம்பாய். ரூ. 20 இலட்சம
3. திரு. ஆர். பி. கோயங்கா - கல்கத்தா ரூ. 10 இலட்சம்
4. திரு. ஈஸ்வர் பிரஸாத் பொத்தார் - கலகத்தா. ரூ. 10 இலட்சம
5. திரு. நாடடுபையா அம்பானி - ரிலையன்ஸ டெக்ஸ்டைல இண்டஸ்ட்ரீஸ - பம்பாய ரூ. 10 இலடசம்
6. திரு. பி. எம். கைதான — கல்கத்தா — ரூ. 10 இலட்சம.
7. திரு. ஜலான் — கலகத்தா — ரூ. 10 இலடசம்.
8. திரு. எம். ஆர். சாப்ரியா அனு நிறுவனம் எண 1 — பம்பாய் — ரூ. 10 இலட்சம்.
9. திரு. ராம்நாத் கோயங்கா — சோமேன், இந்தியன எகஸபிரஸ் பததிரிகைக குழு—சென்னை—ரூ. 10 இலட்சம.

மேலும் பல பக்தர்கள் பயன் பெற தாராளமாக உதவுங்கள்.


மேலும் தகுந்த விவரங்களுக்கு :

செயலாட்சித்தலைவர், தி. தி. தேவஸ்தானம், திருப்பதி - 517501. ஆந்திர மாநிலம்.

செயலாட்சித்தலைவர்

உலகளந்த உத்தமன்

எம்பெருமான், சம்சாரசாகரத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கும் மக்களை கரையேற்றிக் காப்பாறற வேண்டித் திருவுள்ளம் கொண்டு அர்ச்சாவதாரம எடுத்து எழுந்தருளியிருக்கும திவ்விய தேசங்கள் பல. அவற்றுள் 108 திவ்ய தேசங்களில் மிக முக்கியமானதாகவும் பஞ்ச கிருஷ்ணாரண்ய க்ஷேத்திரங்களில் முதலிடம் பெற்று விளங்கும் க்ஷேத்திரம் திருக்கோவலூர் ஆகும். இங்கு ஆயனுர் திருவிக்கிரமக் கோலத்துடன் ஸ்ரீதேவி பூதேவிகளுடன் சதுர்புஜரூபனுய் இடது கையில் சக்கரமும் வலது கையில் சங்கமும் நீண்ட நீலத் திருமேனியுடனும், திவ்விய பீதாம்பரமும், மார்பில் ஸ்ரீவத்ஸமும், கண்டத்தில் கௌஸ்தபமும், காதுகளில் மகர குண்டலமும், கமலக் கண்களும், பிரும்மலோகம் வரையில் உயரத் தூக்கிய திருவடியும், உலகை அளந்த மற்ருெரு திருவடியும், பிரும்மா, மிருகண்டு முனிவர், காலவமுனிவர், சுகசிராசாரியார், முதலாழ்வார்கள் மூவர், திருமங்கையாழ்வார் முதலியவர்கள் புடைசூழ கண் கொள்ளாக் காட்சியாகத் தரிசனம் அருளுகிருர் விமானம் ஸ்ரீகர விமானம். தீர்த்தம் கிருஷ்ண பத்ராநதி (பெண்ணையாறு) தாயாரின் திருநாமம் பூங்கோவில் தாயார். அவர் தனி சந்நதி கொண்டிருக்கிருர். ஸ்ரீ புஷ்பவல்லி சமேத தேஹளீசர் உற்சவமூர்த்தி.



முதலாழ்வார் எனப்படும் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் மூவருக்கும் ஓர் இடைக்கழியில் இங்கு பெருமாள் காட்சி கொடுத்தார். அப்போது 'வையந் தகளியா' என்று பொய்கையாரும், 'அன்பே தகளியா' என்று பூதத்தாரும், 'திருக்கண்டேன்' என்று பேயாரும் ஒவ்வொருவரும் நூறு நூறு பாசுரங்களிஞல் பரமனைப்பாடி மகிழ்ந்தார்கள். எனவே திவ்விய பிரபந்தத்தின் அவதாரத்தலமாகவும் வைணவ மதமே புத்துயிர் கொண்ட புனித இடமாகவும் இது திகழ்ந்து வருகிறது.

இங்கு க்ஷேத்திராதிபதி ஸ்ரீகிருஷ்ணன். ஸ்ரீவிஷ்ணு துர்காவும் இங்கு எம்பெருமானுக்குக் காவல் தெய்வமாக அவனருகில் குடிகொண்டுள்ளார். நல்ல வரப்ரசாதி.

மார்கண்டேயரின் தந்தை மிருகண்டு முனிவரை எல்லோரும் அறிவார்கள். பகவான் தனது திருவிக்ரமரூபத்தை மிருகண்டு முனிவருக்குக் காட்சி கொடுத்த இடம் இதுவே. அவசரக்கோலத்தில் காட்சிகொடுக்க நேரிட்டதால் வலது கையில் தரிக்க வேண்டிய சக்கரத்தை இடது கையிலும் இடது கையில் தரிக்க வேண்டிய சங்கை வலது கையிலும் தரித்து தரிசனம் அருளுகிருர். இவ்வரலாறு பாத்ம புராணத்தில் பரக்கப் பேசப்படுகிறது.

மகாபலியை அனுக்ரகம் செய்ய பகவான் திரிவிக்ரம ரூபத்தை எடுத்தார் அல்லவா? அப்போது மிருகண்டு முனிவர் வேறு இடத்தில் தவத்தில் ஆழ்ந்து இருந்தார். தவம் முடித்த பின பகவான் உலகளந்த வைபவத்தை மற்ற முனிவர்கள்மூலம் அறிந்து, அந்த அவதார காட்சியைத் தான் காண முடியவில்லையே என்று மனம் கலங்கிஞர். பிறகு ப்ரம்ம தேவன் மூலம திருவிக்ரம அவதாரத்தைக் காண ஒரு வழியைக் கண்டார். அதன்படி பெண்ணையாற்றின கரையிலுள்ள கிருஷ்ணபுரி (திருக்கோவலூர்) தலத்தை அடைந்து கடும் தவம் புரிந்தார். பிறகு யாக யக்ஞங்களை செய்து தான தருமங்களை வழங்கிஞர். அந்த சமயம் பகவான் ஒரு நாள் மிருகண்டு முனிவரின் ஆசிரமத்தின்முன் யாசகம் கேட்டு நின்ருன்.

"நான் உணவு உண்டு பல நா ஆயிற்று. உயிர் ஊசல் ஆடுகிறது உடனே உணவு அளித்து என் உ ரைக் காப்பாற்று" என்ருன் அவன்.

அகால வேளை, மிருகண்டு முனிவ மயங்கிஞர். பிறகு தெளிவு பெற்று வந்த யாசகன் பகவான் ஸ்ரீம நாராயணனே என்பதைக் கண் கொண்டார். உடனே தன் மனை யின் உதவியுடன் வந்த யாசகருக் மனம் மகிழும்படி அமுது அளித் அடிபணிந்து வணங்கிஞர். மறுகண பகவான் தன் திவ்ய தரிசனம் காட் 'முனிவரே! பல ஆண்டுகளாக ந மைக் காண கடுந்தவம் புரிந்தீர் மிக்க மகிழ்ந்தோம். உம் விருப்ப படியே இன்று உலகளந்த திருமே யைக் காட்டியருளினேம். வே என்ன கோரிக்கை?' என்ருர். 'எ போதும் உம் திருவடியின்கீழ் நா வாழ வேண்டும்.' என்ருர் முனிவர்.

திரு. ஆர். சுப்பராவ்,
திருக்கோவலூர்.

"நாம் இந்த தலத்தில் அர்ச்சா தார ரூபத்தில் ப்ரஸன்னமாகியிரு போம். முடிவில் பரம பதத்தையு அடைவீராக" என்ருர் பகவான் இதுதான் புராண வரலாறு.

இத்தலம் விழுப்புரத்திலிருந்து தி வண்ணுமலை செல்லும் ரயில் பாதை யில் 5வது ஸ்டேஷனில் உள்ளது. 4 கி. மீ. தூரம். பல்லவ மன்னர்களா இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் இக்கோயில் கட்டப்பட்டது இக்கோயில் நிர்வாகம் திரு கோவலூர் ஸ்ரீஎம்பெருமானுர் ஜீய சுவாமிகளின் பரம்பரையில் 50 ஆண்டுகளாக இருந்து வருகிறது.

கோயில் ராஜகோபும் 192 அ உயரமுள்ள பெரிய கோபுரம். சில மாயுள்ள விமானங்கள் புதுப்பிக்கு திருப்பணி துவங்கியுள்ளது. ஆஸ்தி பெரு மக்கள் பெரும் அளவி பொருள் உதவியை (திருப்பணி குழு, ஸ்ரீ திருவிக்ரம சுவாமி தேவ தானம், திருக்கோவலூர் 605757 என்ற முகவரிக்கு அளித்து ஸ்ரீதி விக்ரமனுடைய திருவருளைப் பெ வேணுமாய் பணிவுடன் அழை கிறேம்.

※

ஆடிப் பெருக்கு

திரு. என் இராமகிருஷ்ணா,
மயிலாடுதுறை

நதிகளைத் தெய்வமாகப் போற்றி வணங்குவர் தமிழ்நாட்டில். ஆடி மாதம் 18-ம் தேதி நதிகள் புது வெள்ளத்துடன் பவனிவரும். அதை தமிழ்நாட்டு மக்கள் விழாவாகக் கொண்டாடுவார்கள். வேதங்கள் நதிகளின் நீரை அமிர்தமாகவும், தேனாகவும், பாலாகவும் உருவகப் படுத்துகின்றன. காவிரி ஆற்றின் கரைகளில் உள்ளவர்கள் இப்பண்டிகையை மிகுந்த பக்தி சிரத்தையுடன் கொண்டாடுகின்றனர். மற்ற மாவட்டங்களிலும் அங்குள்ள நதிகளின் கரைகளில் இவ்விழா கொண்டாடப் படுகின்றது. ஆறுகளில் புதுவெள்ளம் வரும்போது மக்கள் அவற்றில் குளித்து விளையாடி மகிழ்வர்.

ஆடிப்பெருக்கு என்னும் பண்டிகை முற்றிலும் பெண்களாலேயே மிகுந்த ஆர்வத்துடன் கொண்டாடப்பட்டு வருகின்றன. இந்த விளையாட்டிற்கு புனலாட்டு, புனல் விளையாட்டு, நீர் விழா, நீராட்டு என்று பல பெயர்கள் உண்டு. இப்பண்டிகைப் பற்றி பண்டை இலக்கியங்களான பரிபாடல், பெருங்கதை முதலியன கூறுகின்றன.

இப்பண்டிகையைப் பற்றிய ஐதிகம் என்னவென்றால் ஆடித்திங்களில் காவிரி அன்னை கர்ப்பம் தரிக்கின்றாள். 18-ம் தேதி அன்று அது மேலும் வளர்ச்சி அடைகின்றது. கற்பிணிக்கு ஏற்படும் மசக்கை என்ற ஆசை காவிரிக்கும் ஏற்படுகின்றது. புளியஞ்சாதம், தேங்காய் சாதம், பொங்கல் போன்ற சித்தி ரான்னங்கள் அவளுடைய மசக்கைப் பொருள்கள். இதையறிந்த அவளுடைய பெண்கள் 18-ம் தேதி அன்று அதைப் பண்டிகையாகக் கொண்டாடுகின்றார்கள்.

இப்பண்டிகையின்போது சிறுவர்கள் தேர்சப்பரம் கட்டி மகிழ்வார்கள. மரத்தாலும் அட்டையாலும் செய்யப்படும் இச்சிறுதேரினைக் குழந்தைகள் புத்தாடை அணிந்து காவிரிக் கரைக்கு இழுத்துச் செல்வார்கள். ஆண்கள் புதுவெள்ளத்தில் குதித்து நீந்தி மகிழ்வார்கள். படகு, பரிசல் முதலியன ஓட்டுவார்கள்.

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் இவ்விழாபற்றிப் பாடியுள்ளார். குடகில் பிறந்த காவேரி பல நாடுகள் வழியாகப் பாய்ந்து தஞ்சை மாவட்டத்தில் கடலில் கலக்கின்றாள். உழவர்கள் இவளைத் தெய்வமாகக் கொண்டாடுகின்றனர். அவர்கள் ஈர உடையுடன் ஆற்றில் குளித்துவிட்டுத் தட்டில் மஞ்சள் குங்குமம் ஏந்தி தேங்காய் உடைத்துக் காவிரிக்குத் திருஷ்டி கழிப்பார்கள். கிராமங்களில் இவ்விழாவின் முழுப் பொலிவினைக் காணலாம்.

காவிரியாற்றின் வரலாற்றைச் சற்றுச் சிந்திக்கலாம். குடகிலே அவள் பிறந்தாள். அகத்திய முனிவரின் கமண்டலத்திலிருந்து உற்பத்தியானதாக புராணம் கூறும். குறிஞ்சி நாட்டு மலைகளில் ஆடியும் துள்ளியும் வருகின்றாள். காடுகளின் வழியாகவும் மரங்களின் இடையிலும் நடனமாடி வருகின்றாள். அவள் வளைந்து வளைந்து செல்வது ஒரு பெண் நாணியும் கோணியும் நடப்பது போல் உளது. பின்பு பல ஊர்கள் வழியாக பாய்ந்து மேட்டூர் வருகின்றாள். அதற்கு முன்பு மைசூரில் மிகவும் பொலிவுடன் விளங்குகிறாள்.

தெய்வத்தின் நீர்மை

நீரைத் தெய்வமாகப் போற்றுகிறோம். வள்ளுவரும் வான்சிறப்புப் பாடி நீருக்கு ஏற்றம் தருகிறார். நீரைத் தெய்வமாக்கித் தெய்வத்தை நீராக்கித் தெய்வத்தின் நீர்மையைப் பொருட் சிலேடையாக்கி நயம் பட உரைக்கின்றார் புலவர் கீரன்.

தண்ணீர் மேலிருந்து கீழே இறங்கி வருகிறது. அவதாரம் என்ற சொல்லே கீழ் இறங்கி வருவதைத்தான் குறிக்கிறது. தண்ணீருக்கும் நிறம், மணம், குணம் கிடையாது. அதேபோல் அருவமான ஆண்டவனும் நிறம், மணம், குணம் பெற்றிருக்கவில்லை. நீரில் எந்த நிறத்தைக் கலக்கிறோமோ அதே நிறத்தை அது பெறுகிறது. இறைவனும் தான் எடுக்கும் அவதாரத்துக்கு ஏற்ப நிறம் காட்டுகிறான். உணவுப் பொருள்களை உற்பத்தி செய்ய உதவும் நீர் தானே உணவாவது போல இறைவன் பக்தியின் விளைநிலமாகவும் பக்தி பொருளாகவும் ஆகிறான். நீர் மொள்ளும் பாத்திரத்தின் அளவுக்கே நிறைவதுபோல இறைவனும் பக்தியின் அளவுக்கே பலன் தருகிறான். நீருக்கு ஏழை பணக்காரன், உயர்ந்தவன் தாழ்ந்தவன், ஆண், பெண் என்ற பேதம் கிடையாது. ஆண்டவனுக்கு இந்த பேதங்கள் உண்டோ? என்று கேட்டால் கிடையாது என்பது கண்கூடு.

நன்றி : குலமுரசு.

தகவல் : தேனி முருகேசன்.

திசை மாறிய கோபம்!

இராவண வதத்தால் தனக்கு நேர்ந்த தோஷத்தை அகற்றும் பொருட்டு இராமபிரான் இராமேசுவரத்தில் சிவபூஜை புரிய விரும்பி அனுமனைக் காசிக்குச் சென்று சிவலிங்கம் கொண்டுவருமாறு அனுப்பினார். காசியை அடைந்ததும் அனுமன் அங்கு நகர் முழுவதும் சிவலிங்கங்கள் பரவிக்கிடப்பதைக் கண்டு பிரமிப்பில் ஆழ்ந்தார். அவற்றுள் சுயம்புலிங்கம் எது என்று அறியாமல் அனைத்து திசைகளிலும் அலைந்து திரிந்தார். அப்போது ஒரு குறிப்பிட்ட சிவலிங்கத்தின் மீது வானத்தில் கருடன் வட்டமிடுவதைக் கண்டு வியந்தார். அப்போது பல்லி ஒன்று அங்குப் படபடவென குரல் எழுப்பி செய்தி கூறுவதையும்கேட்டு சிந்தை மகிழ்ந்தார். அவ்விரு குறிப்புகளின் துணைகொண்டு அதுவே சுயம்புலிங்கம் என்று சந்தேகமில்லாமல் அறிந்தார். எனவே அக்கணமே அதைப் பெயர்ந்து எடுத்து தன் இரு கரங்களில் ஏந்திக் கொண்டு புறப்பட்டார். அப்போது காசி நகரின் காவல் தெய்வம் காலபைரவர் அனுமனை வழிமறித்து ஆவேசத்துடன் பாய்ந்தார். 'என் அனுமதி இல்லாமல் எப்படி நகருக்குள் நுழைந்தாய். உன்னை ஒழித்து விடுகிறேன், பார்!' என்று மார்தட்டிப் போர் தொடுத்தார். போர் தொடர்ந்தது. தேவர்கள் செய்தி அறிந்து அங்கு விரைந்து வந்தார்கள். காலபைரவரை அணுகி அனுமன் சிவலிங்கம் அகற்றி செல்வதற்குக் காரணம் ராம கைங்கர்யமே என்பதை விளக்கினார்கள். போர் நின்றது. சிவலிங்கம் கொண்டு செல்ல அனுமனுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. அனுமனும் புறப்பட்டுச் சென்றார். ஆனால் காலபைரவர் கோபம் திசை மாறியது. சிறிய திருவடி மீது எழுந்த கோபம் பெரிய திருவடியின் மீது பாய்ந்தது! அனுமனுக்கு துணை நின்ற கருடனுக்கு 'காசி நகர் எல்லைக்குள் நீ என் கண்ணில் விழக்கூடாது' என்றும் பல்லிக்கு "உன் சொல் சற்றும் என் காதில் விழக்கூடாது". என்றும் சாபம் இட்டு தாபம் தணிந்தார்.

இன்றும் அங்கு கருடன் பறப்பதில்லை! பல்லி ஒலிப்பதில்லை!

திரு. ஆர். சுப்பராவ்—திருக்கோவலூர்.

அங்குதான் பிரம்மாண்டமான முதல் அணை கண்ணம்பாடியில் கட்டியுள்ளார்கள். இதற்கு கிருஷ்ண ராஜ சாகரம் எனப் பெயர். அங்குக் காவிரிக்கு ஒரு கோவில் கட்டிச் சிலை வடித்துள்ளார்கள். பின்பு மேட்டூரில் மீண்டும் அவளுக்கு அணை போடப்படுகின்றது. இங்கிருந்து சோர்ந்து தேய்ந்து வருகிறாள். திருச்சியில் அகண்ட காவேரியாகக் காட்சி அளிக்கின்றாள். குறிஞ்சியின் இளமை முல்லையில் பெண்மையாகி மருதத்தில் தாய்மை அடைந்து நெய்தத்தில் முடிவு பெறுகின்றது. ஒவ்வொரு வருடமும் இம்மாதிரியே காவிரிப் பெண் பாய்ந்தோடி வருகின்றாள். சிரஞ்சீவிப் பெண்ணான காவேரிக்கு எல்லா மாதங்களிலும் சிறப்போடு பூஜை நடைபெறுகின்றது.கால மழை சரியாகப் பெய்தால் தமிழகத்தின் எல்லா ஆறுகளிலுமே ஆடிமாதத்தில் வெள்ளப் பெருக்கு உண்டாகும்.சேலம் மாவட்டம், பெரியார் மாவட்டம், திருச்சி மாவட்டம் முடிவாக தஞ்சை மாவட்டம் ஆகிய இடங்களில் காவேரிக்கரையில் உள்ள ஊர்களில் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. மலையும் காடும் கலந்து காணும் ஒக்கேனகல் நீர்வீழ்ச்சியிலும் சரி,மேட்டூர் அணைத் தேக்கத்திலும் சரி, திருச்சியிலும் சரி, அகண்ட காவேரியாகத் திகழ்கின்றாள். பின்பு தஞ்சையில் சிறுசிறு வாய்க்கால்களாகப் பிரிந்து செல்கின்றாள். சங்கமமாகும் புகார் பகுதியிலும் ஆடிப்பதினெட்டில் ஆடிப் பெருக்கு விழா அதன் சீரையும் சிறப்பையும் பெற்று பொலிவுடன் திகழ்கின்றது.

சிறுவர்கள் பொங்கி வரும் ஆற்றில் முளைப் பாலிகைகளை வீசி எறிவார்கள். விளைச்சல் அதிகமாக வெள்ளம் வந்து பயிர்கள் அழிந்து விடாமல் இருக்க வேண்டுவார்கள். பெண்கள் மஞ்சள் குங்குமம் தட்டில் ஏந்தி வெற்றிலையும் உடைத்த தேங்காயும் ஒளிக்கலவையூட்ட காவிரி பெண்ணுக்கு திருஷ்டிகளிக்க வரும் சுமங்கலிப் பெண்கள் எல்லோருமே இவ்விழாவை உயிர் உள்ளதாக ஆக்குகின்றனர்.

மைசூர் பிருந்தாவனத்திலும், மேட்டூர் தேக்கம் பூங்காக்களிலும் தேங்கியுள்ள இந்த நீர், பீச்சும் குழாய்கள் மூலம் வெளியேறுவது கண் கொள்ளாக்காட்சியாக இருக்கும். இரவில் வண்ண வண்ண விளக்குகளால் அலங்கரிப்பார்கள். மேட்டூரில் பூங்காவின் நுழைவாயில் முனியப்பனுக்கு ஆடிப் பெருக்கின்போது திருவிழாவும் படையலும் நடைபெறும். அணையைக் காக்கும் காவல் தெய்வமாக இவனைக் கருதுகின்றனர். வெள்ளையர் காலத்தில் இம்முனியாண்டியை அப்புறப்படுத்த முயன்றனர் என்றும், அவர்களால் முடியவில்லை என்றும் சொல்லுகின்றனர்.

"உழவர் ஓதை மத கோதை
உடை நீரோதை தண்பதங்கொள்
விழவரோதை சிறந்தார்ப்ப
நடந்தாய் வாழி காவேரி"

என்று இளங்கோவடிகள் புகழ்ந்து பாடியுள்ள காவேரியை ஆடிப் பெருக்கின்போது வாழ்த்தி வணங்குவோமாக.

*

வைணவ வினா - விடை

வித்வான் ஸ்ரீ. உ. வே. நஞ்சை என். எஸ். தாதாசாரியார்.

திருமால் ஆலயங்களில் உள்ள நாச்சியார்கள் வெளியில் திருவிழாகாண மாட்டார்கள். சிவத தலங்களில் உள்ள பஞ்சமூர்த்திகள் புறப்பாடு இங்குக் கிடையாது.

பஞ்ச பாவ புறப்பாடுகள் உண்டு. திருமால ஆலயங்களில, கருவறைக்கு முன்பும், வெளி மணட பங்களிலும, சிற்சில இடங்களில் தனித் தனியாக துவார பாலகர்கள் உணடு. இவாகள ஸ்ரீவைகுண டத்தில் உள்ள நித்ய ஸூரிகளானபடியால, இவர் கள் திருக்கைகளில் சங்கு சக்கரத்துடனும் இருப்பார் கள். நகர, கோபுர, கருவறைகளின் துவார பாலகர் கள பல திருப்பெயர்களுடன், பலவிதமான முத் திரைகளுடன் இருப்பார்கள். இவர்களில், 'ஜய—விஜயர்' என்ற துவார பாலகாகள் முககியமானவர் கள். விமானததின் கீழே அதன் ரக்ஷகர்களாக விஷ்வக்ஸேனர் துர்க்கை என்பவர்கள் அமாநதிருப்பா கள். கருவறை விமானச சுற்றுக்குத் 'திருவுண்ணாழி' எனப்பெயா. பொதுவாக, இரவு கடைசிப் பூஜை யான அர்த்த ஜாமம் ஆனபின், பீங் முத்திரையிட்ட பின், திருமால் ஆலயங்களுக்குள் மனிதாகள் தங்கு வது படுத்திருப்பது கூடாது என்ற பழக்கமும் உணடு. ஸ்ரீ வைணவர்களே உபயவேதாநதிகள் எனவும பரமைகாந்திகள் எனவும் கூறுவதுணடு. இவா களுக்குத தமிழிலும் சம்ஸ்கிருதத்திலும் ஏற்றத்தாழ் வறற, சரி நிகரான மதிப்புண்டு. அதனால் ஆலயங் களில் கையாளும் சொற்கள தூய தமிழ்ச் சொற் களாகவே இருக்கும். ஸ்ரீ வைணவர்கள் எம்பெரு மான் பற்றிக் கையாளும் பரிபாஷை என்ற மரபுச் சொற்கள் யாவும் தமிழிலேதான் இருக்கும்—எழுந தருளுவது, கண்டருளப் பண்ணுவது, சிறிய திருவடி, பெரிய திருவடி, எம்பெருமான், பெருமாள், நீராடல், திருப்பரிவட்டம என்பன போன்ற பல மரபுச் சொற் கள் உணடு.

வேதஙகளில் கி.மு. 1500 முதல் 600 வரை, அக் கினி, இந்திரன், வருணன் என்ற தேவர்கள் திரு மாலோடு ஒக்கப் பேசப்பட்டாலும், ப்ராம்மணோப நிஷத காலத்தில் திருமாலே எல்லாத் தேவர்களிலும் மேம்பட்டவர் எனக் கூறப்பட்டுள்ளது எனபர்.

இந்த உபநிஷத் வாமனாவதாரத்திற்குச் சிறப்பை அதிகம் தரும். ஏனைய உபநிஷதங்களிலும் இந்த அவதாரத்தை த்ரிவிக்ரமன் எனப்புகழும.

ஸ்ரீ விஷ்ணு ஸூக்தம த்ரிவிக்ரமனை 'ப்ரவிஷ்ணு ரஸ்து, தவஸஸ்தவீயான்' என்கிறது. ஆண்டாளும் இவரை "உத்தன்" என்றாள். உத்தமனே பரமாதமா எனக் கீதை கூறியது. "உத்தம: புருஷஸஸ்த்வன்ய: பரமாத்மேத்யு தாஹ்ருத: என்பது கீதை. திருக்குற ளும் "உலகளந்தான்" என த்ரிவிக்ரமனைக் கூறிற்று.

கி. பி. 100ல் வ்யாபக மந்த்ரங்களாய, திரு வஷ்டாக்ஷரம், துவாதசாக்ஷரம், ஷடக்ஷரம் என்ற ஜபிக்கும் மந்திரமாய் புகழ்பெற்று நாராயணன், வாஸுதேவன், விஷ்ணு என்ற மந்திரங்களின் சிறப்பு ஓங்கி நின்றது.

பகவத் கீதை கிருஷ்ணனே வாஸுதேவன் எனக் கூறும். 'க்ருஷி: பூவாசகச்சப்த: ணச்ச நிர்வ்ருதி வாசக': என்ற செய்யுள்படிககு பூமியில் எல்லாவிதமான நிம்மதியைத் தருபவன் என கிருஷ்ண சபதத்துக்குப் பொருள். மறறும கிருஷ்ண சப்தத்துக்குக் கருநிறமுள்ளவர், எல்லா உள்ளங் களையும் கவருபவர் எனவும் பொருள். வாஸு தேவன் என்றால் வஸதீதி—வாஸு: தீபயதே—இதி தேவ:=என்ற பகுபத இலக்கணபபடிக்கு எங்கும் இருப்பவன். ஆனால் எங்கிருந்தாலும அக்னிபோல் சுத்தமானவர் எனப் பொருள். அக்னி மிகவும் தூய்மை பெற்றது என்பதைப் பாவ மான்யம் என்ற வேதப் பகுதி, 'ஜாதவேத: பவித்ரவத்' என்றது. வஸுதேவருடைய மைந்தன வாஸுதேவன் எனவும் பொருள் உண்டு.

பாவமான்யம் கூறும் தமிழ் நூல்கள், வாமனாவ தாரததை "நெடுமால்," "திருமாலவன்" என அழைதது மிகவும் போற்றும். இந்த அவதாரத்தில் தான துஷ்டனுக்கும், நிக்ரஹமற்ற அருள் தந்தது. கமபரும் இராமாவதாரத்தில இந்த வாமனாவதா ரத்தைச் சிறப்புடன் பேசும் வகையில், வேள்விப் படலத்தில், "முபபுரி நூலினன், முஞ்சியன, விஞ்சை கறபதோர, நர்வன், அனல்படுகையன்" என வருணித் தார்.

மற்றும் கி. மு. 185 முதல் 72 வரை, சங்க காலத்துக் கல்வெட்டுகளிலிருந்து நம் தமிழ் நாட் டில், "வாசு தேவன்" என்ற திருமாலுக்குக் கோட் டம் என்ற பெயரில் ஆலயங்கள் கட்டினார்கள் என வும் தெரியவரும்.

(தொடரும்)

EDITED AND PUBLISHED ON BEHALF OF THE T. T. DEVASTHANAMS BY K. SUBBA RAO, M.A. AND PRINTED AT T. T. D. PRESS BY M. VIJAYAKUMAR REDDY MANAGER, T. T. D. PRESS, TIRUPATI-517501.



ஸ்ரீ வேங்கடேஸ்வரசுவாமி கோயில், திருமலை
வருடாந்திர பிரம்மோற்சவம்



3-10-86 முதல் 12-10-86 வரை

தேதி	கிழமை	பகல் உற்சவங்கள	இரவு உற்சவங்கள்
3-10-86	வெள்ளி	---	சேனாதிபதி உற்சவம், அங்குரார்ப்பணம்
4-10-86	சனி	துவஜாரோஹணம், திருச்சி உறசவம்	பெரிய சேஷவாகனம்
5-10-86	ஞாயிறு	சிறிய சேஷ வாகனம்	ஹம்ஸ வாகனம்
6-10-86	திங்கள்	சிம்ஹ வாகனம்	முத்துப்பந்தல் வாகனம்
7-10-86	செவ்வாய்	கல்பவிருக்ஷ வாகனம்	ஸர்வபூபால வாகனம்
8-10-86	புதன்	பல்லக்கில் மோகினி அவதாரம்	கருடோத்சவம்
9-10-86	வியாழன்	ஹனுமந்த வாகனம் (மாலையில் வசந்தோத்சவம்)	கஜவாகனம
10-10-86	வெள்ளி	சூர்ய ப்ரபை	சந்திரப்ரபை
11-10-86	சனி	ரதோத்சவம்	ஹஸ்வ வாகனம்
12-10-86	ஞாயிறு	தீர்த்தவாரி அவப்பிரதோற்சவம்	துவஜாவரோஹணம்